விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
R A M C O

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 14 ஞாயிற்றுக்கிழமை (27.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 039

## ஜெனிவாவில் இலங்கைக்கு அழுத்தம் தர

# டில்லி விரைகிறது டெசோ குழு

(டில்லி)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரின்போது இலங்கை அரசு மீது ஐ.நா தீவிர அழுத்தம் தர வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்ராலின் தலைமையிலான டெசோ குழு இன்று டில்லி விரைகிறது. டில்லியில் இவர்கள் ஐ.நாவின் 47 உறுப்பு நாடுகளின் தூதர்களையும் சந்தித்து தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவுள்ளனர்.

இது தொடர்பில் டெசோ அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பதற்காக ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு கடந்த ஆண்டு 8-ம் மாதம் 12-ம் திகதி டெசோ மாநாடு சென்னையில் நடைபெற்றது. அதில் ஈழத் தமிழர் நல்வாழ்விற்காக எடுக்கவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து 14 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இந்த தீர்மானங்களை தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் ஐ.நா சபை துணைப் பொதுச் செயலாளர் யான் லியா சன், ஜெனிவா மனித வுரிமை ஆணையத்தலைவர் நவநீதம்பிள்ளை ஆகியோரிடம் கோரிக்கை மனு அளித்து வலியுறுத்தினார். (23ஆம் பக்கம் பார்க்க)

## நிலக்கண்ணி வெடிப்பில் இளைஞன் மரணம்

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் காட்டுப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 24-ம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது என பாதுகாப்புத் தரப்பு தெரிவிக்கின்றது.

மேற்படி பகுதியில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாதுள்ளமையால் குறித்த இளைஞனின் சடலத்தை மீட்க முடியாதுள்ளது எனவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த வியாழக்கிழமை மூன்று இளைஞர்கள் குறித்த பகுதிக்கு இரும்பு சேகரிப்பதற்காக சென்றுள்ளனர். இதன் போதே நிலக்கண்ணி ஒன்று வெடித்துள்ளது.

இதனால் மேற்படி மூன்று இளைஞர்களில் ஒருவரான செல்வம் தவசீலன் (வயது 24) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் அவரின் சடலத்தை அங்கே விட்டு (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விடயத்தில் இந்தியா சந்தேகமாகவே செயல்படுகிறது

### கலைஞர் கருணாநிதி கவலை

நடுநிலை நாடுகளில் ஒன்று இந்தியா என்ற பெயரைத் தக்க வைத்து கொள்வதற்காக இலங்கை விடயத்தில் விட்டுக்கொடுத்துப் போகிறதோ என்று சிலர் சந்தேகம் கொள்ளக் கூடிய அளவில்தான் இந்திய அரசு செயல்படுகிறது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

தி. மு.க தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஈழத் தமிழர்களின் வேதனைகள் தீர்ந்தபாடில்லை. அவை தொடர்ந்து துன்பத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. நமது பல்வேறு கோரிக்கைகளுக்கு இந்திய அரசு உதவிட முன்வருவதாக உறுதி கூறியபோதிலும், நடுநிலை நாடுகளில் ஒன்று இந்தியா என்ற பெயரைத் தக்க வைத்துக் கொள்வதற்காக,

சில (23ஆம் பக்கம் பார்க்க)



## அமெரிக்க தூதுக்குழு கூட்டமைப்புடன் சந்திப்பு

### அனைத்தையும் விளக்கினோம்-சம்பந்தன்

கொழும்பு வந்த அமெரிக்க அரசாங்கத்தின் உயர் மட்டக் குழுவிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழுவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்று சனிக்கிழமை நண்பகல் அமெரிக்க தூதராலயத்தில் மதிய உணவு விருந்துடன் நடைபெற்ற இச்சந்திப்பு 1 மணியிலிருந்து 2.40 மணிவரை நீடித்தது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கூட்டமைப்பு தூதுக்குழுவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தன் தலைமை வகித்தார். அமெரிக்காவின் உயர் மட்டக்குழு தனது இலங்கைப் பயணத்தின் போது முதலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவை சந்தித்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் தான் ஏனையவர்களுடான சந்திப்பு ஏற்பாடு செய்யப் பட்டுள் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த இந்தியா செல்லவுள்ளார்

(கொழும்பு)

வழிபாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளார். அடுத்த மாதம் எட்டாம் திகதி இவரது விஜயம் அமையுமென்று இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஐ.ஏ.என்.எஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

புத்தகாயாவில் உள்ள மகாபோதி ஆலயத்தில் இலங்கையின் அமைதி மற்றும் அபிவிருத்திக்காக வழிபாடு நடத்தவே மஹிந்த ராஜபக்ஷ புத்தகாயா வரவுள்ளதாக இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது, பீகார் மாநில முதல்வர் நித்தீஸ்குமாரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

கடந்த ஆண்டு மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள சாஞ்சியில் பௌத்த பல்கலைக் கழகத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்தவுக்கு தமிழ் நாட்டில் இருந்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டது. இதனால் பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே இவர் சாஞ்சி சென்று திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-1)

## மகிந்த இந்தியா வந்தால் மன்மோகனின் வீடு முற்றுகை - வைகோ

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்தால் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வீட்டை முற்றுகையிட வேண்டும் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கருத்து வெளியிட்டுள்ளார்.

நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் ம.தி.மு.க சார்பில் மொழிப்போர் தியாகிகள் நினைவுநாள் பொதுக்கூட்டம் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மொழிப்போர் தியாகிகளின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்திவிட்டு அவர் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

மத்திய அரசு இலங்கைக்கு ஆயுதங்களை அனுப்பி தமிழர்களை கொன்று குவித்து வருகிறது. கொலைக் குற்றவாளியான இலங்கை அரசை குற்றம்சாட்டுவதுபோல் மத்திய அரசும், அதில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கூட்டணி (23ஆம் பக்கம் பார்க்க)

## குளத்தில் மூழ்கி இளைஞன் பலி

(முல்லைத்தீவு)

தாமரைக்குளத்தில் மீன்பிடிப்பதற்காக தந்தையுடன் சென்ற இளைஞன் குளத்தில் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இப்பரிதாபகரச் சம்பவம் நேற்று பி.ப. 5.30 மணியளவில் முல்லைத்தீவு சிலாவத்தை தாமரைக்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கினைச் சேர்ந்த செல்வராசா ஜெசிந்தன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப இளைஞரும் அவரது தகப்பனாரும் குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடித்து ஒருதொகை மீன்கள் சேர்ந்த பின்னர் அதனை சந்தைக்கு (23ஆம் பக்கம் பார்க்க)

## நாளை அமைச்சரவையில் மாற்றம்

### புதியவர்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

பல மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு வரும் அமைச்சரவை மாற்றம், நாளை திங்கட்கிழமை இடம்பெறுமெனவும் இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று எடுக்கப்படும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் போது 8 துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரத்துறை, விளையாட்டு, தொழிற் சங்கம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சுக்கள் இதன்போது விசேட கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த காலங்களில் மிகவும் சர்ச்சைகளுக்கு உட்பட்ட அமைச்சுக்களையும் மாற்றத்துக்கு உட்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், அமைச்சரவைக்குள் மேலும் இரு புதிய துறைகளை உள்ளடக்க வாய்ப்பு உள்ளது என்றும் புதியவர்களுக்கு நியமனம் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவி எரிந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவியொருவர் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற போதிலும், பிற்பகல் வேளையிலேயே பிரஸ்தாப மாணவி உயிரிழந்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தில் கல்வி பயிலும்2-ம் வருட மாணவியான எஸ்.துளசிகா (வயது-22) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை யாழ்.புகையிரத நிலைய வீதியிலுள்ள (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலட்சார்சனை பூர்த்தியும் திருமஞ்ச பவனி நிகழ்வும்

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் இலட்சார்சனை பூர்த்தியும், திருமஞ்ச பவனி நிகழ்வும் தைப்பூச திருநாள். இலட்சார்சனை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதுடன் காலை 10 மணிக்கு சபா மண்டபத்தில் திருமதி கோகிலத்வனி விஜயராகவனின் வீணைக்கச்சேரி நிகழ்வும் காலை 11 மணிக்கு பிருத்தகானலய அறநெறி பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்வுகளும் இவ் அறநெறிப் பாடசாலைக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அடியார்களை வருகை தந்து திருவனந்தல், ஸ்நாபனாபிஷேகம், காலை சந்திப்பூசை, இலட்சார்ச்சனை, மகேஸ்வரப் பூசை என்பன இடம்பெறவுள்ளதால் வருகைதந்து இறையருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ-3,15)


## சமையலாளர்கள் தேவை

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

பிருந்தாவன் விருந்தினர் விடுதி

நீதிராசா வீதி,

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

T.P.: 0772367848

(சி-2256)



## காணி விற்பனைக்கு

சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டை தெற்கில் 5 3/4 (ஐந்தேமுக்கால்) பரப்பு வெறுங் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:0787835864

(1573)





## அதிபர், ஆசிரியர்களுக்கான செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் 50 மாணவர்களுக்கு குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் அதிபர்கள் தங்கள் பாடசாலையில் கடமையாற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுடன் குறித்த நேரத்திற்கு முன் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அதிபர்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (செ-3-15)

## ஒஸ்மானியா கல்லூரிக்கு இரண்டு மாடிக் கட்டிடம்

12 மில்லியன் ரூபாய் செலவில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டிடம் அமைக்கப்படவுள்ளது.

இந்தக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் சட்டத்தரணி ரமீஸ் இந்தக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் இந்தக் கட்டிடம் அமைப்பதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். (செ-6)

## தைப்பூச ஆராதனை

பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலய தைப்பூச அபிஷேக ஆராதனை திருநாள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (செ-3,30)

## ஆலயப் புனரமைப்பு இன்று ஆரம்பம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரப் பெருமானின் ஆலயப் புனரமைப்புப் பணிகள் தைப்பூசத் தினமாகிய இன்று காலை 8 மணி முதல் 9 மணி வரையுள்ள சுபநேரத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது. (ந)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு உதரான்பதி சிந்தாமணி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.40 தொடக்கம் 8.32 மணிவரை இடம்பெறும் இக்கும்பாபிஷேகத்திற்கான கிரிகைகள் கடந்த 23ஆம் திகதி புதன் கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. (செ)


## union assurance — வேலை வாய்ப்பு

Trust in your tomorrow, today.

யூனியன் அஷ்யூரன்ஸ் என்பது இலங்கையின் மாபெரும் கூட்டு நிறுவனமாகிய ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் நிதி வலிமை, உறுதிப்பாடு என்பவற்றைப் பக்கபலமாகக் கொண்ட ஒரு முன்னணி நிறுவனமாகும். 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட எமது நிறுவனம் நாணயம், நிபுணத்துவம் என்பவற்றால் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் இதயங்களைக் கவர்ந்துள்ளது. நேர்மையும் வெளிப்படையுமான செயற்பாட்டிற்காக நாம் பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளோம். இன்று இலங்கையின் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் தனது நம்பிக்கை வாய்ந்த அலுவலர்கள் அணியில் இணைந்து கொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.




ஆயுள் காப்புறுதி துறையில் பதவி வாய்ப்புக்களை எதிர்பார்த்துநிற்கும் இளைஞர், யுவதிகளுக்கு!!!

- பட்டதாரிகளுக்கு:-அடிப்படைச் சம்பளம் ரூபா 23,100/ இல் இருந்து
- திறமைக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளம் ரூபா 15,000/ இல் இருந்து
- உழைப்பிற்கேற்ற ஊதியம்
- வளமான எதிர்காலம்
- வசதியான வாழ்க்கை

யாவற்றையும் ஒரே இடத்தில் அமைத்துக் கொள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் நடத்தும் நேர்முகத் தேர்விற்கு தங்களை வரவேற்கின்றோம்.

பதவிகள்
1. காப்புறுதி ஆலோசகர்
2. தனிப்பட்ட நிதி ஆலோசகர்
3. தனிப்பட்ட நிதி முகாமையாளர்

### அடிப்படைத் தகைமைகள்

1. க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி
2. உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
3. விளையாட்டுத்துறையில் திறமையுள்ளவர்கள்
4. உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
5. திடசித்தம்
6. காப்புறுதி துறையில் முன்னனுபவம், மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு: ஏற்கனவே வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ஏன் தயக்கம்:- தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுய விபரக் கோவையுடன்

காலம்:- 29.01.2013 (செவ்வாய்க்கிழமை)

நேரம்:- மு.ப.9.30 மணி

இடம்:- யூனியன் அஷ்யூரன்ஸ்
357/1, பிரதான வீதி, பருத்தித்துறை.
(வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில்)

(1588)

B. ஞானச்செல்வம், அலகு அபிவிருத்தி முகாமையாளர் (UDM)
யூனியன் அஷ்யூரன்ஸ், பருத்தித்துறை.


## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா 1913-2013

யாழ்.மண்ணில் சாதிமத பேதமற்ற சமரசசன்மார்க்க இலட்சியத்துடன் கல்வியை கடந்த நூறு ஆண்டுகளாக சமூகத்திற்கு அள்ளித்தந்த கற்பக தருவாயும், கற்பதற்குரிய ஆர்வமிருந்தும், வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட குழந்தைகளைக் கல்விமான்களாகவும், மேன்மைமிக்கவர்களாகவும் மாற்றி வந்த ஞான விருட்சமாகிய எமது கல்லூரி, முன்பு வித்தியாலயமாக இருந்து இன்று கல்லூரியாகி பல்வேறு வகையில் பரிணாம வளர்ச்சியைக் கண்டு, இவ்வருடம் நூறு ஆண்டு நிறைவு விழாவை எட்டியுள்ளதால் இதனை நாம் சிறப்பாக கொண்டாட எண்ணியுள்ளோம்.

இதன் நிமிர்த்தம் இக் கல்லூரியின்...

- முன்னாள் அதிபர்கள்
- முன்னாள் ஆசிரியர்கள்
- பழைய மாணவர்கள்
- நலன் விரும்பிகள்

அனைவரும் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை 31.01.2013 இற்குள் வழங்கிஉதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு:

1. திரு. மு.மகேந்திரன் (அதிபர்) யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
2. மின்னஞ்சல் முகவரி:Vaidyeshwaracollege@gmail.com
3. தொலைபேசி இலக்கம்: 021 222 3322

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

(சி-2253)

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் மாதம், 2013ஆம் ஆண்டு 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் எல்லோரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். விலாசங்கள் மாறி இருப்பவர்கள் தயவுசெய்து எங்களுடன் தொடர்பு கொள்ளவும். அழைப்புக்கிடைக்காதவர்கள் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(1586)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படாத மாணவன் குறித்து விசாரணை தொடர்கின்றது

## மனிதவுரிமை ஆணைக்குழு

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு எனக் கூறப்பட்டு வெலிகந்தை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு மாணவரின் விசாரணைகள் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது என மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

மாணவர்களின் விடுதலையினை அடுத்தே மனிதவுரிமை ஆணைக்குழுவின் விசாரணை முடிபுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கடந்த வருடம் கார்த்திகை 27 ஆம் திகதி யாழ்.பல்கலையில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையினை அடுத்து மாணவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் நால்வர் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்விற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நால்வரில் இரு மாணவர்களின் பெற்றோர்கள் தமது மகன்கள் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறையிட்டிருந்தனர்.

அவ்வாறு முறையிடப்பட்ட இருவரில் சண்முகம் சொலமன் என்ற மாணவன் கடந்த செவ்வாயன்று விடுவிக்கப்பட்ட நிலையில் அவரது விசாரணை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும் மற்றைய முறைப்பாடான பரமலிங்கம் தர்ஷானந்த் என்ற மாணவன் விடுதலை செய்யப்படாத காரணத்தினால் அம்மாணவன் தொடர்பான 'விசாரணை தொடர்கின்றன என இணைப்பாளர் தெரிவித்தார். (அ-4)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இந்நிர்வாக சபைத் தெரிவானது பரிபாலனசபை, தொண்டர்சபை ஆகிய இரு தெரிவாக நடைபெற்றது.

பரிபாலன தலைவராக கலக்விஸ்வநாதன், உபதலைவர்களாக சி.ஸ்ரீஜீவா, சு.மகாராஜன், செயலாளராக ந.புஷ்பகுமார், உபசெயலாளராக கு.பிரசன்னா, பொருளாளராக கௌரீதரன் ஆகியோரும் மேலும் 12 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொண்டர் சபை தலைவராக வே.சசிக்குமார், உபதலைவர்களாக கு.சசிக்குமார், சி.ரிசிகேசன், செயலாளராக சி.கிரிதரன், உபசெயலாளராக சி.பிரணவன், பொருளாளராக சி. விஜயராகவன் ஆகியோரும் மேலும் 12 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (செ-9)

# இராசி பலன்

*27.01.2013*
*(தை 14, ஞாயிற்றுக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*பூரணை முற்பகல் 10.58 மணிவரை*
*பூசம் பிற்பகல் காலை 5.18 மணிவரை*
*இராகுகாலம் 5.06-6.36 மணிவரை*
*சுபநேரம் 9.36-11.06 மணிவரை*
*தைப்பூசம்*

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரும் நாள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்கப் பிரியப்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், நீண்ட நாளைய பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், புதிய நட்பால் பொருளாதார விருத்திக்கு அடித்தளமிடுவீர்கள்.

**கடகம்** நீங்கள் தேடிச்சென்று சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடிவரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடு த்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிங்கம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வள்ளி மணாளனை வழிபட்டு மகத்துவம் காண்பீர்கள்.

**துலாம்** வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அருமையான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனதில் ஊக்கமும் உற்சாகமும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படும், கொடுக்கல்-வாங்கலில் கவனம் தேவை, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், தொழில் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், பொருளாதார நிலை திருப்திதரும், பொதுப்பணிகளில் ஈடுபாடு காட்டுவீர்கள், பிள்ளைகளின் கல்விக்கு உற்சாகமளிப்பீர்கள்.

வளவன்

# அங்குரார்ப்பணம்

கொக்குவில் இராஜபரமேஸ்வரி மனிதவள மேம்பாட்டு நிலைய அங்குரார்ப்பணமும் சிவத்தமிழ் மானிட விடியற்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவின் தொடக்கவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி க்கு மேற்படி மனிதவள மேம்பாட்டு நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அறக்கொடையாளர் மாணிக்கம் சுப்பிரமணியம், சிறப்புவிருந்தினர்களாக சிவத்தமிழ் மானிட விடியற்கழக சிரேஷ்ட ஆலோசகர் அ.பஞ்சலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9)

# இத்தாலி கனவில் மண் விழுந்தது

## பணம் வாங்கியோர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

இத்தாலி நாட்டிற்கு அனுப்புவதாக கூறி இருவரிடம் தலா இருபது இலட்சம் ரூபா பணத்தினை வாங்கிய கணவன்- மனைவி தலைமறைவாகிய சம்பவம் ஒன்று யாழில் இடம்பெற்றுள்ளது.

இவ் ஏமாற்று மோசடியில் பலியாகிய இருவரின் முறைப்பாடுகள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பேதுரு பிரதேசத்தை சேர்ந்த இரு இளைஞர்களிடம் அதே இடத்தினைச் சேர்ந்த கணவன்- மனைவி இத்தாலி நாட்டிற்கு அனுப்புவதாக கூறி இருவரிடமும் 40 இலட்சம் ரூபா பணத்தினை கடந்த வருடம் ஆடி மாதம் வாங்கியுள்ளனர்.

எனினும் நாட்கள் செல்லச் செல்ல இளைஞர்களின் இத்தாலிக்கனவு நிறைவேற்றப்படவில்லை.

இதனால் ஏமாற்றமடைந்த இரு இளைஞர்களும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸார் குறித்த கணவன்- மனைவியினை விசாரணைக்காக அழைத்த போது அவர்கள் ஏற்கனவே தலைமறைவாகியிருந்தமை அறியவந்துள்ளது

இதனால் உடனடியாக தம்பதியர்களினை கைது செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் எனினும் தாம் வெளிமாவட்ட பொலிஸ் நிலையங்களிற்கு இது தொடர்பில் அறிவித்தல் விடுக்கப்பட்டு உள்ளதாகவும் அவர்களிருவரும் விரைவில் கைது செய்யப்படுவர் என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல் பேரேரா தெரிவித்துள்ளார். (அ-4)

# வாரம் ஒரு தகவல்

## படித்தால் மட்டும் போதுமா?

ஒரு பெண் அதிகம் படித்திருந்தாள்.

அவ்வவ்போது புதிதாக வருகின்ற எதுவானாலும் உடனே வாங்கி வந்து விடுவாள். அப்படியிருக்கும் நிலையில் சமையல் செய்யக்கூடிய சாதனம் ஒன்று சந்தையில் விற்பனைக்கு வந்திருப்பதை அறிந்துகொண்ட அவள் உடனே சென்று அதிக விலை கொடுத்து அதனை வாங்கி வந்தாள்.

துண்டுதுண்டாக இருந்த அந்தக் கருவியின் பாகங்களை எவ்வாறு பொருத்துவது என்பது தொடர்பான கையேடு ஒன்றையும் அத்துடன் கொடுத்திருந்தார்கள்.

வீட்டிற்கு வந்ததும் அப்பொழுது அந்தக் கையேட்டை முழுமையாகக் கற்று முடித்த பின் அதில் தெரிவிக்கப்பட்ட முறையில் அவற்றை இணைக்க முற்பட்டாள். அவளால் முடியவில்லை. சிறிது நேரம் யோசித்த அப்பெண் அவற்றை வாங்கிய கடை க்குச் சென்று அங்கு வேலை செய்யும் ஒருவரை அழைத்து பொருத்துவோம் என நினைத்து புறப்பட்டுச் சென்றாள்.

சிறிது நேரத்தில் ஒருவரை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

அவர்கள் வீட்டிற்கு வருகின்ற வேளை அடுக்களையில் அந்த இயந்திரம் முழுமையாகப் பொருத்தப்பட்டு.... சமைக்கின்ற வேலையும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஆச்சரியமடைந்த அப்பெண் யார் இதைச் செய்தது? என்று யோசித்த வேளை..."நான்தான் அது!" என்று கூறுவது போல அந்த வீட்டில் வழமையாக சமையல் செய்யும் பெண்மணி முன்னே வந்தாள்.

சற்றும் அவளைக் கண்டு கொள்ளாத வீட்டுப் பெண்மணி படிப்பறிவு இல்லாதவள் அவ்வேலைக்காரி. எனவே அந்தக்குறிப்புப் புத்தகத்தை அவளால் படித்திருக்க முடியாது! என்று யோசித்துக் கொண்டே...

" எப்படி இது ... உன்னால் முடிந்தது? என வியப்போடு கேட்டாள்.

" படிப்பறிவு இல்லாத போது மூளையைப் பயன்படுத்தும் கட்டாய தேவை ஏற்படுகிறது. அவ்வளவுதான்... வேறொன்றும் இல்லை என்று கூறிமுடித்தாள் அந்த வேலைக்காரப்பெண்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 190 | 200 | 240 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 | 40 |
| கோவா | 140 | 80 | 120 | 120 |
| கரட் | 200 | 180 | 180 | 160 |
| பூசணி | 50 | 30 | 50 | 50 |
| புடோல் | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140-150 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 240 | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 90-100 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 160 |
| லீக்ஸ் | 120 | 110 | 160 | 150 |
| பீற்றூட் | 120 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 220 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | -- |
| போஞ்சி | 140 | 120 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 280 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 20-40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 20-40 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 90-100 | 90 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 160 | 220 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கப்பட்டவர்கள் தொடர்பில் தெளிவற்ற நிலையில் வைத்தியர்

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)


யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்த காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் திருமாறன் இனந்தெரியாதவர்களினால் வாள்வெட்டுக்கு உள்ளாகிய சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைக்கு தேவையான சான்றுகளினை வைத்தியர் வழங்கவில்லை என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்தார்.

குறித்த வைத்தியர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி விக்கிரமராச்சி கொழும்பிற்கு அனுப்பப்பட்டு அங்கு தற்போது இருக்கும் வைத்தியர் திருமாறனிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வைத்தியரினை தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் எண்மரது புகைப் படங்கள் வைத்தியருக்கு காண்பிக்கப்பட்டது. எனினும் அவர் தன் மீது தாக்குதல் நிகழ்த்தியவர்கள் தொடர்பில் எவ்வித அங்க அடையாளங்களினையும் காண்பிக்கவில்லை என்பதோடு அப்புகைப்படங்களில் உள்ளவர்கள் எவரையும் தனக்கு தெரியாது எனவும் கூறியுள்ளார்.

தான் தாக்கப்பட்டமை தொடர்பில் வைத்தியர் இறுதிவரை தெளிவற்ற பதிலையே எமக்கு விசாரணையின் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை வழங்கி வருகின்றார்.

எனினும் யாழ்.பொலிஸார் குறித்த வாள் வெட்டு சம்பவம் தொடர்பில் இருவரினை கைது செய்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ-4)




நன்றி:- அததெரண

## தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் நியமனம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் ஆசிரியர்களாக கடமையாற்றிய இரு ஆசிரியர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் தொழில் வழிகாட்டல் அலுவலர்களாக மாகாணக்கல்வி திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் க.ஈசன், திருமதி கயல்விழி உதயசங்கர் ஆகியோரே மேற்படி நியமனம் பெற்று வரணி ஆசிரிய மத்திய வள நிலையத்தில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர். (அ-3-29)

## த.பஸ் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 24ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது.

இதன் தலைவராக மீண்டும் கெமுனு விஜயரட்ன, உபதலைவராக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய தலைவர் பொ.கெங்காதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

## ஓய்வூதியத் திட்டத்தில் 48 பயனாளிகள் தெரிவு

(சாவகச்சேரி)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இணைந்து கொண்டவர்களில் 60 வயதை பூர்த்தி செய்து இவ்வருடம் இளைப்பாறவுள்ள 48 பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் மேலதிக அரசாங்க அதிபரினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டு அறிவித்தல் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி 48 பயனாளிகளுக்கும் 60 வயதை பூர்த்தி செய்ய முன்னர் அறிவித்தல் வழங்கி 60 வயதை பூர்த்தி செய்ததும் ஓய்வூதியத்தை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# நகையை அபகரிக்க முயன்ற திருடன் வசமாக மாட்டினான்

## பொதுமக்கள் நல்ல கவனிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சங்குவேலி பிரதேசத்தில் பெண்ணின் நகையை அபகரிக்க முயன்ற ஒருவர் அப்பகுதி மக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் தமது பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த தாய் ஒருவரிடமிருந்தே நகையை அபகரிக்க முற்பட்டுள்ளார்.

உடனே அப்பெண் கூச்சலிட பதற்றமடைந்த திருடன் அம் முயற்சியை கைவிட்டு தப்பிக்க முயன்றுள்ளார். எனினும் அங்கு கூடிய பொதுமக்கள் குறித்த நபரை சூழ்ந்து கொண்டு மடக்கிப் பிடித்துள்ளனர்.

பின்னர் அப்பகுதி மக்களின் தீர்ப்பிற்கேற்ப தண்டனை வழங்கப்பட்டதுடன் பொலிஸாரிற்கு தெரியப்படுத்தினர்.

அவ்விடத்திற்கு உடனே விரைந்து வந்து மானிப்பாய் பொலிஸார் பிரஸ்தாப திருடனை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-5)

யாழ்.செய்திகள்...

# சேவைக்கால ஆ.ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விஞ்ஞானம், கத்தோலிக்க சமயம், மனைப் பொருளியல், 2ஆம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப்படிவங்களை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (அ-3-29)

# துளிர்விடும் தேவர்கள் இறுவெட்டு வெளியீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மீசாலை வேம்பிராயில் அமைந்துள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்ட தைப்பூசத்திருவிழா கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு ஆன்மீக நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்து சொற்பொழிவுகளும் இசைக்கச்சேரி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

முற்பகல் 10.30 மணிக்கு பரிசில் வழங்கல் நிகழ்வும் பி.ப 2 மணிக்கு துளிர்விடும் தேவர் கள் குறும்பட இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு தயவுத்திரு குமரநாதன் ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்குறும்படத்திற்கான கதை வசனம், தயாரிப்பு, இசை அமைப்பு பொறுப்புக்களை குமரநாதன் ஆசிரியரே மேற்கொண்டுள்ளார்.

உலக அமைதி வேண்டியும் ஜீவகாருணியத்தை வலியுறுத்தியும் நடைபெறும் இத் தைப்பூச பெருவிழாவில் பங்கு கொண்டு எல்லாம் வல்ல அருட்பெரும் ஜோதி இராமலிங்கம் பெருமானுடைய தனிப் பெருங்கருணை துணை கொண்டு மரணமில்லா பெருவாழ்வில் தளைத்தோங்கும் வண்ணம் அனைவரையும் விழாக்குழுவினர் வேண்டியுள்ளனர். (செ-3-29)

## கட்டட அடிக்கல் நாட்டுவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கந்தன் கருணை அன்னதான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறுகிறது.

இவ் அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற நகரபிதா ந.அனந்தராஜா, பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், பருத்தித்துறை கலாசார உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார், தொண்டைமானாறு கிராம சேவையாளர் மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

அத்துடன் இவ் அன்னதான மண்டபம் அமைப்பதற்கு சமூக உறவுகளிடம் பங்களிப்பினை எதிர்பார்ப்பதாக கந்தன் கருணை அன்னதான மண்டப நிர்வாக சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-5)

* * *

பொற்பதி அறிவாலயத்தின் இரண்டு மாடி கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டுவிழா பொற்பதி வீதி அறிவாலய வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அதன் நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)

## பொது அறிவு போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக்கோட்டத்தினரால் கடந்த 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு, இ.கௌசிகன், சி.சோபனா, பு.மிதுலன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

இவர்களுக்கான சிறப்புப் பரிசும் கலந்து கொண்ட மாணவர்களுக்கான நினைவுப் பரிசும் சான்றிதழ்களும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஞானக் கோட்டத்தில் நடைபெறும் தைப்பூச விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தயவுத்திருமதி பாக்கிய சந்தான லக்ஸ்சுமி இராமானுயம்(இந்தியா) உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-29)



இந்தியாவின் 63 ஆவது குடியரசு தின நிகழ்வு நேற்று நல்லூர் மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்திய துணைத்தூது [illegible] தேசியக் கொடியினை ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்த கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

கரணவாய் வடக்கு கொற்றா வத்தையைச் சேர்ந்த செபமரியதாஸ் (அன்ரன்) என்பவரது 50,000/= பணம் இல.764, (பலாலிவீதி) பேருந்தில் நேற்று முன்தினம் (24.01.2013) யாழ்ப்பாணத்திலிருந்து 1Km தூரத்தில் தவறிவிட்டது. ஆலயத்திற்குரிய பணம் என்பதால் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0779813530

## வேலைவாய்ப்பு

**Management Trainees 2013**

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கு அதன் வட மாகாண கிளைகளுக்கு (யாழ்ப்பாணம்/ வவுனியா/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு) முகாமைத்துவப் பயிற்சிக்கு O/L, A/L சித்தியடைந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

- பயிற்சியின்போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்
- பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படும்
- பயிற்சியின் பின்னர் மாதாந்தம் 50,000/= பெறலாம்
- பயிற்சிக்காலம் 3-6 மாதங்கள் (பயிற்சி இலவசமாக வழங்கப்படும்)
- தங்குமிட வசதிகள் உண்டு

தொடர்புகளுக்கு: 0771906728, 0217200867, 0778602777

(1568)

# அவுஸ்.எதிர்க்கட்சி தலைவர் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சி பிரதித் தலைவர் ஜீலி பிஷப் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை வருகை தரும் இவர், இலங்கையில் இடம்பெறும் கடத்தல் சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்துவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய எதிர்க்கட்சி பிரதித் தலைவருடன் அவுஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு பேச்சாளர் மைக்கல் கீனனும் இலங்கை வரவுள்ளார்.

அவுஸ்திரேலிய லிபரல்கட்சியின் பேச்சாளர் பிஷப் இலங்கையில் தமிழ் பிரதேசங்களிற்கான விஜயத்தை மேற்கொண்டு அவர்களுடன் பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இவர் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு அங்குள்ள தமிழ்த் தலைவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். (அ-2)

## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

**பூரி** உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
**சப்பாத்தி** உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள்**

## LL.B (UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

**Batch 4 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன**



- உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி.
- இலங்கை மற்றும் Uk பாட விதானங்களை உள்ளடக்கியது.
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- இலகு தவணை கொடுப்பனவு முறை.
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்

**PRINCE CITY CAMPUS**

இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road). யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 077 077 2272

## இலவச இணையக் கற்கை நெறி நிறுவகம்

## SERVE - eLearning Institute

ப. எண்.1098

**தகைமைகள்**

1. க.பொ.த உயர்தரத்துக்கு இரு தடவைக்குள் தோற்றிய மாணவர்கள்
   a. கற்கை நெறி ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம்
2. இரண்டாம் தடவை ஆங்கில மொழி மூலம் தோற்றிய மாணவர்கள்
   b. கற்கைநெறி கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேலை வாய்ப்பைத் தேடுபவர்கள்

சாதாரண தரத்தில் ஒரு தடவை தோற்றிய மாணவர்கள்
c. கற்கைநெறி ஆங்கிலம், விஞ்ஞானம் , கணிதம்

(சி-2246)

பதிவுகளுக்கு முந்துங்கள் :
SERVE - eLearing இற்கு நேரில் வரவும்.

**முடிவுத் திகதி:**
**30.01.2013**

66, கட்டைப்பாலி ஒழுங்கை,
,ஆனைக்கோட்டை,
தொடர்பு: 021 2256206



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>உயரம்: 5'3"<br>கி.பா: 17, 12 இல் செவ்.<br>தகைமை/தொழில்: B.A (Hon's) MA முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B -1054 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:49.5, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: M.L.T. M.Sc (UK)<br>தொ.இ: G -1114 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>உயரம்: 5'10"<br>கி.பா:42.25<br>தகைமை/தொழில்: BCA, IT ஆசிரியர்<br>தொ.இ: B -1057 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'3"<br>கி.பா: 45, 7 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L (மாணவி) முகாமைத்துவ உதவியாளர்<br>எ.பா: துணை இழந்தவர்களும் ஏற்கப்படும் வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G-1116 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 14, 1 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L தொழிற்சாலை (கனடா PR)<br>தொ.இ: B -1060 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 33<br>தகைமை/ தொழில்: A/L ஆசிரியை<br>தொ.இ: G -1119 |
| பிறப்பு: 1979 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 63.25, 7 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, மின் இணைப்பு<br>தொ.இ: B -1061 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'2"<br>கி.பா: 37.5, 2இல் செவ்<br>தகைமை/ தொழில்: HNDA (முகாமைத்துவ உதவியாளர்)<br>தொ.இ: G -1123 |

சகல தொடர்புகளுக்கும்:-

## கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

## பணிநிலை வெற்றிடம்

01. வெளிக்கள உத்தியோகத்தர் (Field Officer)
02. உதவியாளர் (வெளிக்கள வேலை)

**நேர்முகத் தேர்வு: 28.01.2013 திங்கட்கிழமை**
**மு.ப. 9 மணி - பி.ப.2.மணிவரை**
(சுயவிபரங்களுடன் சமுகமளிக்கவும்)

(சி-2247)

**ANDRA Digital Image**
379/167, Kasthuriyar Road, Jaffna.
021 7201264 , 0776622981

www.mobitel.lk



TRC/M/Promo/12/26

தேசத்தின் அபிவிருத்திக்காக பாடுபட்டு சேவை புரியும் அரச ஊழியர்களான உங்களுக்காக மொபிடெல் வழங்கும் உபஹார இன்டர்நெட்

| | |
|---|---|
| 5GB தரவுப் பொதி* | இலவசம் |
| அரச ஊழியர்களான தற்போதைய உபஹார பாவனையாளர்களுக்கு டொங்கல் | இலவசம் (கையிருப்பு உள்ளவரை மட்டுமே.) |
| ஏனைய அரச ஊழியர்களுக்கு டொங்கல் | ரூ.1.490/- |

இவ் அனுகூலங்களுக்கான மாதாந்தக் கட்டணம் ரூ.299/- மட்டுமே
இணைப்புக் கட்டணம் ரூ.1000/-

அனைத்து கட்டணங்களும் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது. நிபந்தனைகளுக்குட்பட்டது.
காலை 9.00 மணி வரை : 3GB
காலை 9.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை : 2GB

உபஹார இன்டர்நெட்
அரச சேவைக்காக

Sri Lanka Telecom Mobitel
வாடிக்கையாளர் சேவை இலக்கம் 1717
TRIAD 25962

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறுதிக்கட்ட போரில் மக்கள் காணாமல் போனமை உண்மை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் வன்னியில் இறுதிக்கட்டப் போரின்போது ஏராளமான தமிழர்கள் காணாமல் போனது உண்மையே. இதனை யாரும் மறுக்க இயலாது. எனவே, வன்னியில் காணாமல் போன தமிழ்மக்களின் நிலை கண்டறியப்பட வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் காணாமல் போனவர்களின் உறவுகள் சாட்சியமளித்துள்ளனர். இதனை இராணுவத்தரப்பினர் மறுக்கின்றமை முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போன்ற செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஸ்தாபிக்கப்பட்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும். ஏனென்றால் உள்நாட்டுயுத்தமும் அதன் பின்னரான செயற்பாடுகளும் முக்கியமானவை.

அத்துடன் அவ்வறிக்கையில் மனித உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு வழிமுறைகளை நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

குறிப்பாக காணாமல் போனவர்களின் விபரங்கள், உறவினர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பதிவாகியுள்ளது. ,

இதில் யார் கூட்டிச் சென்றது? எப்போது சம்பவம் இடம்பெற்றது? போன்ற விடயங்கள் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, இதனை பொய் எனக் கூறக் கூடாது. நியாயமான சாட்சியங்களின் அடிப்படையில் உண்மைகளை அரசாங்கம் கண்டறிய வேண்டும். இல்லையென்றால் மீண்டும் பிரச்சினைகள் மேலோங்கி நாட்டின் நற்பெயருக்கு பங்கம் ஏற்பட்டு விடும் என அமைச்சர் கூறினார். (அ-2)

## தியான- யாத்திரிக மண்டப திறப்புவிழா

(மல்லாவி)

பொன்னாலை ஸ்ரீவரதராஜ பெருமாள் தேவஸ்தான திருவீதியில் அமைந்துள்ள தியான-யாத்திரிக மண்டப திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தலைமை உரையினை வைத்தியர் வி.சத்தியானந்தன் நிகழ்த்த தியான மண்டபத்தை நடேசன் ஸ்ரீகரனும் யாத்திரிக தங்குமிடத்தினை எஸ் சிவகுருநாதனும் திறந்து வைக்கவுள்ளனர்.

தியான மண்டப அணையா சுடரினை தியான மண்டப நெறிப்படுத்துநர் த.சபாலிங்கம் ஏற்றிவைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு பல்துறை சார்ந்த சமய பெரியோர்கள், கல்விமான்கள் உட்பட பெருமளவான பக்தர்கள் வருகை தந்து விழாவினை சிறப்பிக்கவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (செ-3-15)

# ஈழத்தமிழர்களுக்கு நீதி கேட்டு நடைபயணம்

## லண்டனிலிருந்து இந்தியா வருகிறது




ஈழத் தமிழர்களது விடுதலைக்கான உரிமைப் போராட்டத்தின் தொடர்ச்சியாக லண்டனில் இருந்து இந்தியா நோக்கி ஈழத்தமிழர்களுக்கான நீதி கேட்டு மனிதநேய நடை பயணம் ஒன்று நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு லண்டன் பாராளுமன்ற சதுக்கத்தில் உள்ள நெல்சன் மண்டேலாவின் உருவச் சிலைக்கு முன்பாக இந்த நடைபயணம் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நடை பயணமானது தனி ஒரு மனிதனாக தனது சுய விருப்பில் நடத்தி முடிக்க தீர்மானித்துள்ளார் சி.லோகேஸ்வரன். ஏனெனில் தற்போது நிலவும் பிளவுகளுக்கு நடுவே தனது இந்தப் போராட்டம் சிக்கி திசைமாறாமல் இருக்கவும் தனது நோக்கம் சரியான முறையில் நிறைவேற வேண்டி இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஈழத் தமிழர்களை காக்கக்கோரி தமிழகத்தில் தன் உடலில் தீயிட்டு தமிழர்கள் நெஞ்சில் உணர்வுத்தீயை கொளுந்துவிட்டு எரிய வைத்த வீரத் தமிழ்மகன் முத்துக்குமாரின் 4 ஆம்ஆண்டுநினைவுநாளில் இந்த நடைபயணம் ஆரம்பிக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. லண்டனி லிருந்து இந்தியா நோக்கி அதிக தூரம் கொண்டதும் கடினமானதுமான மனிதநேய நடைபய ணத்தை சி.லோகேஸ்வரன் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதானது அண்மிக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மாநாட்டில் அதிர்வலைகள் ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப் படுகின்றது. அது மட்டுமன்றி இந்நடைபயணம் இந்தியாவின் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தி சமாதியை காந்திய வழியில் சென்றடையவுள்ளது. தியாக தீபம் தீலிபனின் நினைவு நாளில் நிறைவு பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-2)

# கொழும்புத்துறை பகுதியில் பலசரக்குக்கடையில் திருட்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் உள்ள பலசரக்கு கடையொன்றில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள், பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளது.

இதில் பணம், பொருட்கள், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் என்பன திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்திருட்டுச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (அ-4)

# ரொமானியாவில் தங்கியிருப்போர் குறித்து விசாரணை

(கொழும்பு)

ரொமானியாவிற்கு சட்டவிரோதமான முறையில் இலங்கையர்கள் கடத்தப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரொமானிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரான்ஸ் பிரஜை ஒருவரே இந்த சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளின் பின்னணியில் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ரொமானியாவிற்குள் இலங்கையர்கள் பிரவேசிப்பதற்காக நபர் ஒருவரிடமிருந்து தலா 2ஆயிரத்து 500 யூரோக்கள் அறவீடு செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரான்சிற்கு அழைத்துச் செல்லும் நோக்கில் 13 இலங்கையர்கள் ரொமானியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, சட்டவிரோதமான முறையில் ரொமானியாவில் தங்கியிருப்போர் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# குடிநீர் இல்லாமல் வாடும் கப்பாச்சி கிராம மக்கள்

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் கிராமம் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்தும் நீர்ப்பற்றாக் குறையினை எதிர்கொண்டு வருவதாகவும் இதனால் பெரும் சிரமத்தை தாம் எதிர்கொள்வதாகவும் இதுதொடர்பில் அதிகாரிகள் போதுமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எமது கிராமம் மிகவும் மேடான பகுதியில் அமைந்துள்ளமையினாலும் நிலத்தின் கீழான பகுதி கற்பாறையாகவும் காணப்படுவதனாலும் நீரை இலகுவில் பெற முடியாது.

இந் நிலையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது குழாய்க்கிணறுகள் அமைத்து தரப்பட்டிருந்தது. அவை நீண்ட காலமாகி விட்டதனால் 7 குழாய்க்கிணறுகளில் 2 மாத்திரமே மக்கள் பயன்படுத்தும் நிலையில் உள்ளன.

88 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் இரண்டு குழாய்க்கிணறுகள் போதுமானதாக இல்லை. ஏனையவற்றை திருத்தம் செய்வதற்கு கிராம மக்கள் பணம் திரட்டி பிரதேச சபையிடம் கொடுத்த போதிலும் அவர்கள் திருத்தம்செய்துவிட்டுசென்ற பின்னர் அவற்றிலிருந்து காற்றும் மண்ணுமே வருகின்றன.

இந்நிலையில் ஏனைய குழாய்க்கிணறுகள் சிலவற்றில் நீரை பரிசோதனை செய்துவிட்டு கிருமி இருப்பதாக பிரதேசசபையினர் கூறிவிட்டுச் சென்றனர். மழை நீரைச்சேகரிக்கும் திட்டத்தினை அரசசார்பற்ற நிறுவனம் சில வீடுகளுக்கு செயற்படுத்திக் கொடுத்திருந்தாலும் அதனை குடிப்பதற்கு பயன்படுத்த முடிவதில்லை. அத்துடன் மழைவீழ்ச்சி குறைவான நிலையில் அதனுள் நீரையும் சேகரிக்க இயலாமல் உள்ளது.

பிரதேச சபையினால் குழாய் நீர்த்திட்டம் செய்து தருவதாக கூறிய போதிலும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என தெரிவித்தனர்.

இது தொடர்பில் செட்டிகுளம் பிரதேச சபையின் தலைவர் கபிரியல் அந்தோனியிடம் கேட்டபோது,

கப்பாச்சி கிராமத்தில் நீர்ப்பற்றாக்குறை தொடர்பாக நாம் பல இடங்களுக்கும் திட்ட முன்மொழிவுகளை கொடுத்துள்ளோம். முகத்தான் குளத்தில் இருந்து குளாய்நீர் மூலம் நீரை விநியோகிப்பதற்கான திட்டத்திற்கு ஏறக்குறைய 50 இலட்சம் வரை தேவையாகவுள்ளது.

எனவே, இவ்வளவு பெரிய நிதி எமது சபையிடமும் இல்லை. எனினும் அக்கிராமத்தின் நீர்த்தேவை உண்டு. அதற்காக நாம் தற்போது இங்குள்ள குழாய்க்கிணறுகளை மாத்திரம் துப்புரவு செய்து வருகின்றோம். எனினும் விரைவில் நீர் வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என்றார் (அ-250)

# இரு நூல்கள் வெளியீடு







எழுத்தாளர் வைத்தியர் ஆ.பேரின்பநாதன் எழுதியுள்ள **சிறுவர் துஷ்பிரயோகம், மதுவும் அடிமை நிலையும்** ஆகிய நூல்களின் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார். **சிறுவர் துஷ்பிரயோகம்** என்ற நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யி யல்துறை தலைவரும் சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளருமான கலாநிதி கஜிவிந்தனும் **மதுவும் அடிமை நிலையும்** என்ற நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக மருத் துவபீட உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வராவும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் **சிறுவர் துஷ்பிரயோகம்** என்ற நூலின் முதற் பிரதியை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க தாயகம் சிறுவர் இல்ல அதிபர் தர்மவாரிதி வி.ஸ்ரீதரன் பெற்றுக் கொள்கிறார். **மதுவும் அடிமையும்** என்ற நூலின் முதற் பிரதியை வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி.குருபரன் தாரணி வெளியிட்டு வைக்க செல்வி சங்கீதா குருநாத சிவம் பெற்றுக் கொள்ளவுள்ளார். (செ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசியல் பணி தொடர்கின்றது

## அமைச்சர் டக்ளஸ் உரை

(யாழ்ப்பாணம்)

**சக தமிழ் அரசியல் கட்சிகள் இருப்பதையும் இல்லாமல் செய்யும் நோக்குடன் அழிவுக்கான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் நாம் மக்களின் நலனுக்காக அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியாக அழுத்தங்களைக் கொடுத்து உதவி களை ப் பெறும் போராட்டங்களிலும் இருப்பதை பாதுகாக்கும் நோக்குடனும் செயற்பட்டு வருகின்றோம் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க அபிவிருத்தி மன்றத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியினை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக வழங்கும் நிகழ்வு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி திட்டமானது எமது அரசியல் அழுத்தம் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் தற்போது வன்னியில் இத்திட்டம் இல்லாத நிலையில் அடுத்த மாதம் முதல் சமுர்த்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் நாம் அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனால் ஏனைய சக தமிழ்க்கட்சிகள் தமது சுய நலத்திற்காகவே அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

இன்றுள்ள சூழலில் இருப்பதை பாதுகாத்துக்கொண்டு எமது மக்களுக்கு கிடைக்க வேண்டியதை பெற்றுக் கொள்வதும் அதிலிருந்து முன்னேறுவதுமே முக்கியமானதாகும்.

அந்த வகையில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக முன்னெடுக்கப்படும் இந் நடவடிக்கையை பாராட்ட வேண்டும் என்பதுடன் இவ்வாறான மக்கள் பணிகளுக்கு எமது ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், யாழ். மாவட்ட சமுர்த்தி திட்ட இணைப்பாளர் ரகுநாதன், யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் சண்முககுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# தடுத்து வைக்கப்பட்டோர் வேறு முகாமுக்கு மாற்றம்

(கொழும்பு)

இந்தோனேஷியாவின் பாடாங் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மீடான் முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.


இவ்வாறு 16 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் விமானமொன்றின் மூலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கைப் பிரஜைகள் புகலிடக் கோரிக்கையாளர்களா அல்லது அகதிகளா என்பதனை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் விசாரணை செய்து தீர்மானிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் தேடும் நோக்கில் படகில் சென்ற இலங்கையர்களை இந்தோனேஷிய அதிகாரிகள் கைது செய்திருந்தனர். (அ-2)

# அரசசார்பற்ற நிறுவன திட்டங்களுக்கு அங்கீகாரம் பெறப்படுவது அவசியம்

## ஆளுநர் சந்திரசிறி சுட்டிக்காட்டு



உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டமும் வடமாகாண நிர்வாகத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னர் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஆளுநர் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

வடமாகாணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் அமுல்படுத்தும் திட்டங்களை கண்காணிக்க தகவல் முகாமைத்துவ முறைமை ஒன்றினை உருவாக்குவது தொடர்பான தொழில்நுட்ப ஆதரவை பெறும் முகமாக யூ.என்.ஓ.சி.எ.ஏ.அமைப்பின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் கடந்த 24 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இதன்போதே வடமாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு அரசு சாரா நிதித் திட்டங்களும் ஒரு தகவல் முகாமைத்துவ முறைமை (MIS) மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். வடமாகாண மக்களிடம் திட்டங்களை செயற்படுத்தும் போது பயனாளிகளின் மீள் வருதலை இத்தகவல் முகாமைத்துவ முறைமை தவிர்க்கும். மேலும் இம்முறைமையானது மக்களின் உண்மையான தேவைகளை அறிய உதவும்.

இத்தகவல் முகாமைத்துவ முறைமை இணைய உதவியுடன் மாகாணத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவு மட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படும். இத்தகவல் மேலாண்மை திட்டத்திற்கு மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் மூலம் தரவு பதிவேற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பிரதிப்பிரதம செயலாளர் (திட்டமிடல்) ஆர்.உமாகாந்தன், உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) எம்.துஷ்யந்தன், தகவல் வள முகாமைத்துவ பணிப்பாளர் நிலையம் எஸ்.யோகராஜன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# சர்வதேச தலையீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சில நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர் இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் அழுத் தங்கள் காரணமாக சில நாடுகள் இலங்கை மீது கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகக் குறிப் பிட்டுள்ளார்.

எனினும் வெளிநாட்டு சக்திகளின் அரசியல் உதைபந்தாக இலங்கை செயற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாரிய வளங்கள் மற்றும் ஊடக வலையமைப்பின் ஊடாக இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க சில சக்திகள் முயற்சி செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய நாடு என்ற ரீதியில் உலக சமூகம் இலங்கைக்கு அனுதாபத்துடன் கூடிய ஒத்துழைப்பையே வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். வெளிநாடுகளில் உள்ளவர்களின் நோக்கங்களின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க இடமளிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதா இல்லையா என்பது குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமே தீர்வு காணமுடியும் என அவர் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பின்றி பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகளைத் தொடர முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)

# பெய்துவரும் கனமழையால் தொற்றுநோய்கள் பரவும்

## சுகாதார பணிமனைகள் எச்சரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் கடலை அண்டிய கரையோரங்களில் மீன்கள் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மட்டக்களப்பு, புதிய காத்தான்குடி, ஏத்துக்கால், பாலமுனை உள்ளிட்ட பகுதிகளில் சிறிய மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதாக அங்குள்ள மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொற்றுநோய் பரவும் அபாயம் தோன்றி இருப்பதால் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு சுகாதார சேவைகள் பணிமனைகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

குறித்த மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன் கழிவுநீர் கலந்து நீர் அசுத்தமடைந்துள்ளதால் நுளம்புகள் அதிகம் பெருகும் அபாயமும் காணப்படுகின்றது.

இதனால் ஆட்கொல்லி டெங்கு நோய் போன்ற நோய்கள் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதால் மக்கள் பெரிதும் அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் பரவலாக பல இடங்களில் இந்த தொற்றுநோய் பரவும் அபாயம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஒரு கடை மட்டுமே உள்ள இடத்தில் தினமும் பயணிகளை இறக்குவது ஏன்?

(ஆனையிறவு)

முல்லை-யாழ். தனியார் பேருந்துகளும் முல்லை-கிளிநொச்சி தனியார் பேருந்துகளும் றெட்பானாவில் ஒரு கடையுள்ள இடத்திலேயே தினமும் பயணிகளை உணவுக்காக இறக்குவதாகவும் வேறு கடைகளில் இறக்குவதில்லை எனவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒரு கடையை மாத்திரமே கொண்ட இப்பகுதியில் பயணிகளை இறக்குவதால் நேரம் வீண்விரயமாகின்றது எனவும் பல கடைகள் உள்ள இடத்தில் இறக்கினால் பயணிகளின் நேரம் வீண்விரயம் ஆகாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த கடையில் உணவுகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் தமது பணம் வீண்விரயம் ஆகின்றது எனவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வேறு கடைகளில் பயணிகளை உணவுக்காக இறக்காது குறித்த கடையில் மட்டும் இறக்குவதற்கான காரணம் என்ன? என பயணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தில் உடன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தங்கப்புதையல்



சுப்பன் ஒரு விவசாயி. ஒருநாள் நிலத்தை ஆழமாக வெட்டிக்கொண்டு இருந்த போது அவன் மண்வெட்டி எதன் மீதோ பட்டு டங் என்ற ஒலியை எழுப்பியது. என்ன வாக இருக்கும் என்ற ஆவ லோடு அந்த இடத்தை மேலும் தோண்ட ஒரு பெரிய பித் தளை அண்டா தெரிந்தது. கஷ் டப்பட்டு வெளியே எடுத்தான். அதன்மீது மூடி வைக்கப்பட் டிருந்த மூடியை எடுத்தான். உள்ளே நிறைய நகைகளும் பொற்காசு களும் இருப்பதைப்பார்த்து திகைத்தான். ஆசையோடு அண்டாவிற்குள் கையைவிட் டான்.


அப்போது தொடாதே என்ற குரல் கேட்டு திடுக்கிட்டான். தலையை உயர்த்திப்பார்த்த போது எதிரே பன்னிரெண்டு அடி உயரத்திற்கு நீண்ட கைக ளோடு கழுத்துவரை தொங்கும் தலைமுடியோடு ஈட்டி போன்ற

## அம்புலிமாமா கதைகள்

பற்களோடு ஒரு கரிய உருவம் நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டான். அவனையும் அறியாது அவன் உடலில் இலேசான நடுக்கம்.

நான் ஒரு பூதம். பல ஆண் டுகளாக இந்தப் புதையலை நான்தான் பாதுகாத்து வருகி றேன்.. நீ ஊருக்குள் சென்று விடயத்தைக்கூறி எல்லா மக்க ளையும் அழைத்துவா. ஒருமுறை தான் அந்த நிபந்தனையை சொல்லவேண்டும் என்று எங்கள் தலைவன் கூறியிருக்கி றான். மீறி நடந்தால் புதையல் யாருக்கும் கிடைக்காது. வேறு இடத்திற்கு மாற்றப்படும். அதனால் நான் சொன்னபடி செய் என்று கூறியது. உடனே சுப்பன் ஊருக்குள் சென்று விடயத்தைக்கூறினான். தங்கப் புதையல் என்றதும் ஊர்மக்கள் அனைவரும் திரண்டனர்.

எல்லோரையும் பார்த்த அந்தப்



பூதம் புதையலுக்கு ஆசைப்பட்டு நீங்கள் எல்லோரும் வந்திருக் கிறீர்கள். பல வருடங்களாக இந் தப்புதையலை நான் பாது காத்து வருகிறேன். மூன்று திரு டர்கள் சேர்ந்து கூட்டாகத் திருடி கொள்ளை அடித்து கொலை செய்து சேர்த்து வைத்த புதையல் தான் இது. இந்தப்புதையலை மூன்று பேரும் பங்கு போட்டு க்கொள்ள முயன்ற போதுதான் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு மடிந்தனர். அதனால் இது தீயவழியில் சேர் ந்த சொத்து. பாவப்பட்ட சொத்து. இந்தப்புதையலை யார் எடுத் துக்கொண்டாலும் அவர்களை இந்தப் பாவம் கடுமையாகத் தாக்கும். இப்பொழுது இருக் கும் நிலைமையை விட கீழ்மட்ட நிலைக்குக் கொண்டு தள்ளும். வாழ்நாள் முழுதும் துன்பப் பட்டே ஆகவேண்டும். குடும்ப த்தில் யாருக்காவது மரணம் நேரி டலாம். இவ்வளவு துன்பங்களை, வேதனைகளை, மரணத்தைத் தரக்கூடிய இந்தப் பாவப்பட்ட புதையல் யாருக்கு வேண்டும் என்று கேட்டது.

துன்பத்தையும் துயரத்தையும் தரும் இந்தப் புதையல் எங்களு க்கு வேண்டாம் என்றுகூறியபடி கும்பல் கலைந்தது. பயத்தோடு சுப்பனும் சென்றுவிட்டான். கடைசி யில் ஓர் இளைஞன் மட்டும் நின்று கொண்டிருந்தான். அவ னைப்பார்த்த பூதம் நீ மட்டும் ஏன் நின்றுகொண்டிருக்கிறாய் என்று வினவியது. என் பெயர் வல்ல பன். நான் இந்தப்புதையலை எடுத்துக்கொள்ள விரும்புகி றேன் என்று பதில் சொன்னான்.

வல்லபா இதை எடுத்துச் சென்றால் நோய், வறுமை, வேதனை, மரணம் போன்ற துன்பங்கள் எல்லாம் அடுக்கடுக் காக உனக்கு வரும் , உன் வாழ்க் கையே நரகமாகிவிடும் என்று தெரிந்தும் நீ ஏன் ஆசைப்படுகி றாய் பாவம். நீ வாழவேண்டிய இளைஞன் சென்று விடு என்று கூறிய பூதத்தைப்பார்த்து மன்னி த்து விடு. நான் புதையலோடு தான் ஊருக்குள் நுழைவேன். நான் இந்தப்புதையலை எனக்கா கச் செலவழித்துக்கொள்ளப் போவது இல்லை. ஊர்மக்களுக் காக செலவு செய்யப்போகி றேன். வறண்டு கிடக்கும். ஏரி, குள த்தை சரி செய்து நீர் கிடை க்க ஏற்பாடு செய்வேன். புதிய கால்வாய் வெட்டி விவசாயிக ளுக்கு பயிர்த்தொழில் செய்ய



உதவுவேன். பாடசாலை கட்டி அனைத்து சிறுவர் சிறுமிகளும் பக்க ஏற்பாடு செய்வேன். மருத்துவமனை கட்டி ஏழைக ளுக்கு இலவச வைத்தியம் கிடைக்க முயலுவேன். சுருக்கமா கச் சொன்னால் எங்கள் ஊர்மக் கள் நலத்தோடும் வளத்தோ டும் வாழ அனைத்தையும் இந்தப் புதையலின் உதவியி னால் செய்வேன். இதற்காக நான் கஷ்டப்பட்டா லும் பரவாயில்லை. என்னால் என் ஊருக்கே நன்மை கிடைக் கிறது. பலருக்கு நன்மை செய் வதற்காக நான் துன்பம் நிறை ந்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கி றேன் என்று கூறி முடித்தான் வல்லபன்.

பொறுமையாகக் கேட்ட பூதம் இளைஞனே! பேராசைப் படாமல், சுயநலம் இல்லாமல், பரந்த மனப்பான்மையோடு, நல்ல எண்ணங்களோடு, தியாக உணர்வோடு, மனிதநேயம் நிரம்பிய தொலைநோக்குப் பார் வையோடு இருக்கிறவ னுக்குத் தான் இந்தப்புதையலைத்தர நினைத்தேன். ஏன் தெரியுமா? தங்கத்திற்காகக் கொலை செய்த மூன்று திருடர்களில் நானும் ஒருவன். என் பாவச் செயலுக்காக பூதமாகப் பிறந்தா லும் செய்த பாவத்தை உணர்ந்து கொண்டேன். அதனால் தான் ஒரு நல்லவனைத்தேடிக் கொண்டி ருந்தேன். அதனால் நான் பொய் சொன்னேன். நான் எதிர்பார் த்த இளைஞன் நீதான். புதை யலை எடுத்துக்கொள். நீ சொன்ன படி செய். உனக்கு வளமான வாழ் க்கை கிடைக்கும். என் துன்ப மும் நீங்கி நான் புதிய பிறவி எடுப்பேன் என்று கூறிவிட்டு மறைந்தது பூதம். தன் கிராம முன்னேற்றத்திற்காகப் புதையலை பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை அளித்த இறைவனுக்கு நன்றி தெரிவித்தபடி புதையலை எடுத்துக் கொண்டு கிராமத்திற் குள் செல்லலானான் வல்லபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்திய ஒப்பந்தம் நிறைவேறாமல் போனது தமிழக தலைவர்களால்தான்

**ஒவ்வொரு ஆண்டும் 'துக்ளக்' பத்திரிகை ஆண்டு விழாவின் போது மத்திய, மாநில அரசியல் பற்றிய தனது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்து வைப்பது சோவின் வழக்கம். இது மக்கள் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தத் தவறுவதில்லை. அந்த வகையில் இந்த ஆண்டும் கடந்த 14 ஆம் திகதி 'துக்ளக்' பத்திரிகையில் 43 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியை சென்னை மியூசிக் அகடமியில் நடத்தினார் சோ.**

சுற்றி வளைத்து பேசாமல் எதையும் சட்டென்று கூறும் வழக்கம் உள்ளவர் சோ என்பதாலோ் என்னவோ இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்புரை, தலைமையுரை என்று எதுவும் இல்லாமல் சோ மட்டுமே பேசினார். அவர் பேசி முடித்ததும் தேசிய கீதம் பாடப்பட்டு விழா முடிவடைந்தது.

சோவின் பேச்சைக் கேட்க ரஜனிகாந்த், குமுதம் குழும சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர் பா.வரதராசன், பொருளாதார நிபுணர் குருமூர்த்தி, மைத்ரேயன் எம்.பி., கூடுதல் கமிஷனர் சஞ்சை அரோரா, வை.ஜி. மகேந்திரன், எஸ்.வி.சேகர் உட்பட பல வி.ஐ.பிக்களும் ஆயிரக்கணக்கான வாசகர்களும் மியூசிக் அகடமி வளாகத்தில் குழுமி இருந்தனர்.

இந்நிகழ்ச்சியின் போது பேசுவதற்காக எழுந்த சோ முதலில் இருமினார். பின்னர் பேச ஆரம்பித்தவர் "எப்படியும் எனக்கு அனுதாப வாக்குகள் கிடைத்து விடும். அதற்காகத்தான் பேசுவதற்கு முன்பு இருமினேன். எனக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை. அதனால் மேடையில் ரொம்ப நேரம் நின்று கொண்டு பேச வேண்டாம். உட்கார்ந்து பேசுங்கள் என்று சிலர் கூறினர். ஆனால், உட்கார்ந்து கொண்டு பேசுவதற்காகவே தமிழ் நாட்டில் ஒரு தலைவர் இருக்கிறார். அதனால் நான் உட்கார்ந்து பேச விரும்பவில்லை'' என்று எடுத்த எடுப்பிலேயே தனது நையாண்டியை எடுத்து விட்டார்.

துக்ளக் ஊழியர்களை... பணியாளர்களை... அனைவருக்கும் அறிமுகப்படுத்திய பின்னர் வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கத் தொடங்கினார்.

**பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லையில் அத்துமீறி நடந்து நம் வீரர்களை கொன்றுள்ளதே?.**


''இஸ்ரேல் போல நாமும் இதற்கு பதிலடி கொடுக்க வேண்டும். இஸ்ரேலில் ஒரு தனி நபர் கொல்லப்பட்டால் கூட பாலஸ்தீனத்திற்கு உள்ளே புகுந்து துவம்சம் செய்து விட்டு திரும்பி வருகிறார்கள். ஆனால், தமது அரசு அப்படிச் செய்யாமல் பொறுமையாக இருக்கிறது. பா.ஜ.க. தவிர ஏனைய கட்சிகள் கூட இதை பெரிதாக கண்டிக்கவில்லை. அரசு என்னதான் செய்கிறதோ தெரியவில்லை''

**டில்லியில் நடந்த பாலியல் கொடுமை சம்பவத்தைப் பற்றி?**

"பெண்களுக்கும் இதில் அக்கறை வேண்டும் என்று சொன்னாலே இப்போது தப்பாகி விடுகிறது. இப்போதுதான் பெண்களுக்கு மரியாதை இருக்கிறது. பழங்காலத்தில் பெண்களுக்கு மரியாதை இல்லை என்று கிரியேட் செய்து வைத்துள்ளனர். பெண்கள் எங்கே பூஜிக்கப்படுகிறார்களோ அங்கேதான் தேவர்கள் இருப்பார்கள். மீடியா இந்த விடயத்தில் சரியாக நடக்கவில்லை. போட்டி போட்டுக் கொண்டு பரபரப்புக்காக மட்டுமே செய்திகளை வெளியிடுகின்றனர். டில்லியில் நடந்தது பெரிய தப்புத்தான். உலக நாடுகளை ஒப்பிடும் போது பாலியல் குற்றங்கள் நம் நாட்டில் குறைவுதான்''

**தி.மு.கவின் அடுத்த வாரிசாக ஸ்டாலினை கருணாநிதி அறிவித்திருக்கிறார். அதேபோல துக்ளக்கின் அடுத்த வாரிசை நீங்கள் அறிவிப்பீர்களா?**

"கலைக்குத்தான் வாரிசு கட்சிக்கு அல்ல என்று மறுநாள் அவர் கூறி விடுவார். கரு



ணாநிதி மாற்றி மாற்றி பேசிக்கொண்டே இருப்பார். அதனால் அவர் கூறியதை நாம் சீரியசாக எடுக்கக்கூடாது''

**தமிழகத்தில் தனி வழியாக செல்பவரை பா.ஜ.கவுடன் இணைக்க முடியுமா? ரஜனியை குறித்து கேட்கிறார்?**

''தனி வழி என்றால் தனி மனிதன் செல்லும் வழி அல்ல. இதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்''

**சங்கர மடம் குறித்து அழகிரி தவறாக பேசுகிறாரே?**

"கருணாநிதிதான் அடிக்கடி தி.மு.க. சங்கர மடம் இல்லை என்பார். சங்கர மடத்தில் சிறிய பூஜை செய்வதற்குக்கூட குழந்தையில் இருந்தே பல வேத மந்திரங்களை படித்து வளர்ந்திருக்க வேண்டும். பல கட்டுப்பாடுகள், வழிமுறைகள் சங்கர மடத்தில் இருக்கின்றன. இது தி.மு.கவில் இல்லையே. அந்த நியாயத்தைத் தானே கருணாநிதி சொல்கிறார். சும்மா அவரை குறை சொல்லாதீங்க''

**வால்மார்ட் வருவதால் என்ன விளைவுகள் ஏற்படும்?**

"ஏனைய நாட்டுச் சந்தைகளில் இருந்து இந்திய சந்தை முற்றிலும் மாறுபட்டது. இதனால் வணிகர்களுக்கு இடையே போட்டி உருவாகி மக்களுக்கு தரமான பொருட்கள் கிடைக்கும்''

**இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து?**

''தமிழர்களுக்கு சில அதிகாரங்களை வழங்கி இந்தியாவும் இலங்கையும் ஏற்கனவே போட்டிருந்த ஒப்பந்தந்தை நிறைவேற்றவிடாமல் பிரபாகரனும் தமிழகத்தை சேர்ந்த சிலரும் தடுத்து விட்டனர். அது நிறைவேறி இருந்தால் தமிழர்கள் சுகமாக வாழ்ந்திருப்பார்கள். ஒப்பந்தத்தை நிறைவேற்ற விடாமல் பிரபாகரனுக்கு தூபம் போட்டதே தமிழகத் தலைவர்கள்தான்''

**ஜெயலலிதாவின் நிர்வாகத்திறமை எப்படி?**

''ஜெயலலிதா மிகச் சிறந்த நிர்வாகி, கூட்டணி அரசியலிலும் அவர் மிகச் சிறந்தவர். டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பொறுப்புக்கு நட்ராஜைத் தேர்வு செய்த திறமை அவருக்கு மட்டுமே இருந்தது. நட்ராஜ் வந்த பின்னர் 13 ஆயிரத்து 500 பொலிஸார் உட்பட 27 ஆயிரம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இந்த நியமனங்கள் குறித்து இதுவரை ஒரு புகார் கூட வரவில்லை''

**நீங்கள் ஏன் ஜெயலலிதாவைத் தொடர்ந்து ஆதரிக்கிறீர்கள்?**

"அண்ணா நூலகம், கூடங்குளம் விவகாரம், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை மற்றும் சில விடயங்களில் அவருக்கு எதிராகத்தான் நாங்கள் செய்தி வெளியிட்டிருக்கிறோம். எல்லா விடயங்களிலும் நாங்கள் அவரை ஆதரிப்பதில்லை''

**முதலமைச்சரைப் பார்க்கவே முடியவில்லையே?**

"எல்லா முதல்வர்களும் தினமும் உங்களை வந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்களா?''

**குமுதம் ரிப்போட்டர்**

# ரஜீவ விஜேசிங்கவுக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)



பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையின் போது வாக்களிப்பில் பங்கேற்காமை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்கவுக்கு எதிராக உள்ளக விசாரணைகள் இடம்பெறுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனை அறிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினரான ரஜீவ விஜேசிங்க மீது இந்த விசாரணை உள்ளக ரீதியில் இடம்பெறுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பங்காளியே ஒழிய உறுப்பினர் இல்லை. எனவே, தம்மீது கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது என்று ரஜீவ விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கல்விச் சமவுரிமையை நாமே வழங்கியுள்ளோம்

## ஜனாதிபதி பெருமிதம்

நாட்டில் கல்விச் சமவுரிமையை அரசாங்கமே மக்களுக்கு வழங்கியது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மதுகம புனித மேரி வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த காலங்களில் தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்றுக் கொள்ள உரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. குறிப்பாக கிராம பிரதேச மாணவர்கள் இந்த நெருக்கடியை எதிர்நோக்கினர்.

கலைப்பிரிவு பட்டதாரிகளுக்கு கடந்த கால அரசாங்கங்கள் உரிய வகையில் தொழில் வாய்ப்புக்களை வழங்கவில்லை. எனினும் தற்போது இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-1)

# சீனர்களுக்கான தேயிலை இலங்கையில் உற்பத்தி

## சீனாவே செய்கின்றது

சீனர்களுக்கான சிறப்புத் தேயிலையை சீனாவே இலங்கையில் உற்பத்தி செய்து கொள்ளவுள்ளது. இலங்கையுடன் இணைந்து கூட்டுமுயற்சியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு இலங்கை முதலீட்டுச்சபை அனுமதி அளித்துள்ளது.

எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சீனாவின் யுன்னான் டியன் ஹொங் குழுமத்தைச் சேர்ந்த யென்ஹொங் அனைத்துலக நிறுவனம் இந்த சிறப்புத் தேயிலையை உற்பத்தி செய்யவுள்ளது.

இந்த கூட்டு முயற்சி நிறுவனம், உயர்தரம் வாய்ந்த சீன சிறப்புத் தேயிலையை உற்பத்தி செய்து சீன சந்தைக்கு அவற்றை ஏற்றுமதி செய்யவுள்ளது.

சீன சிறப்புத் தேயிலை எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் மலையகத் தோட்டங்களில் பயிரிடப்படவுள்ளது. இந்தக் கூட்டு முயற்சியால் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதாகவும் சீன சந்தைக்கு கூடுதல் தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ-2)

# மனிதாபிமான விசாக்களை இரத்துச் செய்தது சுவிஸ்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையிலான விசாக்களை இரத்து செய்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில அரசியல்வாதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பரிந்துரைகளுக்கு அமைய சுவிட்சர்லாந்துக்கு தப்பிச் செல்ல சிலர் முயற்சித்து வருகின்றனர்.

சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் காரணமாக இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்து சிலர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சுவிட்சர்லாந்தில் அகதி அந்தஸ்து பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு அகதி அந்தஸ்து கோருவோர் பற்றிய தகவல்கள் சுவிட்சர்லாந்து அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. இதன் காரணமாகவே மனிதாபிமான அடிப்படையில் விசா வழங்கும் நடைமுறையை சுவிட்சர்லாந்து அரசாங்கம் இரத்து செய்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனவர்களென்று எவரும் இல்லையென்றால் வீதியில் அலையும் பெண்களுக்கு விசரா பிடித்துள்ளது?



# சம்பந்தன் கேள்வி

(கொழும்பு)

**இலங்கையில் காணாமல் போனவர்களென்று எவரும் இல்லையென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார். அப்படியானால் தமது உறவுகளைக் காணாது தெருவழியில் அலைந்து திரியும் பெண்களுக்கு விசரா பிடித்துள்ளது? என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.**

இலங்கையில் காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லை. இவ்விடயம் தொடர்பில் சர்வதேசத்தினால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கருத்துக்கேட்டபோதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கைதானவர்கள், சரணடைந்தவர்கள் என்று பெருமளவானோர் காணாமல் போயுள்ளனர். இந்தநிலையில் அரசாங்கத்தின் முக்கிய அதிகாரியொருவர் இவ்வாறு கருத்துக் கூறுவதை என்னவென்று சொல்வது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல்போனோர் விவகாரம் தொடர்பில் ஆணைக்குழு ஒன்றினை நியமித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவே பரிந்துரை செய்துள்ளது.

இந்நிலையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட குழுவொன்றின் விசாரணை அறிக்கையினை வைத்துக்கொண்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பொறுப்புவாய்ந்த அதிகாரியுமான கோத்தபாய ராஜபக்ஷ கருத்துக்கூறுவது தவறானதாகும்.

ஆணைக்குழுவினை அமைத்துக் காணாமல் போனோரது மனைவிமார், பெற்றோர், உறவினர்களென பலதரப்பட்டவர்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டு ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

மனைவி மற்றும் பிள்ளைகளின் கண் முன்னாலேயே கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் இவ்வாறு கருத்துக்கூறுவதை என்னவென்று சொல்ல முடியும். தாம் எதனையும் கூறலாம் என்ற நிலையே இங்கு காணப்படுகின்றது.

காணாமல் போனோர் விவகாரத்தில் பிரதான காரணியாக இராணுவத்தினரே காணப்படுகின்றனர். இந்நிலையில் இராணுவக் குழுவொன்றின் அறிக்கையினை வைத்துக் கொண்டு இலங்கையில் காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லையென பொறுப்பு வாய்ந்த அதிகாரியான கோத்தபாய ராஜபக்ஷ கூறுவது தவறான கருத்தாகும். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றார். (அ-2)

## தேசிய கீதத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கையை ஏற்க முடியாது

### *பீடாதிபதி நாபன பத்மசிறி*

தேசிய கீதத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என ராமன்ய நிக்காயாவின் பீடாதிபதி நாபன பத்மசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதத்திற்கு தமிழ்மொழியை சேர்ப்பதனால் இல்லாத பிரச்சினைகள் உருவாகும். 40 ஆம் ஆண்டில் தேசிய கீதம் உருவாக்கப்பட்டது. அனைத்து இனங்களையும் உள்ளடக்கும் வகையிலேயே தேசிய கீதம் உருவாக்கப்பட்டது.

தற்போதைய தேசிய கீதம் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தேசிய கீதத்திற்கு அனைத்து மக்களும் கௌரவம் அளிக்கின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளே இந்தப்பிரச்சினையை தூண்டிவிடுவதாக நாபன பத்மசிறி தேரர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

## மீன் குஞ்சுகளை வழங்குமாறு நன்னீர் மீன்பிடியாளர்கள் கோரிக்கை


வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித்தொழில் தற்போது பாதிப்படைந்துள்ளதாக நன்னீர் மீன்பிடிப்பாளர் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில்அவர்கள்தெரிவிக்கையில்,

வவுனியாவில் கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக குளங்களில் நீர் வற்றியிருந்த போது மீன்கள் அனைத்தும் இறந்து விட்டன. அதன் பின்னர் ஏற்பட்ட மழையினால் குளங்களுக்கு நீர் வரத்து ஏற்பட்டமையினால் வவுனியா மாவட்ட நன்னீர் மீன்பிடிப்பாளர் சங்கம் மற்றும் சில நிறுவனங்களின் உதவியுடன் குளத்தில் குறிப்பிடத்தக்கதான மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

எனினும் அவை இனப் பெருக்கம் செய்வதற்கு முன்னதாகவே கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக குளங்கள் நிரம்பி வழிந்தமையினால் மீன் குஞ்சுகள் வெளியேறியுள்ளதுடன் பெரிய மீன்களின் பெருக்கமும் இல்லாமல் போயுள்ளது .

இதன்காரணமாக தற்போது மீன்கள் பிடிபடுவது குறைவாக உள்ளதுடன் போதுமான மீன்களும் குளத்தில் காணப்படவில்லை. எனவே எமது தொழில் தற்போது பாதிப்படைந்துள்ளது. நாளொன்றுக்கு 200 அல்லது 300 ரூபாவுக்கே வருமானம் கிடைக்கும் நிலையே தற்போது காணப்படுகிறது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நிறுவனங்களும் மீன் குஞ்சுகளை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (அ-250)



யாழ். எயிட் நிறுவனத்தினால் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான செயற்பாட்டின் கீழ் யாழ். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கல்வி கற்கும் பெற்றோரை இழந்த மற்றும் நலிவுற்ற நிலையில் கல்வியை தொடரும் மாணவர்களின் கற்றலுக்கான ஒரு தொகுதி உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## வெளிநாட்டு வேலைக்கு செல்வதை தடுக்க முடியாது

### *அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு*



(கொழும்பு)

பெண்கள் வெளிநாடுகளில் வேலைவாய் ப்பு பெற்றுக் கொள்வதனை தடுக்க முடியாது என அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

எனினும் வெளிநாடுகளில் வேலைவாய் ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களின் பாது காப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும். வேலைவாய்ப்புகளுக்காக பெண் களை வெளிநாட்டுக்கு அனுப்புவது தொடர் பான சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப் படவுள்ளது.

வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக செல்லும் பெண்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பு அளித்து வருகின்றனர்.

வெளிநாடு செல்வதற்கு முன்னதாக விசேட பயிற்சிகளை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ரம்புக்வெல தெரிவித்து ள்ளார். (அ-2)

## அ. முகாமைத்துவ உ. சங்க நிர்வாகிகள் தெரிவு

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் 13 ஆவது நடப்பாண்டிற்கான நிர்வாகசபை தெரிவிற்கான கூட்டம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் இந்த ஆண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர்களாக தலைவராக தா.தர்மரட்ணம், செயலாளராக திருமதி.கு. சறோசா, பொருளாளராக செல்வி. பத்மினி லூசியா ஆகியோரும் உப தலைவராக எஸ். ஜெயசங்கர், உப செயலாளராக க. தயாபரன் ஆகியோரும் உறுப்பினர்களாக கணேசமூர்த்தி, உதயசூரியன், இராசநாயகம், திருமதி புஸ்பபாலி, விஜயகுமார், சுரேஸ்சந்திரன், பரமானந்தம், திருமதி.தர்சினி, திருமதி சிவாசினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-2)

## புலிகளை தோற்கடியுங்கள்; கோரினாராம் டபிள்யூ. புஸ்

### ஜனாதிபதி தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்குமாறு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஸ் தம்மிடம் தனிப்பட்ட ரீதியில் விளக்கமளித்ததாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இலங்கைக்கான முன்னாள் தூதர் பற்றீசியா புட்டினீஸ் இலங்கையில் பதவியேற்ற பின்னர் 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதியுடன் தனிப்பட்ட சந்திப்பை நடத்தினார்.


இதன்போது தமது கருத்தை வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகளை தோற்கடிக்குமாறு அமெரிக்கா தமக்கு ஊக்கமளித்தது. அதேநேரம் தற்போது இடம்பெயர்ந்தோர் விடயத்தில் அந்த நாடு தம்மை விமர்சிக்கிறது என்று குறிப்பிட்டார்.

போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாக கூறி அமெரிக்கா தமக்கு மற்றும் நாட்டுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதையும் மஹிந்த ராஜபக்ஷ பற்றீசியாவிடம் முறைப்பாடாகத் தெரிவித்துள்ளார். இதனை பற்றீசியா அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 27 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



டயரி எழுதும் பழக்கம் உண்டு சின்னப்பாண்டிக்கு; ஆனால் அன்றாடம் அன்று. எப்போதெல்லாம் வலிக்கிறதோ அப்போதெல்லாம்.

அன்று வலித்தது.

ஒரு கவலை மேகம் மனசில் மையமிட்டது; கண்ணின் ஓரம் சிறு சாரல் தூறியது. எழுதென்று சொன்னது பொறி ஐந்திலும் பற்றிய பொறியொன்று.

எழுதினான்.

•••••

விவசாயக் குடும்பத்தில் பட்டதாரியாகத் துடிக்கும் எல்லா இளைஞனுக்கும் ஏறக்குறைய என் நிலைதான்; என் வலிதான்.

மலையிலிருந்து விறகு சுமந்திறங்கும் ஒரு கற்பிணியைப்போல இருபாரங்களோடு பயணிக்கிறேன் நான்.

முதுகில் குடும்பம் என்னும் நிகழ்காலம்; நெஞ்சில் இலட்சியம் என்னும் எதிர்காலம்.

குறு விவசாயக் குடும்பத்தில் பிறந்த எல்லா இந்திய இளைஞனுக்கும் உறவுகளும் கட்டமைப்புகளும் சற்றொப்ப ஒன்றுதான். எனது கட்டமைப்பு இன்னும் கொஞ்சம் சிக்கலானது என்று சொல்லலாம்.

செத்துச் செத்து பிழைக்கும் ஒரு தகப்பன்; செத்தும் சாகாத ஒரு பெரியப்பன். குடும்பத்தை ஏற்றுக் கொள்வதற்காக வாழ்க்கையை புறம் தள்ளிய ஒருதாய்.

குடும்பத்தின் படித்த சுரண்டல்காரனாய் ஓர் அண்ணன்; நாற்றுநடப் போகிறவள் 'ஷு' அணிந்து கொள்ள ஆசைப்படுவதைப்போல, கிராமத்துக்குள் நகர வாழ்க்கை வாழ ஆசைப்படும் அண்ணி.

கிராமத்தோடும் சேர முடியாமல்-நகரத்தோடும் வாழ முடியாமல் திரிசங்கு சொர்க்கத்தில் ஏதுமறியாக் குழந்தைகள்.

உள்ளங்கை மாதிரி நிலம்; அதில் சரிபாதி அரிவாள் வெட்டு. உழக்கு மாதிரி ஒரு வீடு. இன்று உழக்குக்குள் ஒரு சுவர்.

ஒரு நம்பிக்கையிலும் நான்.

என்னை மட்டும் இப்படிச் சபித்துவிட்டாயே கடவுளே என்று விசனப்படும் இளைஞன் விவரமில்லாதவன். கடவுள் சமத்துவக்காரர்; குறு, சிறு விவசாயிகளையெல்லாம் அவர் வறுமை என்னும் ஒரே அச்சில்தான் வார்த்திருக்கிறார். அதனால் மனமே துன்புறாதே; துயரச் சமுத்திரத்தில் நீயும் ஒருதுளி.

•••••


ஒரு விவசாயிக்கு நிலம் என்பது நிலம் மட்டுமல்ல; அடையாளம்; பிடிமானம். ஒரு மனிதனை ஓர் ஊரில் இருத்தி வைக்கும் வேர்.

அதனால்தான் கடன்கட்டி நிலம் மீட்பது என் தந்தையின் தீராத கனவாய் நீள்கிறது. ஆனால், அந்தக் கனவின் நிறைவேற்றம் அவர் கையில் மட்டுமா இருக்கிறது?

விட்டுப் போயிவிட்டார்கள். கார்ப்பொரேட் நிறுவனங்கள் என்னும் நிலங்கொத்திப் பறவைகள் இன்னும் எத்தனை நாளைக்குக் கொத்தாமல் விட்டு வைக்கும் எங்கள் குறுந்தோட்டத்தை?

விழி பிதுங்குகிறது விவசாயம். வேறெந்த வேலைக்கும் தான் லாயக்கில்லை என்று முடிவெடுத்தவன் மட்டுமே விடாமல் பிடித்து வைத்திருக்கிறான் விவசாயத்தை.

கடன்வாங்கிக்கூட விவசாயம் பார்க்கலாம் இன்றைக்கு. ஆனால், எங்கு போய்த் தேடுவது வேலைக்கு ஆட்களை? இன்று களையெடுக்கும் மூதாட்டிதான் கடைசித் தலைமுறை; இன்று கலப்பை பிடிப்பவன்தான் கடைசி மனிதன். விவசாயத்தை விட்டு வெளியேறுகிறான் படித்தவன். அவனுக்கு விவசாயம் என்பது அழுக்கு அல்லது இழுக்கு அல்லது இழப்பு.



காலவித்தியாசம்

ஆகாயத்தைத் தொட்டுப் பிடிக்கும்
ஆர்ப்பாட்டங்கள் ஒரு காலம்
ஆகாயத்தை நெஞ்சுக்குள்ளே
அழைத்துக் கொண்டதும் ஒரு காலம்

பணந்தான் உந்தன் எஜமான் என்று
பதறித் திரிந்தது ஒரு காலம்
பணந்தான் உந்தன் சேவகன் என்று
பாடங்கண்டதும் ஒரு காலம்

காதல் இன்றேல் சாதல் என்றே
கவிதை சென்னதும் ஒரு காலம்
காதல் என்பது சந்தர்ப்பந்தான்
கண்டுதெளிந்தது ஒருகாலம்

-வைரமுத்து-

ஏழைகளைச் சுரண்டும் வர்த்தக நிறுவனங்களின் கையிலிருக்கிறது. வல்லரசுகளிடம் ஏமாந்துபோகும் இந்தியாவின் கையிலிருக்கிறது. பூமியை ஏமாற்றும் வானத்தின் கையிலிருக்கிறது. ஆங்கிலக் கட்டுரையில் அமெரிக்கப் பெண்ணொருத்தி எமிலி சொன்னதுபோல் ஐ.நா. சபையின் கையில் கூட இருக்கிறது.

என் தந்தை பாவம்! தேசத்துக்குள் போய்விடுகிறேன் என் தந்தையை



ஊர்கூடிப் பாடுகிற கூட்டுப் பாட்டல்லவோ விவசாயம்? ஊருக்குத்தான் ஜாதிபேதம் உண்டு; நிலத்துக்கில்லை. சகல ஜாதிக்காரர்களும் ஒரேநேரத்தில் உழுது நட்டுக் கும்மியடிப்பார்கள். ஊர் நிலத்தில் வெளியூர் ஆட்கள் வேலை செய்யக் கூடாது என்பது எழுதப்படாத விதி. வெளியூர்க்காரர்களுக்கு அனுமதியில்லை; இன்று உள்ளூர் ஆட்களோ கிடைப்பதில்லை.

பாத்தி கட்ட ஆள்தேடி அரசமரத்

# முதுகில் குடும்பம் என்னும் நிகழ்காலம்; நெஞ்சில் லட்சியம் என்னும் எதிர்காலம்

•••••

பிரதான சாலையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பிரிந்து நிற்கும் ஒரு கிராமம்.

சாராயத்திலும் தொலைக்காட்சியிலும் இலவசத்திலும் கிறங்கிக் கிடக்கும் கிராமத்து மக்கள்.

எல்லாமறிந்தும் ஏதொன்றும் செய்யவியலாமலும் ஆனால் ஏதோ

நினைத்தால்; தந்தைக்குள் போய் விடுகிறேன் என் தேசத்தை நினைத்தால். அறுபது கோடி இந்திய விவசாயிகள் என்ற நீளச் சங்கிலியில் என் தந்தையும் ஒரு கண்ணி. இந்த ஒரு கண்ணிக்கு மட்டும் தங்க முலாம் பூசுவது சாத்தியமாமா?

சமூக அடுக்குகள் சரிகின்றன. எங்கள் நி[illegible] பல விவசாயி[illegible]

தடி மந்தையில் அலைகிறார் என் தந்தை. முன்பெல்லாம் விவசாய வேலை வாய்ப்புக்கு அங்கே ஒரு கூட்டம் கூடி நிற்கும். இப்போது வீடுகளை நிராகரித்த குழந்தைகளும், வீடுகளால் நிராகரிக்கப்பட்ட முதியவர்களும்தவிர மந்தையில் யாருமில்லை. ஓராசிரியர் பள்ளி மாதிரி ஒரேர் உழவனாய் நிலம் கிழிக்கிறார் என் தந்தை. இதில் [illegible] விளையும்- கஜானா வழியும்- [illegible]ழியும்- பத்திரம் மீளும்- பரம்பரை வாழும் என்றெல்லாம் வேறு கனவு காண்கிறார்.

•••••

உழைத்த தலைமுறை உளுத்த தலைமுறையாக்கப்பட்டுவிட்டது. துய்ப்புக் கலாசாரம் உழைக்கும் நேரத்தை உறிஞ்சிவிட்டது.

இலவசத்தில் வாழப் பழகியவர்கள் மதுரசத்தில் மூழ்கிப்போனார்கள். உழைக்க முடியாத ஊனமுற்றவர்களுக்கும், கைவிடப்பட்ட முதியவர்களுக்கும், அனாதைக் குழந்தைகளுக்கும், ஆதரவற்ற நோயாளிகளுக்கும் தானே இலவசம் பொருந்தும்! உற்பத்தி பெருக்காத இலவசம் உற்பாதம் தானே விளைக்கும்?

•••••

மதுக்கடை வாசல்களில் தவணை முறையில் செத்துக் கொண்டிருக்கிறார்கள். பல விவசாயத் தொழிலாளிகள்.

மது என்பது உலகக் கலாசாரம் தான்; ஒழிக்க முடியாதுதான்; மனித சமுதாயத்தின் பழம் பானம்தான். ஆனால், அருந்துபவனுக்கும் அருந்தப்படுவதற்குமான இடைவெளியில் இருக்கிறது மதுவின் நன்மை தீமை.

பெரும்பாலும் மேட்டுக்குடி மக்கள் மதுவை அருந்துகிறார்கள். ஆனால், உழைக்கும் மக்களை மது அருந்துகிறது. மேல்தட்டு மக்களின் உபரிப் பணத்தில் கை வைக்கும் மது, அடித்தட்டு மக்களின் உணவுப் பணத்திலேயே கை வைக்கிறது.

இந்த டயரி எழுதப்படும் இந்த ஆண்டில் ஒரு குடும்பத்தின் சராசரி வருமானம் 3000 ரூபாய். ஆனால் அதே குடும்பம் மதுவுக்குச் செலவிடுவது 12000 ரூபாய்.

தங்களுக்கெதிராய் இந்தியார்கள் கத்தியேந்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் கள்ளுக்கடை திறந்தார்கள் வெள்ளையர்கள். தங்கள் கேளிக்கை விடுதிகளில்கூட இந்தியர்களை அனுமதித்தார்கள். புட்டிக்குள் அடக்கி வைத்திருந்தார்கள் தங்களுக்கெதிரான பூதத்தை. ஜனநாயக இந்தியாவிலும் போராடுவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. ஆனால், பூதம் மட்டும் இன்னும் புட்டிக்குள்ளேயே இருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை அச்சுறுத்துவதன்மூலம் தமிழ்த் தேசியத்தை சிதைக்க முடியாது

## அரியம் எம்.பி.தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தியோ அல்லது பழிவாங்கியோ அல்லது கொலை செய்தோ தமிழ்த் தேசியத்தை சிதைக்க முடியாது. இது கடந்த கால வரலாறு. இதனை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நாடாளு மன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்தெரிவித்தவைவருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கின்றோம். ஆனால் எம்மைத் திட்டமிட்டுப் பழிவாங்கும் எம்மீது தாக்குதல் நடத்திக் கொலை செய்யவும் சிங்களப் பேரினவாதமும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் குறியாகவுள்ளன.

அதேவேளை எம்மை அடிபணிய வைத்து தமிழ்த் தேசியத்தை சிதைக்கவும் இலங்கையரசு கங்கணம் கட்டி நிற்கிறது. ஆனால் எம்மை எவராலும் அடிபணிய வைக்க முடியாது .இது கடந்த கால வரலாறு.

யுத்தம் நடைபெற்ற 2005 -2008 ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ்க் கூட்டமைப்பின் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களான மட்டக்களப்பு மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம், கொழும்பில் மாமனிதர் ரவிராஜ், வன்னியில் மாமனிதர் சிவநேசன் ஆகியோரை நாம் இழந்தோம். ஆனால் தமிழ்த் தேசியத்தை சிதைக்க முடிந்ததா? நாம் மேலும் தைரியத்துடனே நிற்கின்றோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொலைசெய்யும் முயற்சியில் இலங்கை அரசு குறியாகவுள்ளது.

வன்னியிலிருந்து கொழும்பு நோக்கி வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் வாகனம் மீது இடைவழியில் வைத்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவர் அதிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

இது இவ்வாறிருக்க அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனை விசாரணைக்கு அழைத்து அச்சுறுத்தி சி.ஐ.டியினர் அவரை பழிவாங்கும் நடவடிக்கைகளில் தற்போது இறங்கியுள்ளனர்.

அவரின் அலுவலகம் இரண்டு தடவைகள் சோதனையிட்டப்பட்டுள்ளன. அவரின் ஆதரவாளர்கள் இருவர் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பிரித்து வைக்க முற்படுகின்றது இந்த அரசு.

ஆனால் தமிழ் மக்கள் முட்டாள்கள் அல்லர். எனவே தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தியோ அல்லது பழிவாங்கியோ அல்லது கொலை செய்தோ தமிழ்த் தேசியத்தை சிதைக்க முடியாது.

இதனை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

# அரசியல் செயற்பாடுகளை மட்டுமே முன்னெடுக்க வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் உறுப்பினர்களுக்கு உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் கட்சியின் அரசியல் செயற்பாடுகளை மட்டுமே முன்னெடுக்க வேண்டும். அதற்கு அப்பால் சென்று தனிப்பட்ட ரீதியிலான வேலைகளை செய்ய முடியாது என்று அக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

அவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக கைவிடுமாறு விசேட கட்டளையொன்றை நேற்று முன்தினம் விடுத்துள்ளார்.

கட்சியின் யாப்பின் பிரகாரம் கட்சி தலைமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே இந்த கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் செயற்பாடுகளை கட்சியின் பொதுச்செயலாளர் தெளிவுபடுத்துவார். அதற்கு அப்பால் சென்று பொது வேலைகளை செய்ய வேண்டுமாயின் கட்சி அங்கத்தவர் மற்றும் அமைப்பாளர் பதவிகளில் இருந்து விலகி பொது வேலைகளை முன்னெடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-2)

### அரச, தனியார் பேருந்துகள்

# போக்குவரத்து விதிமுறைகளை மீறினால் முறையிட முடியும்

யாழில் போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் போக்குவரத்து விதிமுறைகளினை மீறினால் அது தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிட முடியும்.

அளவுக்கு அதிகமான பயணாளிகளினை பேருந்தில் ஏற்றுதல், வாகன நெரிசல் மிக்க பகுதிகளில் பயணிகளினை ஏற்றுதல் போன்றவற்றிற்கு எதிராகவும் பொதுமக்களினால் செய்யப்படும் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் ஏற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகள் அளவுக்கு அதிகமான பயணிகளினை ஏற்றிச் செல்வதனால் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

போக்குவரத்து பேருந்துகளினால் ஏற்படும் விபத்துக்களினை தவிப்பதற்கு வாராந்தம் போக்குவரத்து பேருந்துகளின் சாரதிகளுடன் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன்சிகேரா தலைமையில் சந்திப்பொன்று இடம்பெற்று வருகின்றது.

இச்சந்திப்பில் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பிலான விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன என்றார்.

பலவிதமான சந்திப்புக்கள், போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் இடம் பெறுகின்ற போதிலும் தனியார் பேருந்துகள் அளவுக்கதிகமான பயணிகளினை ஏற்றுவதனை கைவிடுகின்றனர் இல்லை என யாழ். ஊடகவியலாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கு பதிலளித்த யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம் ஜெப்றி,

பேருந்துகளின் போக்குவரத்து மீளல் தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றால்தான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும்.

போக்குவரத்து பொலிஸ் இவ்விதி மீறலுக்கு நடவடிக்கை எடுக்க முடிகின்ற போதிலும் சில விதிமீறலுக்கு பொதுமக்கள் முறைப்பாடு செய்து அதற்கான தீர்வினை பெற முடியும் என்றார். (அ-4)

# களை நெல்லின் தாக்கம் வவுனியாவில் அதிகரிப்பு

## கவனம் செலுத்த கோரிக்கை

வவுனியா மாவட்டத்தில் களை நெல்லின் தாக்கம் ஏற்பட்டுள்ளமையினால் விவசாயிகள் அது தொடர்பில் பூரண கவனம் செலுத்த வேண்டும் என விவசாய திணைக்களத்தின் விரிவாக்கற்பிரிவு பாடவிதான உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக வீடி ரைஸ் எனப்படுகின்ற களை நெல்லின் தாக்கம் இனம் காணப்பட்டுள்ளது. இது நெற்செய்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையில் தற்போது உள்ளது. இக்களையானது நெற்செய்கை செய்யப்படும் பிரதேசங்களில் காணப்படும்.

இக்களையானது நாம் செய்கை மேற்கொள்ளும் இனத்திற்கும் இயற்கையாகவே வரும் இனத்திற்கும் தானாக இடம்பெறும் கலப்பினால் உருவாகி வளரும் ஓர் புதிய இனமே இதுவாகும்.

இதனை விவசாயிகள் அடையாளம் காணுவது மிகவும் கடினமானது .ஏனெனில் நாம் பொதுவாக செய்கை பண்ணும் இனத்தோடு ஒத்து காணப்படும் இப்பயிரில் இருந்து கதிர் வெளிவரும் வரைக்கும் ஒரே மாதிரியான குணவியல்பை கொண்டிருக்கும். எனவே கதிர் வந்த பின்னரே இனம் காணமுடியும்.

இது நாம் சாதாரணமாக பயிர் செய்யும் இனத்திற்கு முன்னராகவே கதிர் வந்து முதிர்ந்து விடும். இது சிவப்பு நிறமாக காணப்படும். இக்களை நெல்லினை நாம் கைகளினால் வெட்டியே அகற்ற வேண்டும். இக்களை காணப்படும் நெல்லினை விதை நெல்லாக பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இந்த இரண்டு முறையையும் நாம் பின்பற்றி வந்தால் எதிர்காலத்தில் இந்த களை நெல்லின் தாக்கத்தை குறைத்துக் கொள்ள முடியும் என்றார். (அ-2)

# நெல்சிப் திட்டத்தின்கீழ் வீதிப்புனரமைப்பு



யாழ்.வடமராட்சி பகுதியிலுள்ள அல்வாய் கிராமத்தின் முக்கியமான வீதிகளில் ஒன்றான அல்வாய் சாமணந்தறை வீதி 33இலட்சம் ரூபா செலவில் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக சேதமடைந்திருந்த குறித்த வீதியை புனரமைத்து தருமாறு கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தினர் தொடர்ந்து விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக நெல்சிப் திட்டத்தின் கீழ் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. பிரதான வீதிகள் மட்டும் புனரமைப்பு பணிகளுக்குட்படுத்தப்பட்டு வந்த நிலையில் குறித்த வீதியும் புனரமைப்பு பணிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. (செ-6)

# விசாரணை வழக்குகளில் பங்கேற்க போவதில்லை

## சட்டத்தரணி குணசேகர

புதிய பிரதம நீதியரசர் அங்கம் வகிக்கும் நீதவான் குழாம் விசாரணை செய்யும் வழக்குகளில் பங்கேற்கப் போவதில்லை என சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அங்கம் வகிக்கும் எந்தவொரு வழக்கு விசாரணைகளுக்காகவும் ஆஜராகப் போவதில்லை.

தற்போதைய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்ட முறைமை மற்றும் அவரின் தகுதி குறித்து திருப்தி அடைய முடியாது. மனச்சாட்சிக்கு இணங்க உச்ச நீதிமன்றில் பிரதம நீதியரசர் விசாரணை செய்யும் வழக்கொன்றில் ஆஜராக முடியாது.

இது தொடர்பில் சேவை பெறுநர்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளேன் என எஸ்.எல். குணசேகர தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டப்படி சந்திப்பேன் – கமல்




என் படத்துக்கு
எதிரான தடையை சட்டப்படி சந்திப்பேன்.
அதற்கான உரிமை எனக்கு உள்ளது. யதார்த்தத்தை
நம்பியே நான் களத்தில் நிற்கப்போகிறேன்.
இதுபோன்ற கலாச்சார தீவிரவாதம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனக்
கொதித்திருக்கிறார் நடிகர் கமலஹாசன். விஸ்வரூபம் தடைசெய்யப்பட்ட பின்
இணையத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கமலகாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அதன் விபரம் வருமாறு.
விஸ்வரூபம் படத்துக்கும், எனக்கும் பலர் ஆதரவு தெரிவித்த நிலையில் திடீரென அந்த
படம் என்னுடைய இஸ்லாமிய சகோதரர்களுக்கு எதிரானதாக உருவாக்கப்பட்டதாக கருத்து
வெளியிடப்பட்டுள்ளது. இது எனக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. இந்த படம் எந்த வகையில் முஸ்லிம்களுக்கு
எதிரானது என்று எனக்குத் தெரியவில்லை.
என்னுடைய அறிக்கைகள் அந்த சமுதாயத்துக்கு ஆதரவாக இருந்ததால், என்னை இஸ்லாமியர்களின்
அனுதாபியாக முத்திரை குத்தியுள்ளன. எப்போதுமே நான் ஒரு நடிகன் என்ற முறையில் எனது கடமைக்கும்
பலபடி மேலாக சென்று மனிதாபிமான முறையில் அச்சமுதாயத்துக்காக குரல் கொடுத்துள்ளேன்.
ஒற்றுமைக்கான இந்தியா என்ற அமைப்பில் நான் உறுப்பினராக இருக்கிறேன். இந்த அமைப்பு இந்து-
முஸ்லிம் ஒற்றுமைக்காக பாடுபட்டு வரும் ஒரு அமைப்பாகும்.
ஒரு மதத்தை அவமரியாதை செய்துவிட்டதாக என் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் என்னை காயப்படுத்தி
உள்ளன. அதோடு என்னுடைய உணர்வுகள் உண்மையிலேயே அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.
என்னை ஈவு, இரக்கம் இல்லாமல், ஒரு வாகனம் போல பயன்படுத்தி சிறு குழுக்கள் அரசியல் வாழ்வும்,
லாபமும் பெற நினைக்கின்றன. நீங்கள், நீங்களாக இல்லாதபோது பிரபலங்கள் மீது இத்தகைய தாக்குதல்
நடத்தி மிகப்பெரிய கவனத்தை ஈர்ப்பது ஒரு வழியாக உள்ளது.
இத்தகைய நிகழ்வுகள் மீண்டும், மீண்டும் நடக்கின்றன. என்னுடைய விஸ்வரூபம் படத்தைப் பார்க்கும்
நடுநிலையான, தேசப்பற்றுள்ள எந்த ஒரு முஸ்லிமும், நிச்சயம் அதை ஒரு பெருமையாகத்தான்
கருதுவர். அந்த நோக்கத்துக்காகத்தான் இந்த படம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
என் படத்துக்கு எதிரான தடையை சட்டப்படி சந்திப்பேன். அதற்கான உரிமை எனக்கு
உள்ளது. யதார்த்தத்தை நம்பியே நான் களத்தில் நிற்கப்போகிறேன்.
இதுபோன்ற கலாச்சார தீவிரவாதம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
இந்த சூழ்நிலையில் இணையத்தளம் வாயிலாக எனக்கு ஆதரவு
தெரிவித்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
இவ்வாறு நடிகர் கமலஹாசன் அதில் கூறியுள்ளார்.

## மனமுருகும் ரஜனி

விஸ்வரூபம்' படம் பற்றி நடிகர் ரஜனிகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த சில நாட்களாக 'விஸ்வரூபம்' திரைப் பட பிரச்சினைகளை அறிந்து மிகவும் வேதனைப் படுகிறேன்.

கமல் எனது 40 ஆண்டுகால நண்பர். யாருடைய மனதையும் புண்படுத்தும்படியாக நடந்து கொள்ளா தவர் என்பதை நன்கு அறிவேன். இத்திரைப்படம் தணிக்கையான பிறகு தியேட்டர்களில் வெளியிடு வதற்கு முன்பே இஸ்லாமிய சகோதரர்களின் வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு திரையிட்டு காண்பித்ததிலிருந்தே இஸ்லாமிய சமூகத்தின் மீது கமல் கொண்டுள்ள மதிப்பையும், மரியாதையையும் தெளிவாக தெளிவாக காட்டுகிறது.


மேலும் கமலஹாசன் இந்த படம் தயாரிக்க சுமார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கு என்னென்ன சிரமங்கள் அனுபவித்திருக்கிறார் என்பதை அறியும்போது என் மனம் கலங்குகிறது.

கமல் ஒரு சாதாரண கலைஞன் அல்ல. தமிழ் சினிமாவை உலக அளவில் கொண்டு செல்வதற்கு ஒரு காரணமாக உள்ள மகா கலைஞன். இவையெல்லாம் மனதில் கொண்டு இந்த படத்தை முழுசா தடை செய்யனும் என்ற கருத்திலிருந்து மாறி, கமல் வந்த பிறகு கலந்து பேசி [illegible] பாதிப்பு வராத வகையில் சரிசெய்து படத்தை வெளியிட உறுதுணையாக இருக்குமாறு [illegible] வாழ்த்துக்களுடன் இஸ்லாமிய சகோதரர்களை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொடும்பாவி எரிப்பு; கமல் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கமலின் 'விஸ்வரூபம்' படத்துக்கு முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள கமல் அலுவலகம் முன் கொடும்பாவி எரிப்பு போராட்டம் நடந்தது. ஏற்கனவே தனக்கு சிலர் மிரட்டல் விடுத்ததாக கமல் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இதையடுத்து ஆழ்வார் பேட்டையில் உள்ள கமல் அலுவலகத்துக்கும் கொட்டிவாக்கத்தில் உள்ள கமலஹாசன் வீட்டிற்கும், பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. எவரேனும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் கைதுசெய்து அழைத்துசெல்ல பொலிஸ் வாகனங்களும் தயார் நிலையில் உள்ளன.



## படம் ஏன் தடைசெய்யப்பட்டது?

### முஸ்லிம் அமைப்புக்கள் கூறும் காரணங்கள்

✔ விஸ்வரூபம் படத்தில் தீவிரவாதியாக காட்டப்படும் நபர் முஸ்லிமாக காட்டப்படுகிறார். மேலும் எந்த ஒரு தீவிரவாத செயலையும் செய்யும் முன்பு அவர் நமாஸ் செய்வது போல காட்டி விட்டு பின்னர் கொலைச் செயலைக் காட்டுகின்றனர்.

✔ இஸ்லாமியர்களின் புனித நூலான திருக்குரானை தீவிரவாதிகளின் கையேடு போல காட்டியுள்ளார் கமல்ஹாசன். அதாவது தீவிரவாத செயலில் ஈடுபடுவோர் கையில் திருக்குரான் இருப்பது போலவும், அதில் உள்ள வாசகங்களைப் படித்து விட்டு அவர்கள் தீவிரவாத செயலில் ஈடுபடுவது போலவும் காட்டுகிறார்.

✔ தீவிரவாதிகளாக சித்தரிக்கப்படும் இஸ்லாமியர்கள், மனிதர்களின் கழுத்தை அறுப்பதை தத்ரூபமாக சித்தரித்துள்ளனர். இது இஸ்லாயமிர்கள் குறித்த பொதுமக்கள் மனதில் தவறான எண்ணத்தை பதிய வைக்கும் அப்பட்டமான முயற்சியாகும்.

✔ மசூதிகளையும், பள்ளிவாசல்களையும் தீவிரவாதிகளின் புகலிடம் போல காட்டியுள்ளனர். உலமாக்களை தீவிரவாத தலைவர்கள் போல காட்டியுள்ளனர். அல்லாஹ அக்பர் என்ற புனித வாசகத்தை தீவிரவாதிகளின் சங்கீத பாஷை போல காட்டியுள்ளனர்.

✔ அமைதிக்குப் பெயர் போன புறாக்களையும் விடவில்லை கமல். அவற்றை அமெரிக்காவிலிருந்து யுரேனியம் கடத்தி வருவதாக காட்டியுள்ளார். மேலும் ஜிஹாத் செய்து சொர்க்கத்தை அடைவோம் என்று முஸ்லிம்கள் சொல்வது போலவும் காட்டியுள்ளார்.

✔ முல்லா உமருடன் கமல் உரையாடுவது போல காட்சி வருகிறது. அதில் முல்லா உமர் தமிழில் பேசுகிறார். அதுகுறித்து கமல் கேட்கும்போது எனக்கு தமிழ் பிடிக்கும், மதுரை, கோவையில் நான் தங்கியுள்ளேன். தமிழ் ஜிஹாதிகள்தான் சிறந்தவர்கள், நம்பிக்கையானவர்கள் என்று கூறி தமிழர்களையும் மோசமானவர்களாக சித்தரித்துள்ளார். மொத்தத்தில் முஸ்லீம்கள் என்றால் தவறானவர்கள், மோசமானவர்கள், முரட்டுத்தனமானவர்கள், எதையும் செய்யத் துணிபவர்கள், தேசபக்தி இல்லாதவர்கள் என்பது போல இப்படத்தில் காட்டியுள்ளார். எனவேதான் இந்தப் படத்தை எதிர்க்கிறோம் என்று கூறியுள்ளனர் இஸ்லாமிய அமைப்பினர்.

## பல இடங்களில் படம் ரிலீஸ்

அமெரிக்கா, டுபாய், மலேசியா உட்பட வெளிநாடுகளிலும் கேரளா, ஆந்திரா மற்றும் பெங்களூரிலும் விஸ்வரூபம் படம் நேற்று முன்தினம் திரையிடப்பட்டது.

ஹொலிவுட் படங்களுக்கு சவால் விடும் வகையில் மிகவும் சிறப்பாக இந்த படம் தயாரிக்கப்பட்டு இருப்பதாகவும், தமிழ் திரையுலக வரலாற்றில் இது ஒரு மைல்கல் என்றும் படத்தை பார்த்தவர்கள் ஒருமனதாக பாராட்டுகின்றனர்.

கமல்ஹாசன் இயக்கி, தயாரித்து நடித்துள்ள விஸ்வரூபம் தமிழகத்தில் 500 தியேட்டர்களில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. படம் இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரானது எனக்கூறி சில அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. படத்தை திரையிட விடமாட்டோம் என்று அறிவித்தன. அதை தொடர்ந்து தமிழக அரசு படத்துக்கு தடை விதித்தது.

தடையை எதிர்த்து கமல் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இதனை நீதிபதி கே.வெங்கட்ராமன் விசாரித்தார். '26 ஆம் திகதி படத்தை பார்த்து விட்டு 28 ஆம் திகதி உரிய உத்தரவு பிறப்பிக்கப் படும் என்று அவர் உத்தரவிட்டார். தடை நீக்கப்படாததால் தமிழகத்தில் படம் வெளியாகவில்லை. இதனால் கமல் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

எனினும் கேரளா, ஆந்திரா மாநிலங்களிலும் கர்நாடகாவில் பெங்களூரிலும் படம் திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் ரிலீஸ் செய்யப்பட்டது. திரையிடப்பட்ட தியேட்டர்களில் காலையிலேயே ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. ஐதராபாத் நகரில் பொலிஸ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒருநாள் நிறுத்தி வைக்கப்பட்டது. திருப்பதியில் 3 தியேட்டர்களில் ரிலீஸ் ஆனது.

அமெரிக்காவில் வி.ஐ.பி. காட்சி நேற்று நடைபெற்றது. ஏராளமான ஹொலிவூட் கலைஞர்கள் பார்வையிட்டுள்ளனர். 'ஒரு இந்திய படம் இவ்வளவு சிறப்பாக எடுக்கப்பட்டிருப்பது பாராட்டுக் குரியது' என்று வியப்புடன் தெரிவித்தனர். கமலின் திறமையை பாராட்டி அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். வெளிநாடுகளில் படம் பார்த்தவர்கள், படம் ஹொலிவுட் தரத்தில் இருப்பதாக சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவித்துள்ளனர். 'ஏதாவது ஒரு காரணத்தை வைத்து ஒவ்வொருவரும் தடைகேட்டால் யாரும் எதையும் சொல்ல முடியாத சூழல் ஏற்படும். அது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல" என்று பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

## தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை

விஸ்வரூபம் படத்தைத் தடை செய்ய தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது. டில்லியில் இதுதொடர்பாக மத்திய செய்தி, ஒலிபரப்புத்துறை அமைச்சர் மணீஷ்திவாரி செய்தியாளர்களிடம் கூறுகை யில், படங்களை வெளியிட அனுமதி அளிப்பது தொடர்பான விடயத்தில், தணிக்கைக்குழுவின் கருத்து மற்ற அனைத்தையும் கட்டுப்படுத்தும் என உயர் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு அளித்துள்ளது. ஒரு படத்தை தடை செய்வது என்பது மாநில அரசின் அதிகார வரம்பில் வரவில்லை. குறிப்பாக தணிக்கைக் குழு அனுமதி அளித்த பிறகு, ஒரு படத்தை தடை செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. அரசியல் சாசனச் சட்டத்தின் பிரிவு 246, இல் சினிமா படங்களை திரையிடுவதற்கு சான்றிதழ் அளிக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது என்றார்.




சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள காட்சிகளில் சில....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவின் புதிய வியூகம்..! இலங்கைக்கு..?

பொதுவாக அமெரிக்க ஜனாதிபதிகள் தமது முதலாவது பதவிக்காலத்தின்போது இரண்டாவது பதவிக்காலத்தைக் குறிவைத்தே எதையும் செய்துகொள்வார்கள். இரண்டாவது தடவையும் பதவிக்கு வரும்வரை ஆகக்கூடிய பட்சம் நிதானமாகவும், சர்ச்சைகளுக்குள் சிக்காமலும் நிலைமைகளைக் கையாள்வார்கள். ஆனால், இரண்டாவது பதவிக்காலத்தின்போது அவர்கள் அவ்வாறு நடந்துகொள்வதில்லை. ஏனெனில் மூன்றாவது பதவிக்காலம் அவர்களுக்கில்லை. ஒரு அமெரிக்கர் அடையக்கூடிய அதியுச்ச பதவி அது. அதற்கு மேல் ஒரு பதவி கிடைப்பதற்கில்லை.

ஓர் அமெரிக்க ஜனாதிபதிக்குரிய சாதனை வெளி எனப்படுவது உள்நாட்டில் அல்ல. வெளியரங்கில். அதாவது, அனைத்துலக அரங்கில்தான் அதிகபட்சம் இருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு பதவி யேற்ற அநேகமான அமெரிக்க ஜனாதிபதிகள் தங்களை, ஒரு நாட்டின் தலைவராக உணர்ந்து கொண்டதைவிட உலக நாடுகளின் தலைவர்கள் என்று உணர்ந்து கொண்டதே அதிகம் எனலாம்.

இத்தகைய விளக்கத்தின்படி பார்த்தால், ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலத்துக்குரிய சாதனைப் பரப்பு எனப்படுவது அவருடைய வெளியுறவுக் கொள்கையில்தான் தங்கியிருக்கின்றது.

எனவே, அனைத்துலக அரங்கில் அவருடைய சாதனை இலக்கை அடையத்தக்கதாகவே அவருடைய இரண்டாவது பதவிக்காலத்திற்குரிய வெளியுறவுக்கொள்கையும் அமையமுடியும். தனது இரண்டாவது பதவிக்காத்திற்குரிய பிரதானிகளை அவர் அண்மையில் நியமித்திருக்கின்றார். வெளியுறவுச் செயலராக **ஜோன் ஹரியும்** பாதுகாப்பு செயலராக **சத்ஹகெலும்**, சி.ஐ.ஏ பணிப்பாளராக **ஜோன் பிரண்ணனும்** நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவைப்போன்ற பேரரசுகளில், செயலர்கள் கொள்கைகளைத் தீர்மானிக்கிறார்கள் என்பதைவிடவும் ஏற்கனவே, வகுக்கப்பட்ட கொள்கைகளை அவர்கள் பிரதிபலிக்கிறார்கள் என்பதே பெருமளவுக்குச் சரி. நிர்ணயகரமான காலங்களில் செயலர்கள் கொள்கைகள் தொடர்பில் புதிய போக்குகளை உருவாக்குபவர்களாக மேலெழுவது உண்டு. ஹென்றி கீசிங்கரை இங்கு சுட்டிக்காட்டலாம். இப்படிப் பார்த்தால் ஒபாமாவின் நியமனங்கள் எதைப் பிரதிபலிக்கின்றன.

முதலில் அவர், யார் யாரை நியமித்திருக்கின்றார் என்று பார்க்கலாம். ஜோன் ஹெரியும், சக் ஹகெலும் வியட்நாம் யுத்தத்தின் விளைவுகளாகும். ஒபாமாவைப் பொறுத்தவரை அவர், அவருடைய வயதின் காரணமாக வியட்நாமிய ஞாகங்களுக்கு வெளியில் வந்த ஒரு தலைவராகப் பார்க்கப்படுகிறார். ஆனால், அவருடைய இரு பிரதானிகளும் வியட்நாமிய போரின் கசப்பான அனுபவங்களின் விளைவாக உருவானவர்களாக கருதப்படுகிறார்கள். வியட்நாம் போரிலே பங்குபற்றிய ஹெரி அதற்கு எதிராக திரும்பிய முன்னாள் போர்வீரர்களின் பேச்சாளராகவே பிரபல்யமடைந்தவர். அதைப் போலவே ஹகெலும் 2002இல் நியூஸ் வீக்கிற்கு வழங்கிய ஒரு பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார். "நாட்டை யுத்தத்தை நோக்கி விரைவாக இட்டுச் செல்லும் பலரும் அது இலகுவானது, விரைவானது என்று நினைக்கின்றனர். ஆனால், அவர்களில் பலருக்கு யுத்தத்தைப் பற்றி எதுவும் தெரியாது".

எனவே, ஹெரியும் ஹகெலும் போரின் கசப்பான அனுபவங்களிலிருந்து பாடம் கற்ற முன்னாள் போர்வீரர்களாகக் காணப்படுவதால் புதிய வெளியுறவுக் கொள்கையானது யுத்தவாதத்திலிருந்து ஓரளவிற்கேனும் விலகிச் செல்லலாம் என்று ஒரு தோற்றத்தைக் காட்டுகிறது.

மேலும், சக்ஹகெல் தன்னை யூதர்களுக்கு மிகநெருக்கமற்றவராக இதுவரையும் காட்டி வந்திருக்கிறார். இஸ்ரேலின் யுத்த முன்னெடுப்புகளுக்கு முழுஅளவு ஆதரவு தராதவராகவும், அதனாலேயே இஸ்லாமிய நாடுகளை நோக்கி நெருங்கிவரக் கூடியவராகவும் வர்ணிக்கப்படுகின்றார். ஆனால், பதவியேற்றபின், அவரைச் சந்தித்த செனற்றர் ஸ்கியுமர் உடன் அவர் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக கதைத்திருக்கிறார்.

மூன்றாமவர் **ஜோன் பிரண்ணன்** சர்ச்சைக்குரியதும் ஆனால், அமெரிக்கர்கள் மத்தியில் சாகச உணர்வை தூண்டவல்லதுமாகிய ஆளில்லா விமானங்களின் தாக்குதல்களை நெறிப்படுத்திய பிரதானிகளில் ஒருவரான இவர், சி.ஐ.ஏ. இன் பணிப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஆளில்லா விமானங்கள் **ட்ரோன்** என்று அழைக்கப்படுகின்றன. ஈழப்போரில் இவை வண்டு என்று அழைக்கப்பட்டன. இங்கு அவை சிறியரக வேவு விமானங்கள்தான். ஆனால், அமெரிக்காவின் **பச்சை** ஆபத்துக்கெதிரான போரில் அவை குண்டு வீச்சுவிமானங்களாக வளர்ச்சி பெற்றுவிட்டன. இஸ்லாமிய ஆயுதபாணிகளுக்கு எதிராக குறிப்பாக குறிவைக்கப்பட்ட தலைவர்கள், பிரதானிகளுக்கு எதிரான தாக்குதல்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதால் அமெரிக்கர்களுக்கு உயிர்ச்சேதம் இருக்காது. குறி பிசகினால் சாதாரண பொதுசனங்களே கொல்லப்படுகிறார்கள். பாகிஸ்தானில் மட்டும் ஆயுத பாணிகள் மற்றும் பொதுசனங்கள் உள்ளடங்கலாக சுமாராக 2000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் வெற்றிகரமானது என்று நிரூபிக்கப்பட்ட ஒரு தாக்குதல் பொறிமுறையாக அமெரிக்கர்கள் மத்தியில் பிரபல்யமுற்றிருக்கும் ரோன்கள் தொடர்பில் கடும் விமர்சனங்கள் உண்டு. முதலாவது பொதுசன இழப்பு. இரண்டாவது பிறநாட்டு வான் பரப்பினுள் அத்துமீறி நுழைவதால் சர்வதேச நெறிமுறைகள் மீறப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு. இத்தகைய விமர்சனங்களின் பின்னணியில்தான் பிரண்ணன் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

எனவே, மேற்படி நியமனங்களின் மூலம் ஒபாமா ஒருவித கலகப்புச் சமிக்ஞைகளையே வெளிப்படுத்தியிருக்கின்றார். அதுதான் யதார்த்தமும்கூட. ஏனெனில் கவர்ச்சியான இலட்சியங்கள் வெளியுறவுக் கொள்கைகளை வடிவமைப்பதில்லை. மாறாக குரூரமான கேவலமான யதார்த்தங்களே வெளியுறவுக் கொள்கையின் இறுதிவடிவம் எது என்பதைத் தீர்மானிக்கின்றன.

ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலமானது சர்வதேச அரங்கில் இருபெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் உடனடியானது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான போர். மற்றையது சீன விரிவாக்கம். இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான போரானது ஒரு கவர்ச்சியான பதாதை மட்டுமே. யதார்த்தத்தில் அது நேட்டோ விரிவாக்கம்தான். இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் நேட்டோ விரிவாக்கமே முன்னெடுக்கப்பட்டுவருகிறது. கடந்த நூற்றாண்டில் ரஷ்ய பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அமெரிக்கா ஏகப் பெருவல்லரசாக எழுச்சிபெற்றபோது, கிழக்கு ஐரோப்பாவில் புதிய சிறிய நாடுகள் பல பிரிந்து செல்ல ஊக்குவிக்கப்பட்டன. வெளித்தோற்றத்திற்கு அவை விடுதலை பெற்றதுபோலத் தோன்றினாலும் அதன் இறுதி இலக்கு எனப்படுவது சோவியத் யூனியனின் சிறகுகளை அரிவதுதான். அதாவது நேட்டோ விரிவாக்கம்தான். இதைப் போலவே அண்மை ஆண்டுகளில் அரபு நாடுகளில் தூண்டப்பட்டுவரும் அரப் ஸ்பிறிங் எனப்படும் உள்நாட்டு கிளர்ச்சிகளும் அவற்றின் இறுதி விளைவைப் பொறுத்தவரை நேட்டோ விரிவாக்கம்தான்.

ஒருபுறம், இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான போராகவும், இன்னொரு புறம் அரபு நாடுகளில் ஜனநாயக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் உள்நாட்டுப் போராகவும் வெவ்வேறு வடிவங்களை எடுத்துள்ளபோதிலும் இவை அவற்றின் இறுதி இலக்கைப் பொறுத்தவரை நேட்டோ விரிவாக்கம்தான். இப்பொழுது மேற்காசியாவில் நேட்டோ விரிவாக்கம் அதன் இறுதிக் கட்டத்தை நெருங்கத் தொடங்கிவிட்டது. சிரியா வீழ்ச்சி அடைந்தால் மத்திய தரைக்கடல் நேட்டோ வாவியாகிவிடும் என்று நம்பப் படுகிறது. இந்நிலையில் மேற்காசியாவில் நேட்டோ விரிவாக்கத்திலுள்ள இறுதிச்சவால் ஈரான்தான். ஈரானை முறியடிக்காமல் அந்தப் பிராந்தியத்தில் நேட்டோ விரிவாக்கத்தைப் பூரணப்படுத்த முடியாது. ஈரானைத் தோற்கடிக்காமல் விடுவதற்கு ஒபாமா ஒன்றும் யேசு கிறிஸ்துவோ அல்லது கௌதம புத்தரோ அல்ல. இலட்சிய வாதங்கள் வெளியுறவுக் கொள்கைகள் ஆகிவிடாது. அதுபோலவே சீன விரிவாக்கத்தையும் எதிர்கொண்டே ஆக வேண்டும்.

சீன விரிவாக்கமானது நேட்டோ விரிவாக்கத்தைப்போல ஒரு படைத்துறை நடவடிக்கை அல்ல. தாய்வானையும் தீபெத்தையும் தவிர்த்துப் பார்த்தால் சீன விரிவாக்கம் எனப்படுவது வெளிப்படையாக இரத்தம் சிந்தும் நடவடிக்கை அல்ல. ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை சீனாவானது **இந்த நூற்றாண்டின் நிகரற்ற ஒரு கொடை வள்ளலாக காட்சி தருகின்றது.** நேட்டோ விரிவாக்கத்தின் விளைவாக உலகின் சில தலைநகரங்கள் அமெரிக்க தூதுவர்களுக்கும் அமெரிக்கப் பிரஜைகளுக்கும் பாதுகாப்பற்றவையாகக் காணப்படுகின்றன. மாறாக, சீன விரிவாக்கத்தின் விளைவாக உலகில் அநேகமாக எந்தவொரு தலைநகரிலும் சீனப்பிரதானிகளுக்கோ அல்லது சீனப்பிரஜைகளுக்கோ உயிர் ஆபத்து என்ற அச்சுறுத்தல் இல்லை. 21ஆம் நூற்றாண்டின் சக்திமிக்க முதலாளித்துவமாக எழுச்சி பெறும் சீனாவின் புதிய தலைவராக ச்ஷி வரும் மார்ச் மாதம் பொறுப்பேற்கிறார். முன்பிருந்த தலைவரைவிடவும் அதிகப்படியான ஒரு தேசியவாதியாக அவர் அறியப்படுகின்றார்.

**இத்தகையதோர் பின்னணயில் அமெரிக்காவானது, ஒன்றில் சீனாவின் துருவ இழுவிசைக்கும், நேட்டோ விரிவாக்கத்திற்கும் இடையில் ஒரு சமநிலையைக் கண்டுபிடிக்கவேண்டும். அல்லது சீனாவின் சிறகுகளை கத்தரிக்கவேண்டும். இப்படிப் பார்த்தால் ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலம் எனப்படுவது மிகவும் நிர்ணயகரமான ஒரு காலப்பகுதியாகவே இருக்கப் போகின்றது.**

இத்தகையதொரு பின்புலத்தில் வைத்தே, இலங்கைத் தீவு குறித்து அமெரிக்கா எத்தகைய முடிவுகளை எடுக்கும் என்று சிந்திக்க வேண்டும் ஒரு துருவ உலக ஒழுங்கானது, ஆசியாவில்தான் அதன் மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும். உலகின் மிகப்பெரிய அதேசமயம் மிக வேகமாக வளரும் இரண்டு பொருளாதாரங்கள் (சீனா, இந்தியா) ஆசியாவில்தான் அருகருகே காணப்படுகின்றன. உலகின் மிகக் கவர்ச்சியான நுகர்வுச்சக்தி மிக்க இரு பெரும் மத்தியதரவர்க்க சந்தைகளும் இவ்விரு நாடுகளில்தான் காணப்படுகின்றன. இவைதவிர உலகின் அணுவாயுதப் பகை எல்லைகள் என்று பார்த்தால் ஆசியாவில்தான் உண்டு. ஒன்று இந்தியா–சீனா எல்லை. மற்றையது இந்திய- பாகிஸ்தான் எல்லை. **எனவே எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் ஒபாமாவின் சோதனைக்களம் ஆசியாதான்.**

இலங்கைத் தீவு இந்தச் சோதனைக் களத்தின் இருபெரும் இழுவிசைகளுக்கு இடையே சிக்குண்டிருக்கும் ஒரு குட்டித் தீவாகும். **துருவ இழுவிசைகளுக்கிடையில் சிக்கியே தமிழர்களின் ஆயுதப்போராட்டம் நசுக்கப்பட்டது.** விடுதலைப் புலிகள் பலமாகக் காணப்பட்டபோது, ஈழத்தமிழ் அரசியல் அரங்கு எனப்படுவது வெளிச்சக்திகளால் இலகுவாக கையாளப்பட முடியாதபடி மூடப் பட்டிருந்தது. இப்பொழுது அது திறக்கப்பட்டுள்ளது.

சீனாவின் துருவ இழுவிசைக்குள் கொழும்பு பூரணமாக ஈர்க்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே புதுடெல்லி கொழும்பை அரவணைத்து வருகின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட பின்னரும் எந்த நோக்கத்திற்காக இந்தியா தமிழர்களைக் கைவிட்டு கொழும்பைத் தொடர்ந்து தழுவிவருகின்றதோ அந்தநோக்கம் அதாவது, சீனாவின் இழுவிசைக்குள் கொழும்பு செல்வதை தடுப்பது என்பது ஈடேறவில்லை. பர்மாவை எப்படி சீனாவின் ஈர்ப்பு வலயத்திற்குள் இருந்து ஓரளவிற்காவது வெளியில் எடுக்க முடிந்ததோ அப்படியே கொழும்பையும் அசைத்துப் பார்க்கலாம் என்று அமெரிக்காவும் இந்தியாவும் முயற்சிக்கின்றன. வெற்றிபெறாத இம் முயற்சிகள் காரணமாக இலங்கை பொறுத்து அவர்களுக்குள்ள தெரிவுகள் மிகவும் சுருங்கிச் செல்கின்றன. விடுதலைப்புலிகள் இருந்த போதும் நிலைமை இப்படித்தான் இருந்தது. இந்நிலையில் தமக்குரிய புதிய தெரிவுகளை உருவாக்கும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடக் கூடும். கொழும்பானது தொடர்ந்தும் சீனாவின் ஈாப்புவிசைக்கு இணக்கமான முடிவுகளை எடுக்கிறதா? இல்லையா? என்பதில் தான் எல்லாம் தங்கியிருக்கிறது. அதாவது ஒபாமாவின் புதிய நியமனங்களில் யாருக்கு இலங்கைத் தீவில் அதிகம் வேலை இருக்கின்றது என்பதைப் பொறுத்தது அது. இராஜீய வழிமுறைகளை வலியுறுத்தும் சக்ஹகெல் மற்றும் ஜோன் ஹெரிக்கு அதிகம் வேலை இருக்குமா? அல்லது ஆளில்லாவிமானங்களை அதிகம் நம்பும் ஜோன் பிரண்ணனுக்கு அதிகம் வேலை இருக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.


நன்றி: குளோபல் ஹெற் நியூஸ்



ஒபாமாவுடன் ஜோன் கெரி



சக் ஹக்கெல்



ஜோன் பிரென்னென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்

## பாதிக்கப்பட்ட மக்கள் செட்டிகுளம் பிரதேச செயலாளருக்கு மகஜர்

(பூந்தோட்டம்)

செட்டிகுளம் பிரதேசத்தில் மீள் குடியேறியோருக்கான வீட்டுத்திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரிவித்து செட்டிகுளம் பிரதேச செயலாளருக்கு கடந்த 23 ஆம் திகதி செட்டிகுளம் பிரதேச மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பினூடாக மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் கொடுத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வீடு மற்றும் சொத்துக்களை இழந்தது மட்டுமன்றி உயிரிழப்பு, காயம் மற்றும் காணாமல் போதல் போன்ற பாதிப்புக்களையும் எதிர்கொண்டு தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த இம்மக்களில் சிலர் வேறு மாவட்டங்களில் இருந்தும் சிலர் இந்தியாவில் இருந்தும் சிலர் முள்ளிவாய்க்கால் வரை சென்று நிவாரணக் கிராமங்களில் இருந்து விடுவிக்கப்பட்டும் மீளக்குடியமர்ந்து உள்ளனர்.

இம் மக்களில் பலர் மண் குடிசைகளில் வெயில், மழை காலங்களில் பாரிய துன்பங்களை சந்தித்து வீட்டுத்திட்ட உதவி வரும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். இந்திய அரசின் உதவியுடனான 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் நாமும் உள்வாங்கப்படுவோம் என்று எமக்கு இருந்த நம்பிக்கையானது தங்களது பாரபட்சமான வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்படும் முறைமையால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேச செயலக பிரிவில் இந்திய உதவியுடனான வீட்டுத்திட்டம் குறிப்பிட்ட இனத்தை சார்ந்த மக்களுக்கு மட்டும் உரித்தானதா? என்ற கேள்வியையே தோற்றுவித்தது. ஏனெனில் முற்றாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களை கொண்ட கிராமங்கள் தங்களால் தெரிவு செய்யப்படவில்லை.

இந்திய அரசின் உதவியுடனான முதலாம், இரண்டாம் கட்ட கிராம மற்றும் பயனாளிகள் தெரிவில் முஸ்லிம் குடும்பங்கள் பெருமளவு எண்ணிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள அதே வேளை தமிழ் கிராமங்களும் தெரிவு செய்யப்படுகின்றன என்பதை காட்டிக்கொள்ள குறைந்த எண்ணிக்கையிலான பயனாளிகளை கொண்ட ஒன்றிரண்டு தமிழ் கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதிலும் அங்கு இடம்பெயராத குடும்பங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் நிரந்தரமாக வசித்து வரும் குடும்பங்கள் ஏற்கனவே கல் வீடுகளை கொண்ட குடும்பங்கள் என்ற வகையில் தகுதியற்ற பயனாளிகளுக்கு வீடு வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இவ்வாறு முறையற்றதும் பாரபட்சமானதுமான முறையில் வீட்டுத்திட்ட உதவி வழங்குவதன் மூலம் இந்திய அரசின் உதவியுடன் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிற்கு குறித்தொதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை முடிவுற்ற பின்னர் உண்மையில் பாதிக்கப்பட்ட எமக்கு மிஞ்சப் போவதுதான் என்ன? தொடர்ந்தும் எமக்கு மண் குடிசைதான் தஞ்சமா?

எனவே, வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் முழுமையாக பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்களை கொண்ட கிராமங்களை தெரிவு செய்யுமாறு இன, மத வேறுபாடின்றி பாரபட்சம் காட்டாது செயற்படுமாறு தங்களை தயவுடன் வேண்டி நிற்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்கான பதில் ஆக்கபூர்வமாக கிடைக்காவிடின் மாவட்ட ரீதியில் சாத்வீக போராட்டம் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் உட்பட பலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-266)

# அதிபர் சேவையில் உள்வாங்க விரைவில் ஆவன செய்யுங்கள்

## பாதிக்கப்பட்டோர் அமைச்சர் றிசாத்திற்கு கடிதம்

(பூந்தோட்டம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பல ஆண்டுகளாக கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றும் அதிபர்கள் தம்மை அதிபர் சேவையில் உள்வாங்க ஆவன செய்யுமாறு கோரி வட மாகாண ஆளுநர் ஊடாக அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு 45 அதிபர்கள் கையொப்பமிட்டு கடிதமொன்றினை கடந்த 23 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளனர்.

மேன்முறையீடு என்று தலைப்பிடப்பட்டுள்ள இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பல ஆண்டு காலமாக பல கஷ்டங்கள், இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் எமது பாடசாலைகளை வேறுபட்ட இடங்களுக்கெல்லாம் நகர்த்தி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதிப்புறாத வகையில் பாடசாலையை கொண்டு நடத்தி வந்த எமது வலய கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப்பெறாமையினால் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான நேர்முகத்தேர்வுக்கு தோற்ற முடியவில்லை.

மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து வலயங்களிலும் உள்ள கடமை நிறைவேற்று நேர்முகப் பரீட்சை நடந்து முடிந்து அவர்களுக்கான நியமனமும் வழங்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, இந்த நிலையில் எமது வலயத்தைச் சேர்ந்த கடமை கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நேர்முகப்பரீட்சையை நடத்தி எமக்கு சமகாலத்தில் அதிபர் தரம் கிடைப்பதற்கு ஆவன செய்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வட மாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் ஐ.எஸ்.எம்.முகைதீனிடம் கேட்ட போது அமைச்சர் றிசாத் பதியுதீனின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டு அதற்கான நடவடிக்கையை அமைச்சர் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். (அ-266)




★ 1695 - ஒட்டோமான் பேரரசின் மன்னன் இரண்டாம் அஹமது இறந்ததை அடுத்து இரண்டாம் முஸ்தபா மன்னனானான்.

★ 1880 - தோமஸ் எடிசன் வெள்ளொளிர்வு விளக்குக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1888 - தேசிய புவியியற் கழகம் (National Geographic Society) வோஷிங்டன் டிசியில் அமைக்கப்பட்டது.

★ 1915 - ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் ஹெயிட்டியை ஆக்கிரமித்தனர்.

★ 1918 - பின்லாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

★ 1924 - விளாடிமிர் லெனினின் உடல் மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மாலை 4 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

★ 1926 - ஜோன் லோகி பயார்ட் முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்திக் காட்டினார்.

★ 1938 - நியூயோர்க்கில் நயாகரா நீர்வீழ்ச்சியில் நயாகரா பாலம் உடைந்து வீழ்ந்தது.

★ 1944 - இரண்டாம் உலகப் போர்: அச்சு நாடுகளின் இரண்டாண்டு லெனின் கிராட் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: இலட்சக்கணக்கான யூதர்கள் குரூரமாகக் கொல்லப்பட்ட போலந்தின் அவுஷ்விட்ஸ் சித்திரவதை முகாமில் எஞ்சியிருந்த கைதிகள் 7ஆயிரத்து 600 பேர் சோவியத் செம்படையினரால் விடுவிக்கப்பட்டனர்.

★ 1967 - அப்பலோ 1 விண்வெளி வீரர்கள் மூவர் கென்னடி விண்வெளி மையத்தில் தமது விண்கலத்தைப் பரிசோதிக்கும் போது இடம்பெற்ற தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.

★ 1973 - வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்பாடு பாரிசில் எட்டப்பட்டது.

★ 1996 - நைஜரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மஹமான் ஊஸ்மன் பதவியிலிருந்து அகற்றப்பட்டு இராணுவத் தளபதி இப்ராகிம் மயினாசரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

### பிறப்புகள்

★ 1775 - பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மனிய மெய் யியல் அறிஞர் (இ.1854)

★ 1832 - லூயிஸ் கரோல், ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர், கிறிஸ்தவப் பாதிரியார் (இ.1898)

★ 1944 - மைரேயட் கொரிகன், நோபல் பரிசு பெற்றவர்

★ 1974 - சமிந்த வாஸ், இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

★ 1814 - ஜொகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (பி.1762)

★ 1967 - அப்பலோ 1 விண்வெளி வீரர்கள்

**லூயிஸ் கரோல்**



லூயிஸ் கரோல் (Lewis Carroll, ஜனவரி 27, 1832– ஜனவரி 14, 1898) என்ற புனைப்பெயர் கொண்டவர் சார்ல்ஸ் லுட்விக் டாக்ஸ்டன் (Charles Ludwidge Dogston). இவர் பிரித்தனில் வசித்த ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர், கிறிஸ்துவப் பாதிரியார் மற்றும் புகைப்படக் கலைஞர் ஆவார்.

இவர் எழுதிய சிறுவர்களுக்கான இலக்கிய நூல்கள், தீவிர இலக்கியவாதிகளான ஜேம்ஸ் ஜாய்ஸ் மற்றும் ஜார்ஜ் லூயி போர்ஹே போன்றவர்களிடத்தும் மிகப் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது.

# சிவபூமி ஞான ஆச்சிரமம் திறப்புவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையினால் சைவ வளர்ச்சிக்கும் சமூக உதவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் குப்பிளானில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி ஞான ஆச்சிரம திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆச்சிரமத்தை அமெரிக்க ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகசுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் திறந்து வைக்கவுள்ளார்.

இந் நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா ஆச்சிரம முதல்வர் சித்ரூபானந்தா சுவாமிகள், அமெரிக்க ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாத சுவாமிகள், யாழ்.சிவதொண்டன் நிலைய சிவப்பணியாளர் முரளிதரன், ஸ்ரீவேதவித்தியாசகர், சுவாமி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதசுரபி மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

இச்சிவபூமி அறக்கட்டளை நிலையத்திற்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி காணியையும் வீட்டையும் நன்கொடையாக வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-5)

# அமெரிக்க டொலர்களை கடத்த முயன்றவர் கைது

சட்டவிரோதமாக அமெரிக்க டொலர்களை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்ல முயற்சித்த கானா நாட்டுப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கணனி பாகங்களுக்குள் மறைத்து அமெரிக்க டொலர்களை எடுத்துச் செல்ல முயற்சித்ததாக சுங்கப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜி.ஏ.லெஸ்பி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட அமெரிக்க டொலர்களின் பெறுமதி சுமார் 30 இலட்சம் ரூபாவென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த கானா பிரஜையிடமிருந்து நைஜீரியாவிற்கான விமானச் சீட்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது. அமெரிக்க டொலர்களை அரசுடைமையாக்கப்பட்டதன் பின்னர் சந்தேக நபர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் துப்பாக்கிச் சண்டை; 53 போராளிகள் பலியாகினர்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடமேற்கில் ஆப்கானிஸ்தான் எல்லையில் கைபர் மலைப்பகுதி உள்ளது. இங்குள்ள திராபள்ளத்தாக்கின் பெரும்பாலான கிராமங்கள் தலிபான் மற்றும் அன்சருல் இஸ்லாம் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இங்கு அவர்கள் முகாம்களை அமைத்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மைதான் என்ற கிராமம் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதை கைப்பற்றுவதில் தலிபான் மற்றும் அன்சருல் இஸ்லாம் போராளிகளுக்கிடையே துப்பாக்கி சமர் நடந்தது. கடந்த வியாழக்கிழமை மாலை தொடங்கிய இத்துப்பாக்கி சமர் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வரை நடந்த இம் மோதலில் 30 தலிபான்களும் 23 அன்சருல் இஸ்லாம் அமைப்பை சேர்ந்தவர்களும் பலியாகியுள்ளனர்.

இம் மோதலின் பின் மைதான் கிராமத்தின் 4 முக்கிய இடங்களை கைப்பற்றியதாக அன்சருல் இஸ்லாம் அமைப்பு தெரிவித்துள்ளது.

அங்குள்ள மசூதிகள் மற்றும்பொது இடங்களை தலிபான்கள் ஆக்கிரமித்துள்ளனர். மேலும் மதத்தின் பெயரால் அப்பாவி பொதுமக்களை கொன்று குவிக்கின்றனர். எனவே, அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கவே தாம் நடவடிக்கை எடுத்ததாக அன்சருல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (செ-5)

# வெனிசுலா சிறையில் மோதல்! 50 பேர் வரை பலி; 90 பேர் காயம்

வெனிசுலாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஊரிபானா சிறையில் இடம்பெற்ற மோதலில் 50 பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் தென்மேற்கில் பார்குயிசிமெடோ பகுதி உள்ளது. அங்கு ஊரிபானா என்ற இடத்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்கள் சிறை அறைகளில் ஆயுதங்கள் பதுக்கி வைத்திருப்பதாக தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அங்கு பொலிஸ் அதிகாரிகள் சோதனை நடத்தியதைத் தொடர்ந்து பொலிஸாரை சிறை கைதிகள் தாக்கினர். பதிலுக்கு பொலிஸாரும் தாக்கியதால் கலவரம் ஏற்பட்டது.

அப்போது ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டு மோதிக் கொண்டனர். இந்த தாக்குதலில் 50 பேர் உயிரிழந்துள்ளதுடன் 90 பேர் காயம் அடைந்தனர்.

பலியானவர்களில் கைதிகள், பொலிஸார் மற்றும் சமூக சேவகர்கள் அடங்குவதாகவும் காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே சிகிச்சை பெறுபவர்களில் பெரும்பாலானவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலியாவோர் எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-5)

# லிபியாவில் வசிக்கும் வெளிநாட்டவர்க்கு போராளிக்குழுக்களால் அச்சுறுத்தல்

## தம்மக்களை அழைக்கின்றன ஐரோப்பிய நாடுகள்

லிபியா நாட்டில் உள்ள இரண்டாவது பெரிய நகரமான பென்காசியில் ஏராளமான வெளிநாட்டினர் தொழில் செய்து வருகின்றனர்.

நேட்டோ படைகளின் உதவியுடன் லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முவம்பர் கடாபி கொல்லப்பட்ட பின்னர் லிபியாவில் உள்ள வெளிநாட்டினருக்கு மிரட்டல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில்மாலிநாட்டில்உள்ள அல்கொய்தா ஆதரவுடன் இயங்கும் போராளிகள் மீது பிரான்ஸ் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது. இச்சம்பவம் லிபியாவில் உள்ள போராளிகள் குழுவின் ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

இதனையடுத்து அல்ஜீரியாவில் இயங்கி வரும் போராளிக்குழுக்கள் மேற்கத்தேய நாட்டினரைக் குறிவைத்து தாக்கி வருகின்றன. இத்தாக்குதல் பென்காசி நகருக்கும் பரவலாம் என்ற அச்சம் மேலோங்கி வருகிறது.

இந்நிலையில் பென்காசியில் வசிக்கும் தங்கள் நாட்டு குடிமக்கள் உடனடியாக தாய்நாடு திரும்ப வேண்டும் என பிரிட்டன், ஜேர்மனி, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (அ-5)

# டயானாவின் அரிய புகைப்படம் 10 இலட்சம் ரூபாய்க்கு ஏலம்

இங்கிலாந்து இளவரசி மறைந்த டயானாவின் அரிய புகைப்படம் 10 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போயுள்ளது. இங்கிலாந்து இளவரசர் சார்லசின் மனைவி டயானா கருத்து வேறுபாடு காரணமாக 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி கணவரை விவாகரத்து செய்தார். இத்தம்பதிக்கு வில்லியம் ஹென்றி, சார்லஸ் ஆல்பர்ட் டேவிட் என்ற 2 மகன்கள் உள்ளனர். விவாகரத்துக்குப் பின்னர் 1997ஆம் ஆண்டு பரிஸ் நகரில் உள்ள சுரங்கப் பாதை ஒன்றில் தனது ஆண் நண்பர் டோடி பையத்துடன் டயானா காரில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட பயங்கர விபத்தில் டயானா பரிதாபமாக இறந்தார். இந்நிலையில் இதுவரை யாருமே பார்த்திராத டயானாவின் பிரத்தியேக புகைப்படம் அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டது. டயானாவின் 18 வயதில் (1979-1980) இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சார்லஸ்-டயானா நிச்சயதார்த்தத்துக்கு 2 நாட்கள் கழித்து புகைப்படக்கலைஞர் ஒருவர் இங்கிலாந்தின் பிரபல நாளிதழான டெய்லி மிரர் பத்திரிகைக்கு அந்தப் புகைப்படத்தை அனுப்பியுள்ளார். திருமணம் நிச்சயிக்கப்பட்டதால் இங்கிலாந்து ராணி குடும்பத்துக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தவேண்டாம் என்று கருதி அந்தப் புகைப்படத்தின் பின்னால் பதிக்க வேண்டாம் என்ற குறிப்பு எழுதி வைக்கப்பட்டிருந்த நிலையில் இவ் ஏலம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. (செ-5)



வெள்ளை மாளிகையின் தலைமை அலுவலர் (வலது) ஜாக் லீயை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தேசிய துணை பாதுகாப்பு ஆலோசனை வழங்குபவராக நியமித்ததைப் படத்தில் காணலாம்.

# சர்ச்சைக்குரிய தீவுகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும்

## ஜப்பான் நம்பிக்கை

சர்ச்சைக்குரிய தீவுகளுக்கு தீர்வு காணப்படும் என ஜப்பான் சிறப்புத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எல்லைப் பகுதியில் உள்ள சில தீவுகள் தங்களுக்கு சொந்தமானது என சீனா கூறி வருகிறது. எனினும் இந்தத் தீவுகள் தங்களுக்கு உரியவை என ஜப்பான் சொந்தம் கொண்டாடுகிறது. இதுதொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே வெகுகாலமாக பிரச்சினை இருந்து வருகிறது.

இத்தீவுகள் தொடர்பில் இரு நாடுகளுக்கு இடையே மோதலும் ஏற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் சீனாவுக்கு ஜப்பான் தனது சிறப்பு தூதராக நாட்சுவா யமாகுச்சியை அனுப்பி வைத்தது. அவர் சீன ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள ஸி ஜின்பிங்கை பெய்ஜிங்கில் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் யமாகுச்சி நிருபர்களிடம் பேசும் போது சீனாவுடனான எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு உள்ளது. இருப்பினும் இந்த விவகாரம் குறித்து நான் சீன ஜனாதிபதியிடம் நேரடியாக பேசவில்லை என கூறியுள்ளார். (அ-5)

## உலக தரிசனம்

# விமானப்படை, தரைப்படை ஒருங்கிணைந்த போர் ஒத்திகை

## தயார் நிலையில் பாகிஸ்தான் இராணுவம்

காஷ்மீர் எல்லையில் பதற்றமான சூழ்நிலை நீடிப்பதன் எதிரொலியாக பாகிஸ்தான் விமானப்படை திடீர் போர் ஒத்திகை நடத்தி உள்ளது.

பாகிஸ்தான் விமானப்படை சப்ரோன் பண்டிட் என்ற பெயரில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை போர் ஒத்திகை நடத்துவது வழக்கம்.

கடந்த சில நாட்களாக இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பதற்றமான சூழ்நிலை நீடித்து வருகிறது. இதன் பின்னணியில் பாகிஸ்தான் விமானப்படை தரைப்படையுடன் இணைந்து ஒருங்கிணைந்த போர் ஒத்திகையை திடீர் என்று நடத்தியது. ஜெட்ரக போர் விமானங்கள் இந்த ஒத்திகையில்பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் விமானப்படை தளபதி தலைமைமார்ஷல் தார் பட் இந்தப் போர் ஒத்திகையில் பங்கேற்று பல்வேறு படைப்பிரிவுகளின் தயார் நிலையை மதிப்பீடு செய்தார்.

மேலும் இந்த ஒத்திகையில் இணைத்தளபதிகள், கமிட்டி தலைவரான ஜெனரல் காலித் ஷமீம்வினி, இராணுவ தலைமை தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கியானி ஆகியோரும் போர் ஒத்திகை நிகழ்ச்சியை ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து ஜெனரல் காலித் ஷமீம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன் றில், நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காக இராணுவம் தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்து இருக்கிறார்.

உள்நாட்டு, வெளிநாட்டு அச்சுறுத்தல்களை நாம் சந்தித்து வருவதால் உலகளாவிய புவி-அரசியல் சூழல் மற்றும் பிராந்திய அச்சுறுத்தல் நிலைமை சாதாரணமானவை மட்டுமின்றி, அதிக சவால்கள் நிறைந்துள்ளதாகவும் உள்ளன. எனவே, போருக்கு தயார் நிலையில் இருப்பது கூடுதல் முக்கியத்துவம் பெறுவதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# அயர்ந்து தூங்கிய நீதிபதியை விழித்திருந்து பார்த்தது கமரா!

## வில்லங்கமானது விவகாரம்



மொஸ்கோ நீதிமன்றில் விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது வழக்கை விசாரித்த நீதிபதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். இது தொடர்பாக அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள் ளது. ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் உள்ள பிளா கோவெஷ்சன்ஸ்க் நீதிமன்றத்தின் நீதிபதி ஈவ்ஜெனி மாக்னோ, மோசடி வழக்கு ஒன்றை சமீபத்தில் விசாரித்தார். நீதிமன்றில் இருதரப்பு வழக்கறிஞர்கள் விவாதம் நடத்திக் கொண்டிருக்க அதை கவனிக்காமல் கையடக்க தொலைபேசியில் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்தார். பின் தன்னை மறந்து அயர்ந்து தூங்கினார்.

வழக்கறிஞர் தரப்பு வாதம் முடிந்த விடயத்தை ஊழியர்கள் தெரிவிக்க திடீரென விழித்துக் கொண்ட நீதிபதி ஈவ்ஜெனி குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை அறிவித்தார்.

மனித உரிமை அமைப்பை சேர்ந்த ஒருவர், நீதிபதி கையடக்க தொலைபேசியில் வீடியோ கேம் விளையாடியது, அயர்ந்து தூங்கியது அனைத்தையும் இரகசிய படப்பிடிப்பு கருவி மூலம் பதிவு செய்து சிறைத் தண்டனை பெற்றவரின் உறவினர்களுக்கு அனுப்பி வைத்தார்.

உரிய முறையில் வழக்கை விசாரிக்காமல் ஐந்தாண்டு தண்டனை அளிக்கப்பட்டதை எதிர்த்து தண்டனை பெற்றவரின் உறவினர்கள் நீதிமன்றில் புகார் தெரிவித்தனர். இதையடுத்து சம்பந்தப்பட்ட நீதிமன்ற நீதிபதி ஈவ்ஜெனி மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ப்படவுள்ளது. (செ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## என் கேள்வி

சொல்லுங்கள்...
நீங்கள்
செய்தது எல்லாம்
சரிதானா?
நாங்கள்
பிச்சை கேட்க
பறித்தெடுத்தீர்கள்
எங்கள்
பிச்சை
பாத்திரத்தை
உடுக்க
ஆடை இல்லாமல்
நாங்கள் கிளிஞ்சல்
ஆடைகளோடு வர
நீங்கள் உரித்தெடுத்தீர்கள்
எங்கள் ஆடைகளைக்கூட
நாங்கள் நிற்கமுடியாமல்
தரையில் தள்ளாடி விழ
நீங்கள்
தூக்கி அறைந்தீர்கள்
எங்கள்
சிலுவைகளில் சொல்லுங்கள்
நீங்கள்
செய்தது எல்லாம்
சரிதானா?

உயிரோவியன்

## வலிகளை விழுங்கும் அபத்தம்

அணைக்கட்டில் மோதித்திரும்பும்
குளத்து நீரலையாய்...
உன்னில் மோதி
மீள்கிறேன் நான்
என் சிதைவுகள்...
சேர்த்திறுகி மீண்டும்
உனைத்தொட்டுலுப்ப எத்தணிக்கும்
ஒரு பொழுதில்
முற்றிலும் என்னை
குடித்து விடுகிறாய்
சிலிர்த்தெழும் ஒரு அலையாய்...
என் குரல்
உனை அழைத்தபடி
ஒலித்தோய்கிறது
என் வலிகளை விழுங்கிடும்
அபத்தமாய்...
காறித்துப்புகிறாய் என்னை
என்தலைகள்...
நாணிப்பின்வாங்க
நிமிர்ந்து நிற்கிறாய் நீ
ஏளனம் பூசி மணக்கின்றன
எனக்குறித்தவை
மூச்சுப்பிடித்து
இறுகி நிமிர்கிறாய் மீண்டும்

கவிஞர் சு.க.சிந்துதாசன்

## அவளோடு நான்

உன்!
ஓரக்கண் பார்வையிலே
பறிகொடுத்த என் இதயமும்
காதலும் இன்று கானல் நீராய்
கண்ணீரோடு கடந்து செல்கிறது!
நீ எங்கே...?
உன் நினைவுகள் என்னுயிரோடு
கலந்துவிட்டதால் - நீ
என்னோடு வாழ்ந்து கொண்டேயிருப்பாய்
நான் மரணிக்கும் வரை!
அது உனக்குப்புரியுமா...?
நொடிக்கொரு முறை துடிக்கின்ற
என் இதயம் இடம்மாறிச் சுவாசிக்கவில்லை
இமைகள் தூங்க மறுக்கிறது
உதடுகள் பேசத்துடிக்கிறது!
நீயோ ஊமைபோல புரியாத
புதிராகவே இருக்கிறாய்!
ஏன்...?

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய்



## இமயம் தொட...

மேகத்தை முட்டும்
கீற்று முகில்களை விட
மழைதனைப் பொழியும்
கருமுகிலாய் வாழ்வது மேல்
கடலதை உறிஞ்சி
உவர்ப்பதை நீக்கி
உணர்வுடன் பொழிகிறதே
மனம் மாறு மழையாகு
உன் வாழ்வு உனதாகும்

மாவை. நா. கஜேந்திரன்

## ஆயுள்கைதி

குற்றங்கள் எதுவும் செய்யாமலேயே
உன் இதயக்கூண்டுக்குள்
அடைபட்டுக் கிடக்கும்
ஆயுள்கைதி நான்...!
காலம் முழுவதும்
உன் விழிகளின் கண்காணிப்பிலேயே
என்னை இருக்க விடு
விடுதலை தந்து ஒரு போதும்
சோகச்சிறையில் தள்ளிவிடாதே!
இதுவே உன் அன்புத் தண்டனைகளுக்குப்
பழக்கப்பட்ட என் இதயத்தின்
முதலும் இறுதியுமான விண்ணப்பம்

செ.ரவிசாந்
வீரமனை, குப்பிளான்

# மௌனத்தின் தேடல் - 140



## சிகரத்தை நோக்கி

வீர மண்ணில் பிறந்த எமக்கு
சாதனைகள் புதிதல்ல
வேண்டாத வேலை என்று
நிற்பவர் மட்டில்
வீரத்தின் வடிவமாக
வியக்கவைக்கிறாய்
நிச்சயம் - நீ
தமிழனாய்த்தான்
இருக்கவேண்டும்

ரு.அஜித் கலக்சன்
மண்டைதீவு

## புரிந்துகொள்

இளைஞனே!
சாதனை புரிவதற்கு
இளமையும் வேகமும்
போதாது- நாம்
சாதிக்க நினைக்கும்- செயல்
சாதனையாகுமா- என்பதை
உணர்ந்துகொள்...

ஞா.வதனி
குருநகர்

## உன்விதி

எதற்காக பாறையில் ஏறினாய்
'எதைச்சாதிக்க ஏறினாய்
புரியவில்லை எமக்கு
உன் செயல் எதுவானாலும்
உன் விதி
நீ ஏறிய போதா
பாறை பிளக்க வேண்டும்

அ.மேரி அல்போன்சா
குருநகர்

## புரிந்துகொள்

புலப்படும் பிளவுகளை
தாண்டுகின்றாய்
புலப்படாமல் - பல
படுகுழிகள்- உன்
பாதத்தின் கீழ்

இணுவில் வாகீசன்

## எதிர்நீச்சல்

மனிதா!
போராட்டம் நிறைந்த
மனிதவாழ்க்கையில்
நாம் வெற்றிகாண
இப்படிப் பல தடைகளை
கடந்தே ஆகவேண்டும்

க.ஜெயருபன்
பருத்தித்துறை

## கடைசிப் போராட்டம்

இயற்கையின் சீற்றம்
என் உறவெல்லாம்
நாசம்- உடலில்
மிஞ்சிய கொஞ்ச
உயிர் எடுக்கவும்
இதன் துணிகரம்
என் ஆயுள் முடியுமா என- ஆழ்
மனதினுள் அந்தரம்?
இது இறுதி மூச்சை மட்டும்
சுமந்த என் வாழ்விற்கான
கடைசித் துயரப் போராட்டம்

அ.யூட் எமர்சன்
ஒளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா
வித்தியாலயம்

## பிணக்குழியில்

படித்த புத்தகம்
பற்பல
முடித்த திருமணம்
கைவிட
தேடிய தொழில்
மறைந்திட
ஓடிய காலம்
குலைந்திட
நிலையிழந்த
நான் நாளை
மரணமாய்
பிணக்குழியில்

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

## வெற்றியின் படிக்கட்டு

உடல் இளைத்தாலும்
உளம் சோறாது
இலக்கை நோக்கி பாறையில்
ஓடும் உன் வீரம் பெரிது
ஆனாலும் உனது முயற்சி
தோல்வியோடு முடிவதில்லை
வெற்றியின் படிக்கட்டுக்களாக
முன்னோக்கி நகரும்

பா.கிரிதரன், தேவிபுரம்

## வீரத்தின் வெளிப்பாடு

எத்தனையோ
மேடுபள்ளங்களை கடந்து
உயிரை எங்கெல்லாம்
கொண்டு சென்றோம்
இப்பாறையைத் தாண்டுவது
ஒன்றும் புதிதல்ல
அது எங்களுக்கு ஒரு
ஒற்றையடிப்பாதையாகும்

ஸ்ரீ.பவானி, திருநெல்வேலி

## முயற்சி

முயற்சித்துப்பார்- உன்னால்
முடியாதென்று ஒன்றில்லை
வெற்றிக்காக நீ படும் துயர்
வெற்றியை நீ தொட்ட பின்னே
சட்டென்று மறைந்துவிடும்
நாளை உனக்காகவே மலர்கிறது
உன் சாதனையை பொறித்திட
தொடரட்டும் உனது முயற்சி

வி.கிஷோர், கதுமலை

## உன் வீரம்

உறுதியோடு பாறையை கடக்கின்றாய்
உன் வீரத்தை பாராட்டுகின்றேன்
ஆனால் உன் வீரம்
உனக்கு வினையாக மாறாமல்
உன்னால் செய்யமுடிந்தவற்றில்
உன் வீரத்தைக்காட்டு

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

## முன்னேறு

உன் இலட்சியப் பயணத்தில்
பல தடைகளைப் போட்டுச் சிலர்
முன்னேறவிடாது தடுக்கலாம்
கலங்காதே நீரோடையில் விழுந்திடாது
பாறையில் கால் பதித்துப்பாயும்
இளைஞனைப்போல் துணிந்து
தடைகளை உடைத்து முன்னேறு
உன் இலட்சியக்கனவு நிறைவேறும்

துரை
தென்மட்டுவில்

## மறந்து விடாதே

கடினமான பாறையில்
நடந்து வந்த நீ
படுகுழியில் ஏனோ
பாதம் வைக்கின்றாய்
முயற்சியில் நம்பிக்கையிழந்து
படுகுழியை தெரிவு செய்யாதே
உன் இலட்சியப்பாதையின்
படுதோல்வி அங்கேதான்
இருக்கின்றது மறந்துவிடாதே

க.அபர்ணா,
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 141



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.02.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையை கண்டித்து முற்றுகைப் போராட்டம்

### பழ.நெடுமாறன் ஏற்பாடு



இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையை கண்டித்து எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இலங்கை தூதரகம் முன்பு முற்றுகை போராட்டம் ஒன்றை நடத்தப்படவிருப்பதாக ஈழத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் கொடுஞ்செயல்களை தடுத்து நிறுத்த இந்திய அரசு இலங்கையை வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையை கண்டித்து அவற்றிற்கு எதிரான இளைஞர் அமைப்பு சார்பிலேயே சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு முற்றுகை போராட்டம் நடைபெறும் என்று அவர் அறிவித்துள்ளார்.

போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலைக்கு எதிராக இளைஞர்கள் அமைப்பின் சார்பில் சென்னையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழீழ பாதுகாப்பு இயக்கத் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார். (அ-2)

# இந்தியாவுடனான நட்பை கெடுத்துக் கொள்ளாதீர்கள்; பாகிஸ்தானுக்கு குடியரசுத் தலைவர் எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவுடனான நட்பை வீணாகக் கெடுத்துக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.


63 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் மாலை நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அவர் கூறுகையில், சமீபகாலமாக நமது நாட்டின் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது. அருகருகே உள்ள நாடுகள் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது சகஜம்தான். ஆனால் இதுவே பதற்றமாக அதிகரிக்கும்போது முன்னேற்றம் தடைப்படும். சிலநாடுகள் பயங்கரவாதத்தின் மையமாகவும் அங்குள்ள சிலர் பயங்கரவாதிகளுக்கு நிதியளித்து உதவி வருவதும் பெரும் கவலையளிக்கும் விடயமாகவுள்ளது.

இந்தியா எப்போதுமே அமைதியைத்தான் விரும்புகிறது. இந்தியா நம்பிக்கையுடன் நட்புக் கரத்தை நீட்டி வருகிறது. ஆனால் இதனை பாகிஸ்தான் எளிதாக எடுத்துக் கொண்டு உதாசீனப்படுத்தக்கூடாது.

**எம்.பி, எம்.எல்.ஏக்களுக்கு அறிவுரை**

எம்.பி, எம்.எல்.ஏ உள்ளிட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். இலஞ்சம், ஊழல் முறைகேடுகள் என்பவை வாழ்வியல் அறநெறிகளை பின்தள்ளும் நிலை ஏற்பட்டு விடுமா என்ற கேள்வி எழுகிறது.



டில்லியில் மாணவி ஒருவர் கொடூரமாக பலாத்காரம் செய்யப்பட்டு இறந்தது நவீன இந்தியாவின் மிகப் பெரிய சோகமாக அமைந்துவிட்டது.

பெண்களின் கண்ணியம் காப்போம். பெண்களின் கண்ணியத்தை காப்பதே இந்தியாவின் நாகரிகமாக அறியப்படுகிறது. எப்போது ஒரு பெண்ணுக்கு எதிராக கொடுமை நிகழ்த்தப்பட்டதோ அப்போதே நமது தேசத்தின் ஆன்மா காயப்பட்டுவிட்டது. நமது நீதிநெறிககளை மீண்டும் நிலை நிறுத்த வேண்டிய நேரமிது.

மனித பண்புகளையே வெறுக்க வைக்கும் செயல்களை அனுமதிக்கக் கூடாது. இதுபோன்ற நிகழ்வுகள் நன்னெறி என்பதைக் குருடாக்கிறது. நாம் எந்த இடத்தில் தவறு செய்கிறோம் என்பதை நமது மனச்சாட்சியை ஆராய்ந்து அறிய வேண்டும் என்று உரையாற்றினார். (செ-2)

## பாரதச் செய்தி

# 63 ஆவது இந்திய குடியரசுத்தினம்; ஹிலாரி வாழ்த்துச் செய்தி

இந்திய-அமெரிக்கத் தோழமை என்பது உலகத்தை மேலும் பாதுகாப்பானதாக மாற்றும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார். இந்திய மக்களுக்கு குடியரசு தின வாழ்த்து தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு ஹிலாரி தெரிவித்திருந்தார். அவர் வெளியிட்ட வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நான் இந்தியாவுக்கு மூன்று முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். இந்தப் பயணங்கள் மூலம் இந்திய அமெரிக்கத் தோழமை என்பது உலகத்தை மேலும் பாதுகாப்பானதாகவும் செழுமையானதாகவும் மாற்றும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அமெரிக்காவும் இந்தியாவும் ஜன நாயக அரசை வழங்குவதில் உறுதி பூண்டுள்ளன.

நாட்டிலுள்ள 150 கோடி மக்களுக்கும் தங்களின் திறன்களை உணர வைக்கின்றனர். இரு நாடுகளும் இணைந்து தங்களின் உறவுகளை வலுப்படுத்துவதோடு கடினமான சவால்களைச் சமாளிக்கவும் பாடுபட்டு வருகின்றன. இந்திய மக்களுக்கும் அரசுக்கும் 63 ஆவது குடியரசு தின வாழ்த்துக்களை ஜனாதிபதி ஒபாமா மற்றும் அமரிக்க மக்கள் சார்பில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என அவ்வாழ்த்துச் செய்தியில் ஹிலாரி தெரிவித் துள்ளார். (அ-5)


# பாக்.சிறையில் இந்தியர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறையில் அதிகாரிகள் தாக்கியதில் இந்தியர் ஒருவர் பலியாகியுள்ளார். இந்தியாவை சேர்ந்தவர் சமல் சிங் என்பவரே மேற்படித் தாக்குதலில் பலியானவராவார். பாகிஸ்தானில் உளவு பார்த்ததாக இவர் குற்றம் சாட்டப்பட்டு ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்பட்டது. லாகூரில் உள்ள நீதிமன்ற லாக்பத் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

சிறையில் உள்ள குழாய் அருகே 15 ஆம் திகதியன்று துணி துவைத்ததற்காக சிறை அதிகாரிகள் அவரை கடுமையாக தாக்கினர். இதில் படுகாயமடைந்த சமல்சிங் ஜின்னா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் மருத்துவமனையில் இறந்தார். சமல்சிங் இறந்துவிட்ட செய்தியை இந்தியாவில் உள்ள அவரது உறவினர்களிடம் தெரிவிக்கும்படி பாகிஸ்தான் அதிகாரிகள் இந்திய தூதரகத்திடம் கேட்டுள்ளனர். சமல்சிங் மரணம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் இதுவரையில் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. (அ-5)



# உலகத்தை ஏமாற்ற மிளகாய்ப்பொடி தூவிவிட்டார் ஜனாதிபதி மஹிந்த

## தி.க. தலைவர் கி.வீரமணி அறிக்கை

**இலங்கையில் ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் மிகுதியாகவுள்ள ஈழத்தமிழர்கள் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த நிலையிலிருந்து ஈழத் தமிழர்கள் விடுவிக்கப்பட தமிழர்கள் ஒரே குரலில் முழங்க வேண்டும். பெப்ரவரி 4 ஆம் திகதி நடக்கவிருக்கும் டெசோ கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.**

இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

சர்வாதிகாரத்தையே தனது நடைமுறையாகக் கொண்டு நடத்தும் இலங்கை அரசு தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை நசுக்கி ஒடுக்கிவிட உலக நாடுகளின் கண்களில் நன்றாக மிளகாய்ப் பொடி தூவி ஏமாற்றியுள்ளது.

**ராஜீவ் கொலையை மனதில் நிறுத்தி செயற்பாடு**

தீவிரவாதத்துக்கு எதிராகத்தான் தான் போர் நடத்துவதாகவும் விடுதலைப் புலிகள் போன்ற தீவிரவாதிகளுக்கு எதிரானதே தனது நிலைப்பாடு என்றும் கூறி இந்திய அரசையும் நம்ப வைத்தார். ராஜீவ் கொலை என்ற ஒன்றினையே மனதிலிருந்து அகற்றாமல் இலங்கை ஜனாதிபதி அரசின் இராணுவத்துக்கு வேண்டிய ராடர் கருவிகள், ஆயுதங்கள், பயிற்சிகள் எல்லாவற்றையும் வழங்கியது இந்திய அரசு.

இதனால் என்ன விளைவு நடந்தது? இலட்சக்கணக்கான அப்பாவி ஈழத்தமிழர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடு இன்றி குண்டு மழை பொழிந்து ஈவிரக்கம் சிறிதும் இன்றி கொன்று குவித்தார்கள். தப்பியோடிய தமிழ் சனங்கள் தம் சொந்த இனத்தின் பிணங்கள் மீது கூட நடந்தே சென்றனர். அடக்கம் செய்யக்கூட வாய்ப்பில்லை.

போர் முடிந்து ஏறத்தாழ 4 ஆண்டுகள் கடந்த நிலையில் அரசியல் தீர்வு கண்டாகிவிட்டதா? அங்கு எஞ்சியுள்ள தமிழர்கள் இன்னமும் முள்வேலி மற்றும் இராணுவ முகாம்களுக்குள் சிறைப்பிடிக்கப்பட்டு வேற்று நாட்டு பிணைக் கைதிகளைப் போலத் தானே நடத்தப்படுகின்றனர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் (தமிழர் பிரதேசங்கள்) இராணுவம் நிறுத்தப்பட்டு இராணுவ அரசு அங்கு நடந்து கொண்டு அரச பயங்கரவாதம் கொடி கட்டிப் பறக்கிறது.

**தமிழ் ஊர்ப் பெயர்கள் சிங்களமாக மாற்றம்**

தமிழர்களின் பகுதிகளில் ஏராளமான சிங்களக் குடியேற்றங்கள் ஒருபுறம். தமிழர் பகுதியில் இருந்த தமிழ்ப் பெயர்கள் சில [illegible] பெயர்களாக மாற்றி [illegible] பற்றி டெசோ தலைவர் கலைஞர் கருணாநிதி சிலநாட்களுக்கு முன் அறிக்கை விடுத்து கண்டனம் எழுப்பி இந்திய அரசின் பொறுப்பில் உள்ளோருக்கும் வழிகாட்டும் தலைமைக்கும் கடிதம் எழுதியுள்ளார்கள். விடுதலை ஏட்டில் நீண்ட ஆதாரப் பூர்வ பட்டியலே வெளியிட்டுள்ளோம்.

ஐ.நா. உலக நாடுகள் ஏன் இன்னமும் வேடிக்கை பார்த்துக் கொண்டு மௌன விரதம் இருக்க வேண்டும்?

எம் தமிழர்கள் தொப்புள்கொடி உறவுகள் ஆயிற்றே. அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா? கொல்லப்பட்டவர்கள் இனப் படுகொலைக்கு ஆளானவர்கள் போக எஞ்சியவர்களுக்காவது வாழ்வுரிமை தரப்பட இலங்கை அரசினை வற்புறுத்தும் கடமை இந்திய அரசுக்கு உண்டே. அது பற்றியெல்லாம் கவலைப்படாது யாருக்கோ வந்த கொடுமை என்று இருப்பது எவ்வகையில் நியாயம் ஆகும்?

பல்லாயிரக்கணக்கான எமது மக்களின் வரிப்பணத்தை இலங்கைத் [illegible] தீர்களே! அது இப்போது யாருக்குப் பயன்படுகிறது?

**சர்வதேச சமூகம் வேடிக்கை பார்க்கலாமா?**

சிதைக்கப்பட்ட எம் தமிழர் பகுதிகளில் (வடக்கு, கிழக்கு மாகாணங்களில்) மறுவாழ்வு மீள்குடியமர்த்தப் பணிகள் சரிவர நடக்கவில்லை.

இலங்கை அரசியல் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின்படி தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று முன்பு இந்திய அரசிடம் இலங்கை அரசு ஒப்புக் கொண்டதே. போர்க்கால உதவிகள் கேட்டபோது மறந்து போய் விட்டதா?

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் மாணவர்கள் என்பதால் அவர்களின் கல்விக் கண்களைக் குத்தி அடைத்து பாழ்படுத்துகிறது.

இலங்கைப் பிரச்சினை குறித்து ஐ.நா. உலகநாடுகளும் உலக மனித உரிமை அமைப்புக்களும் உடனே இப்பிரச்சினைகளின் மீது ஓங்கிக் குரல் கொடுத்து தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும்.

**கடுமையாக கண்டிக்கின்றோம்**

இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் (தமிழ்நாடுதவிர) ஏனைய மாநிலங்களில் இராணுவப் பயிற்சி தருவோம் என்று கூறும் இந்திய இராணுவ அமைச்சரின் பேச்சுக்களை கடுமையாகக் கண்டிக்கிறோம்.

இராணுவத்தை விலக்கமாட்டோம் என்று இலங்கை அமைச்சர் இறுமாப்புடன் கூறுகிறார். தமிழ் நாட்டிற்கு மட்டும் என்றால் இந்திய ஒருமைப்பாடு பற்றி முழக்கமிடுவோர் இதில் மட்டும் வேறு கண்ணோட்டமா? தமிழனை ஏமாளியாக்க முயலுகிறார்களா?

**டெசோ கூட்டத்தில் முடிவெடுப்போம்**

எனவே தமிழ் மக்கள் உணர்வுகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்த நாம் அனைவரும் ஒர குரலில் முழங்குவோம்.

கலைஞர் தலைமையில் டெசோ கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி கூடவிருக்கிறது. இவை பற்றி நல்ல முடிவுகளை எடுத்து மூடிய உலக நாடுகளின் கண்களைத் திறக்கச் செய்வோம். ஆயத்தமாவீர்! இவ்வாறு கி.வீரமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து யுத்தம்!



முள்ளிவாய்க்கால் சம்பவத்திற்கு பின்னர் இலங்கை அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட விடுதலைப் புலிகள் இப்போது கருத்து போராட்டத்துக்கு பிள்ளையார் சுழி போட்டிருக்கிறார்கள். உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழர்களிடம் ஈழ ஆதரவு பிரசாரத்தை அவர்கள் மேற்கொண்டிருப்பதாக புலிகளின் ஆதரவாளர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியாக ***முள்ளி வாய்க்காலில் இருந்து ஓர் அவலக்குரல்*** என்ற புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத்தில் வாழும் சுமார் 90 ஆயிரம் விதவைகள் படும்பாட்டை முன்னாள் விடுதலைப் புலிவீரர் ஒருவர் இப்புத்தகத்தில் கண்ணீருடன் எடுத்துக்கூறியுள்ளார். கடந்த 27.12.12 அன்று சென்னை தியாகராய நகரில் வெளியிடப்பட்ட இப்புத்தகம் ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் வெகு வேகமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்களை குறிவைத்து இப்புத்தகம் விநியோகிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இலங்கையில் தமிழன் என்கிற இனத்தையே கருவறுப்பதற்காக ஈழத்தில் நடைபெற்று வரும் கொடூரங்களை தோல் உரித்துக் காட்டுகிறது. இப்புத்தகம் கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழர்கள் குறிப்பாக தமிழ்ப் பெண்கள், முன்னாள் போராளிகள் சிங்களவர்களிடம் படும்பாட்டை இப்புத்தகம் துல்லியமாக பிடித்தும் காட்டுகிறது. ச.சணாக்கியன் என்கிற புனைப் பெயரில் இப்புத்தகத்தை எழுதியிருப்பது விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய உறுப்பினராக இருந்த ஒருவர்தான் என்று கூறப்படுகிறது.

இப்புத்தகத்தில் பல அபூர்வ படங்களும் வெளியாகியிருக்கும் நிலையில் நூலாசிரியர் சாணக்கியன் தனது முகவரியாக அநாதைகள் தெரு நாயகம் என்று குறிப்பிட்டிருப்பது தான் வேதனையின் உச்சம்.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரேநாளில் நாற்பதாயிரம் பேரைக் கொன்று குவித்தது சிங்கள இராணுவம். இதனால் அதிக இழப்பு தமிழ் பெண்களுக்குத்தான். சுமார் 90 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 70 சதவிகிதம் பேர் 18 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள். தவிர 60 சதவிகிதம் பேர் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுக்குத் தாயானவர்கள். கணவனை இழந்த இவர்களின் நிலைமையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை. பிழைக்க எந்தவித வழியும் இன்றி அவர்கள் தங்கள் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக வேறுவழி தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் போரில் வென்றவனுக்கு தோற்றுப்போன ஆண்கள் வழங்கிய கம்பள விரிப்பாக பெண்களின் உடல்கள் மாறிப் போயிருக்கின்றன என்று உள்ளக்குமுறலோடு குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகள் ஆட்சியில் பாலியல் தொல்லை கொடுத்தவர் பங்கருக்குள் சிறை வைக்கப் படுவர். பற்பொடி கொடுக்கப்படும் போது தான் விடிந்ததே அவருக்கு தெரியும். தவிர நடுவீதி, மரண தண்டனையும் உண்டு. இன்றோ நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. பெண்கள் சிங்களவர்களால் மாற்றப்பட்டுவிட்டார்கள். கலாசார சீர்கேடு திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. ஒரு காலத்தில் புலிகளோடு பேசுவது, இணைந்து நின்று புகைப்படம் எடுப்பதை பாக்கியமாக கருதிய மக்கள் இன்று புனர்வாழ்வு தேடி அலையும் முன்னாள் புலிகளை கேலி பேசுவதும் காட்டிக் கொடுப்பதுமாக இருக்கிறார்கள். அதிலும் பெண் போராளிகள் பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் போக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பெண்களைப்போல் தாய்- தந்தையர் இல்லாத 27 ஆயிரம் அநாதைச் சிறுவர்களும் எதிர்கால பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லும் அந்தப் புத்தகம் இன்னொரு தகவலையும் சொல்கிறது. போருக்கு பின்னர் 7 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் சுற்றளவை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது. 2 ஆயிரத்து 500 கோயில்கள், 400 கிறிஸ்தவ ஆலயங்களை அழித்து அந்த இடத்தில் 2 ஆயிரத்து 500 புத்த விஹாரைகளை நிர்மாணித்திருக்கிறது. பண்டார வன்னியன், சங்கிலியன் சிலைகளையெல்லாம் கூட அரசே அழித்துவிட்டது.

> **புலிகளோடு பேசுவது, புகைப்படம் எடுப்பதை . பாக்கியமாகக் கருதி மக்கள் இன்று கேலி பேசுவதும் காட்டிக் கொடுப்பதுமாக இருக்கின்றார்கள்.**

ஒவ்வொரு கிராமத்திலும் நிலங்களை இராணுவமே எடுத்துக் கொண்டு வருகிறது. குறிப்பாக திருநகர் என்கிற இடத்தில் பொட்டு அம்மானுக்கு சொந்தமான நிலத்தி ற்கு 4 பேர் உரிமை கொண்டாடவே இராணுவம் அந்த நிலத்தை தனதாக்கி கொண்டிருக்கிறது. போரில் வென்றதால் தமிழன் நமக்கு அடிமை என்கிற மனப்பான்மையே சிங்கள மக்களிடம் இருக்கிறது. எனவே, தாயகத்தில் தத்தளித்து கொண்டிருக்கும் விதவைகள் முன்னாள் போராளிகளுக்கு உதவுங்கள் என்கிற கோரிக்கையுடன் புத்தகத்தை முடித்திருக்கிறார் அந்தப் புத்தகத்தின் ஆசிரியர்.

1980 களில் ஈழத்தில் பிரபாகரனால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவை இப்புத்தகத்தை தமிழ் நாட்டில் வெளியிட்டுள்ளது.

முத்துக்குமார் தீக்கு எரித்து இறந்த பின்பு இந்த அமைப்பு தமிழ் நாட்டில் தோற்றுவிக்கப்பட்டது குறி ப்பிடத்தக்கது. இதில் தமிழக அமைப்பாள ரான பாலகுரு தம்மிடம் பேசுகையில், முன்னாள் விடுதலைப்புலியான சாணக்கியன் தான் எழுதிய புத்தகத்தை வெளியிட எங்களைத் தொடர்பு கொண்டார். நாங்களும் உதவி செய்தோம். அவ்வளவுதான் என்றார்.

புலிகளின் தீவிர விசுவாசியும் பா.ம.க. கொள்ளை விளக்க அணித்தலவருமான வியனர்சுவிடம் இது குறித்து கேட்ட போது, 1980 களில் தமிழ் நாட்டில் புலிகள் தங்கள் கருத்துக்களை கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்களிடம் தான் பரப்புரை செய்தார்கள்.

அதன் விளைவாக 1983 இல் பெரும் எழுச்சி ஏற்பட்டது. தற்போது அதே யுக்தியைக் கையில் எடுத்து தங்கள் கருத்துப்போரை புலிகள் தொடங்கியிருக்கிறார்கள். அதன் ஒரு பகுதி தான் இந்தப் புத்தகம் என்றார்.

இலங்கையில் தமிழர்கள் வாழ்வில் ஒளி வீச இந்தப் போராட்டமாவது வெல்லட்டும்.

நன்றி குமுதம் ரிப்போட்டர்

## இந்திய மீனவர்களால்

# மீன்வளம் அழிக்கப்படுவதைக் கண்டித்து மன்னாரிலிருந்து முல்லைத்தீவிற்கு நடைபயணம்

## பேரணி இன்று ஆரம்பமாகிறது

(பூந்தோட்டம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் மீன்வளம் அழிக்கப்படுவதைக் கண்டித்து போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் சார்பில் இன்று மன்னார் முள்ளிக்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரை நடைபாதைப்பேரணி நடைபெறவுள்ளதாக அவ்வமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பினை நேற்று அவருடைய அலுவலகத்தில் நடத்தியபோதே இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகரில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. உண்ணாவிரதத்தின் 4 ஆவது நாளான 13 ஆம் திகதி அரசாங்கத்தின் உத்தரவின்பேரிலும் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்கள் சமாசங்களின் தலைவர்களின் அழைப்பின்பேரிலும் அங்குவந்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கொடுத்த வாக்குறுதியை அடுத்து ஒரு மாத காலக்கெடு வழங்குவதாக முடிவு எடுக்கப்பட்டதுடன் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டமும் முடித்து வைக்கப்பட்டது.

இருந்தபோதிலும் என்னாலும் வடமாகாண மீனவர் சங்க பிரதிநிதிகளாலும் அரசுக்குக் கொடுத்த காலக்கெடு முடிவடைந்துள்ளது. ஆனால், எமது நோக்கம் இதுவரை காலமும் நிறைவேற்றப்படவில்லை. இருந்தபோதிலும் என்ன நோக்கத்தை முன்வைத்தோமோ அந்த நோக்கத்தை அடையும்வரை நாம் ஓய்வெடுக்கமுடியாது. கட்டுப்பாடில்லாத இந்திய மீனவப் படகுகளின் அத்துமீறலால் எமது கடல்வளம் அழிக்கப்படுகின்றது. இது போதாதென்று எமது கடலில் மீன்பிடிக்க அனுமதி கோரி இந்திய மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கடந்த 30 வருட காலமாக கடலுக்குச் செல்லமுடியாமல் எமது மீனவர்கள் கால் வயிறு கஞ்சிக்கு போராடிக்கொண்டிருக்க இதுவரை காலமும் கள்ள மீன்பிடித்தவர்கள் இப்போது எங்கள் உலைப்பானைக்கே கை வைக்கப்பார்க்கிறார்கள். ஒரு ரூபாயல்ல இரண்டு ரூபாயல்ல வருடம் ஒன்றிற்கு இந்திய மீனவர் அத்துமீறலால் நாம் இழக்கும் மீன்வளம் இருபத்தொராயிரம் கோடிக்குமேல் (210,000,000,000/= ரூபா 210 பில்லியன்). இது எமது மக்களின் சொத்து. எமது மக்களுக்குச் சேரவேண்டிய பணம் இது. எமது மக்களுக்கு கிடைக்கப் பாடுபட வேண்டியது எமது பொறுப்பு.

இதனை அரசாங்கத்திற்கும் இந்திய அரசுக்கும் சம்பந்தப்பட்ட சகலருக்கும் தெரியப்படுத்தி எமது மீனவ சமூகத்தை அழிவிலிருந்துமீட்டு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதற்காக இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாண யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட 4 மாவட்டங்களிலும் 225 மீனவர் சங்கங்களும் 16 சமாசங்களும் 69 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களும் உள்ளனர்.

இவைத்தவிர கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த மகளிர் அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக்கழகங்கள், பொது அமைப்புக்கள் என்பனவும் இதற்கு ஆதரவு தரவேண்டும். எமது மீனவ சமூகத்தின் வளமான எதிர்காலத்திற்காக அனைவரையும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணையுமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.

மீனவர் அமைப்புக்கள் மட்டுமல்லாது வடமாகாணத்தினைச் சேர்ந்த பொது அமைப்புக்களும் பேதங்களை மறந்து குரல்கொடுக்க முன்வரவேண்டும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்தவேண்டும். எமது கரையோர இயற்கை வளங்களை பாதுகாக்கவேண்டும். எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றவேண்டும் எனக்கோரி நடைபயண பேரணி இன்று மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கிராமத்தில் ஆரம்பித்து வடமாகாணம் முழுவதும் கரையோரமாக நகர்ந்து முல்லைத்தீவு கொக்கிளாய் கிராமத்தில் முடிவு பெறும். பேரணியின் முடிவில் முல்லைத்தீவில் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக மாபெரும் கண்டனக்கூட்டம் ஒன்று நடைபெறும். கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் எனவும் தெரிவித்தார். (செ-9-266)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## காதலிக்கு இதயத்தைக் கொடுப்பது சரியா?

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசர்!

பாவத்தின் மேல் பாவம் செய்பவர்கள் அதிலிருந்து மீள என்ன வழி!

*பாவம் செய்பவன் தான் செய்வது பாவம் என எப்போது எண்ணுகிறானோ அப்போதே அவன் பாவம் செய்யாமல் திருந்தி விடுகிறான். தான் செய்வது பாவம் எனத் தெரிந்தும் மீண்டும் மீண்டும் பாவம் செய்பவர்கள் நிச்சயமாக நரகம் செல்வார்கள். அங்கு அவர்களுக்கு மீளாத்துயர் காத்திருக்கிறது.*

*நி.சங்கீதா, மீசாலை*

அன்பின் வியாசர்!

பொறுமையாகப் படிக்க முடியவில்லையே வழிகூறும்?

*பொறுமையாக இருக்க முயலும். அதில் வெற்றி கண்டபின் பொறுமையாக படிக்க முயன்று பாரும் வெற்றி பெறுவீர்.*

*அஜந்தன், மாதகல்*

வியாசர் சேர்!

காதலிக்கு இதயத்தைக் கொடுப்பது சரியா?

*இந்த விடயத்தில் தான் கடவுளுக்கு நன்றி கூற வேண்டும். இல்லாவிட்டால் நம் வீதியெங்கும் இதயங்கள் வீசி எறியப்பட்டிருக்கும்.*

*இ.குருபரந்தாமன், திடல் அல்வாய்*

வியாசர் அண்ணா!

என் உறவுகளுக்கு எது சொன்னாலும் புரியாதே. என்ன செய்யலாம். எப்படி புரிய வைக்கலாம் வியாசர் அண்ணா.

*முற்றத்து மல்லிகை மணம் வீசாது பரந்தாமன். தொட்டபின் தான் நெருப்பு சுடும் என புரிவேன் என அடம்பிடித்தால் விட்டுவிடும் பட்டுத் திருந்தட்டும்.*

*தர்சிகா, யாழ்ப்பாணம்*

அன்பின் வியாசர்!

தாங்கள் அண்ணாவா? அப்பாவா? தாத்தாவா? எனக்கிந்த உண்மை தெரிஞ் சாகணும்?

*இப்போது அண்ணா. இன்னும் இரண்டு வருடத்தில் அப்பா. அதிலிருந்து இருபது வருடத்தில் தாத்தா போதுமா தர்ஷி.*

### என் உறவுகளுக்கு எது சொன்னாலும் புரியாதே. என்ன செய்யலாம். எப்படி புரிய வைக்கலாம் வியாசர் அண்ணா.

*பா.மதனபாரதி, அல்வாய்*

அன்பின் வியாசர்!

சந்தேகம் என்பது எதுவரை வியாசர் சேர்?

*மனிதனுக்கு வரும் வியாதிகளில் சந்தேக வியாதி இருக்கின்றதே அது மிக மோசமானது. அது வந்தால் அவன் சந்ததியே மீள முடியாது!*

*க.சி.சதாசிவம், மட்டுவில்*

வியாசர் சேர்!

நீங்கள் இயற்றுவது புதுக்கவிதையா அல்லது மரபுக் கவிதையா?

*நான் எழுதினால்தானே அதற்கு பதில் சொல்லாம். எல்லாம் சுட்ட கவிதைகள். எழுதிய கவிஞர்களை கேட்டு விட்டு சொல்கின்றேன் Mr. சதாசிவம்.*

*பொ.இளவரசி, நெல்லியடி*

வியாசர் சேர்!

உங்களுக்கு அனுப்பப்பட்ட கேள்விகளில் உங்களைக் கவர்ந்த கேள்வி எது?

*வியாசர் சேர் நீங்கள் ரொம்ப அழகென்று பேசுகிறார்களே உங்களைப் பார்க்கலாமா? இதுதான் என்னை மெய்சிலிர்க்க வைத்த கேள்வி*

**அன்பு வாசகர்களே....!**

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், 'வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# செட்டிகுளம் கப்பாச்சி கிராமத்தில் பலநோக்கு கூ.சங்கம் இல்லை.

## மக்கள் சிரமம்

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் கப்பாச்சி கிராமத்தில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் இன்மையால் பல மைல் தூரம் சென்று நிவாரணம் மற்றும் பொருட்களை வாங்க வேண்டியுள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில், எமது கிராமத்தில் நாம் குடியேறுவதற்கு முன்னரே பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கான கட்டடம் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கட்டப்பட்டு விட்டது. அதன் பின்னர் நாம் குடியேறி சிறிது காலம் திறந் திருந்த கூட்டுறவுச் சங்கமானது மக்களுக்கு பெரும் உதவியாக இருந்ததுடன் எமக்கு தேவையான பொருட்களை உடன் வாங்கும் வசதியும் காணப்பட்டது.

இக் கிராமம் ஏனைய கிராமங்களில் இருந்து தனித்து காணப்பட்ட கிராமம் என்பதோடு மட்டுமன்றி போக்குவரத்துக்கு பாதையற்றும் இருந்தது. எனவே, மிகவும் உதவியாக காணப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தினை எவ்வித அறிவிப்புமின்றி சில மாதங்களில் மூடி விட்டனர். பின்னர் எமது கிராமத்தின் ஊடாக பலகோரிக்கை விடுத்தும் திறக்கப்படாது காணப்படுவதுடன் பலநோக்கு கூட்டுறவுச்சங்க கட்டடம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு பாழடைந்த கட்டடமாக காட்சியளிக்கின்றது.

அத்துடன் நாம் தற்போது முதலியார் குளம் கிராமத்திற்கு சென்றே பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதுடன் போக்குவரத்து வசதியின்மையால் அங்கிருந்து பொருட்களை தலையில் சுமந்தும் துவிச்சக்கரவண்டிகளிலுமே கொண்டு வருக்கின்றோம். எனவே, எமது கிராமத்தில் உள்ள இக்கட்டடத்தினை திறந்து கூட்டுறவு சங்கத்தை நடத்துவார்களேயானால் இங்கு வாழும் 88 குடும்பத்தவர்களும் பயன் பெறக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை வில்வராசா தெரிவிக்கையில்,

கப்பாச்சி கிராமத்தில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினை திறந்து நடத்தி வந்திருந்தோம். எனினும் அங்கு போதுமான வருமானமில்லை. எமக்கு இலாபம் இல்லாவிட்டாலும் நட்டம் ஏற்படாது இருத்தல் வேண்டும் என்பதனால் அதனை மூடியிருந்தோம். அத்துடன் வன்செயல் காரணமாக கட்டடம் சேதமடைந்துவிட்டது. தற்போது அதனை திருத்துவதற்கு எமது சங்கத்திடம் பணம் போதுமானதாக இல்லை. அரசாங்கம் பணம் தருமாயின் திருத்தம் செய்யலாம். இதுவே எமது நிலைப்பாடாக உள்ளது என தெரிவித்தார். (அ-9-266)

# 238 மாணவர்களுக்கு 500 ரூபா வீதம் உதவி

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க சமூக அபிவிருத்தி மன்ற ஏற்பாட்டில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 238 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 500 ரூபாவை கல்வி ஊக்கத் தொகையாக வழங்குவதற்கான ஆரம்பநிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெற்றது.

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தினால் கடந்த வருடம் புகைத்தல் எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு சேகரிக்கப்பட்ட சுமார் 21 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தின் உதவியுடன் இந்த மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா கல்வி உதவித்தொகையாக வழங்கப்படவுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ்.பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மேற்படி திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 100 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இதன்பின்பு 2011 ஆம் ஆண்டு 100 மாணவர்களுக்கு தலா 500 ரூபா கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த வருடம் 238 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. (அ-6)

# அரசியல் கட்சிகளின் விபரங்கள் 31 ஆம் திகதி காட்சிப்படுத்தப்படும்

## தேர்தல் ஆணையாளர்

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளினதும் பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப் போவதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறுவதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் யாப்பின் அடிப்படையில் சொத்துக்கள் தொடர்பான பிரகடனங்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்த அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியலை மேற்படி திகதியில் வெளியிடப்போவதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் செயலாளர்களினால் இது தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கும்படி கோரிக்கை விடப்பட்டது.

இதனை முன்னிட்டு இவ்வாறு கால அவகாசம் வழங்கப்பட்டதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தேவையான தகவல்களை வழங்காத அரசியல் கட்சிகளின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படவுள்ளது.

இலங்கையில் இதுவரை 64 அரசியல் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய அமர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வு இலங்கையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

திட்டமிட்டவாறு எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறும்.

இவ்வாறான தகவல்கள் அடிப்படையற்றவை எனவும் போலி வதந்திகள் எனவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுமக சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வது வெட்கப்படத்தக்கது அல்ல; தாழ்ந்து கிடப்பது தான் வெட்கப்படத்தக்கது.
–பீச்சர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அவசரமாக நடந்த நாய்களின் மாநாடு

கட்டாக்காலி நாய்களை அழிப்பதென்ற தகவலையடுத்து தெருநாய்களும் வீட்டு நாய்களும் அவசர அவசரமாக நடத்திய மாநாட்டில் தலைவர் ஆற்றிய உரை நேற்று இப்பகுதியில் வெளிவந்திருந்தது.

நாய்களின் மாநாட்டில் ஆக்ரோசமாக உரையாற்றிய நாய்க் கூட்டத் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாய்கள் கடைசிப் பிறப்பென்பதால் எங்களின் மரணம் பற்றி யாழ்ப்பாண மக்களுக்கு இம்மியும் கவலையில்லை.

ஆனால் எங்கள் இனத்தின் காவலால்தான் எத்தனையோ பேர் நிம்மதியாக உறங்குகிறார்கள்.

இவர்களில் பலரின் உயிர்களையும் பெறுமதியான உடைமைகளையும் காப்பாற்றிய பெருமை எங்களையே சாரும்.

நிலைமை இதுவாக இருக்க, எங்களைப் படுகொலை செய்வதென்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

ஓ! அன்புக்குரிய யாழ்ப்பாண மக்களே! இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த ஓர் காளை மாட்டின் உயிரை காப்பாற்றுவதற்காக நீதிமன்றம் சென்ற நீங்கள், எங்கள் உயிரை மட்டும் காப்பாற்றுவதற்கு ஏன் முயற்சிக்கவில்லை?

ஆக, யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் வாழ்ந்த சட்டத்தரணி சண்முகநாதன் என்ற அன்பர் ஒருவர், தன் வளர்ப்பு நாய்க்கு யாழ்ப்பாண மாநகர சபை மரண தண்டனை கொடுத்ததை எதிர்த்து வவுனியா நீதிமன்றில் யாழ். மாநகர சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் இயங்காத காலத்தில் வவுனியாவுக்குச் சென்று அங்குள்ள நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்த சட்டத் தரணி சண்முகநாதனின் ஜீவகாருண்யம் இங்கு வேறு யாருக்கும் இல்லையா என்ன?

அந்த பெரியார் இறந்து போனதால் எங்களுக்கான தீர்ப்பு கிடைக்காமல் போய்விட்டது.

சிவபூமி என்று போற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் எங்கள் தொடர்பில் எவரும் இரக்கம் காட்டாமை வேதனை தருகிறது.

அன்புக்குரிய யாழ்ப்பாண மக்களே! யுத்த சூழலால் நீங்கள் சொந்த மண்ணை விட்டு இடம் பெயர்ந்தபோது எத்துணை துன்பப்பட்டீர்கள். அதுபோலத்தான் உங்கள் வீட்டில் வளர்த்த எங்களை தடியால் அடித்து தெருவுக்கு அனுப்பிய போது நாங்களும் வேதனைப்பட்டோம்.

தவறு உங்கள் பக்கம் இருக்கும்போது எங்களுக்கு தண்டனை கொடுப்பது நியாயம் என்று நினைக்கிறீர்களா?

டெங்குபரப்பும்நுளம்புபெருகுகின்றசந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால் மனிதர்களுக்குத் தண்டனை. டெங்கு நுளம்புக்கு விடுதலை.

வாகனங்களுக்கு வரி அனுமதிப் பத்திரம் எடுக்காவிட்டால் வாகன உரிமையாளர்களுக்குத் தண்டனை. ஆனால் எங்களை வளர்க்கின்றவர்கள் எங்களுக்கு ஏஆர்வி மருந்தேற்றி எங்களை நல்ல முறையில் பராமரிக்காவிட்டால் எங்கள் எசமானருக்குத் தண்டனையில்லை. மாறாக எங்களுக்குத் தண்டனை அதுவும் மரண தண்டனை.

ஓ!யாழ்ப்பாணத்தின் உயர் பண்பாட்டுப் பெருமைக்குரிய மக்களே! டெங்கு நுளம்புக்கு ஒரு நீதி. எங்களுக்கு மறுநீதியா?

(நாளை தொடரும்)

# மரக்கறி வகைகளின் விலைகளை கட்டுப்படுத்த துரித திட்டம்

## கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அமைச்சு நடவடிக்கை

அதிகரித்துள்ளமரக்கறிவகைகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான துரித திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டுஅமைச்சுநடவடிக்கைஎடுத்துள்ளது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பணிப்புரைக்கமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்பிரகாரம் மரக்கறி உற்பத்திகளை நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து மொத்த விற்பனை நிலையங்கள் ஊடாக சலுகை விலையில் நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயிகள் மரக்கறி உற்பத்திகளை இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஊடாக கொள்வனவு செய்வதற்காக மாத்தளை, அநுராதபுரம், புத்தளம், நுவரெலியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டச் செயலாளர்களுடன் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

விவசாயிகளின் உற்பத்திகளை நேரடியாகக் கொள்வனவு செய்வதன் மூலம் சந்தையில் நிலவுகின்ற விலைகளை விடக் குறைவான சலுகை விலையில் நுகர்வோருக்கு மரக்கறி வகைகளை விநியோகிக்கமுடியும் என்பதுடன் உற்பத்தியாளர்கள் சிறந்த விலையைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய திட்டத்தின் அடிப்படையில் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மாத்தளை மாவட்டத்தில் நேற்றையதினம் ஆரம்பமாகியுள்ளது.

அத்துடன் இந்தப்புதிய கொள்வனவுத் திட்டத்தின்மூலம் இடைத்தரகர்களிடம் இருந்து நுகர்வோரையும் விவசாயிகளையும் பாதுகாக்க முடிபதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (செ-2)

# அச்சுவேலி சந்தைத் தொகுதி நேற்று முன்தினம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபைக்குட்பட்ட அச்சுவேலிப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள மேற்படி பிரதேச சபையின் வருமான மையங்களில் ஒன்றாக விளங்கும் இந்தச் சந்தைக் கட்டிடத் தொகுதியினை பிரதேச சபையின் தவிசாளர் அ.உதயகுமார் மற்றும் ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒரு சில எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இணைந்து திறந்து வைத்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மதியம் 12.30 மணியளவில் இந்த சபைக் குட்பட்ட அச்சுவேலி பேருந்து தரிப்பிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த பேருந்து தரிப்பிட திறப்பு விழாவில் பிரதேச சபையின் தவிசாளர் உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரும் பங்குகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சேவற்கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர்



புன்னுனிமேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை
என்னினிநீர் எண்ணி வருந்துவீர்– மண்ணுலகில்
ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்
கூறு மதுவே குணம்

இளமை நிலையா தெனவறிந்து வேலன்
பழைமை தருமடியைப் பின்பற்றும்– எழுமையும்
இன்பந் தருமே யிலங்கைமா நன்னாட்டீர்
அன்பிற் பணிவீ ரறிந்து

# வரலாற்றை நாமும் மாற்ற மனம்மாறுவோம்

கத்தோலிக்க திருச்சபை பவுலின் மனமாற்றத்தை இன்று கொண்டாடுகின்றது. பவுல் பென்சமின் குலத்தைச் சேர்ந்த யூதக்குடும்பத்தில் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். இவரது யூதப் பெயர் சவுல். இவர் தர்சு நகரத்தைச் சேர்ந்தவர். இவர் யூதச் சட்டம் நெறிமுறைகளையும் கற்றவர். அன்றைய உலகப் பொதுமொழியாம் கிரேக்கம் கற்றவர். இவர் கி.பி.60 இல் கைது செய்யப்பட்டு நீரோ மன்னன் காலத்தில் மரணதண்டனை பெற்றார் என மரபு கூறுகிறது.

இவர் யூதக்கோட்பாடுகளையும் நன்கறிந்து பரிசேயர் சமயப் பிரிவின்

## பரமபிதா காட்டிய பாதை

உறுப்பினராகவும் இருந்தவர். இப் பிரிவினர் ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்களை துன்புறுத்தி வந்தனர். அவர்களுடன் சேர்ந்து இவரும் அவர்களை துன்புறுத்தி வந்தார்.

சவுலாகிய இவர் சீறி எழுந்து திருத்தொண்டு செய்யும் முடியப்பரை கல்லெறிந்து கொல்வதற்காகவும் இயேசுவினுடைய சீடர்களைக் கொன்று விடுவதாகவும் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதாகவும் தமஸ்குநகர் சென்று கொண்டிருந்தார். போகும் வழியில் இவரை இயேசு தடுத்து ஆட்கொள்கின்றார். திடீரென வானத்தில் ஓர் ஒளி அவரை ஆட்கொண்டது. அவர் தரையில் விழ சவுலே சவுலே ஏன் என்னை துன்புறுத்துகிறாய் என்று ஓர் குரல் தொடர்ந்து ஒலித்தது. அதற்கு அவர் ஆண்டவரே நீ யார்? எனக்கேட்டார். இயேசு மறுமொழியாக நீ துன்புறுத்தும் இயேசு நானே! உடனே நீ நகருக்குள் செல்! நீ என்ன செய்ய வேண்டும் என்று உனக்கு அறிவிக்கப்படும். இவ்வாறு ஆண்டவரின் மீட்புப் பணியை உலகெலாம் பறைசாற்றிடத் தாம் தேர்ந்துகொள்ளப்பட்டார் என

உணர்ந்து ஆண்டவரின் கருவியாக செயற்பட்டார். இயேசுவை யார் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ அவர்களிடையே பிறந்த சவுல் பவுலாக மாற்றி இயேசு தான் உண்மை மெசியா என்பதை அவர் நாவினாலே அறிக்கையிடும் விதமாக அமைந்தது அவரது இந்த மனமாற்றம். பவுலில் வாழ்க்கை யின் இந்த நாள் வரலாற்றை மாற்றியமைத்தநாள்.

கிறிஸ்தவர்களை எதிர்த்துச் சென்றார் சவுல். எதிர்ப்பட்ட கிறிஸ்துவை சந்தித்து பவுலாக இனி வாழ்பவன் நானல்ல. என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் என்று கூறக்கூடிய நிலையை அடைகிறார். இதுதான் மனமாற்றம். மயக்க நிலையிலிருந்து விழிப்பு நிலைக்குத் திரும்புதல். பாறைக்குள் பதுங்கியிருந்த புதுமையைப் பக்குவமாய் தட்டி எடுக்கும் அதிசயம். முள்ளில் விழுந்த சேலையைக் கிழிபடாமல் எடுக்கும் கலை. எல்லாம் இழந்து இறைவனை மட்டும் பற்றிக்கொள்ளும் இரகசியம்.

**நீ துன்புறுத்தும் நாசரேத்தூர் இயேசு நானே** என்ற சொற்கள் பவுலுக்கு மட்டுமன்று நமக்கும் பாடமாய் அமைகின்றன. கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்டு அவரை நேசிப்போமாயின் எல்லோரையும் நாம் நேசிக்கவேண்டும். கிறிஸ்தவர்களுக்கு எதிராகவே சாதி, குலம், ஏழ்மை முதலிய அடிப்படையில் வேறுபாடுகள் காட்டுவோமாயின் கிறிஸ்துவையே எதிர்த்துப்போராடுகிறோம் என்பதை உணர்கிறோமா. மனமாற்றம் ஒருவரது வாழ்வின் உயர் குறிக்கோளை சரியான பாதையில் மாற்றியமைக்கிறது.

மனமாற்றம் அறிவுசார்ந்ததல்ல. கொள்கை சார்ந்ததல்ல. கோட்பாடுகளின் மாற்றம் அல்ல. உடலில், உடையில் உள்ள மாற்றம் அல்ல. இயேசுவோடு உண்டான தனிப்பட்ட நெருக்கமான உறவில் விளைந்த ஒன்று. உறவை மறுக்க முடியாது. அப்படித்தான் பவுல் மாட்டிக்கொண்டார். இத்தகைய மனமாற்றம் எவருக்கும் எப்பொழுதும் எந்த நேரத்திலும் ஏற்படலாம். அதற்கென தகுதி, நேரம், காலம் இல்லை.



பவுலின் மனமாற்றம் அவர் புதிய ஞானத்தை வழங்கி திருச்சட்டம் இறைவாக்கினர்கள் பற்றிய உண்மையை புதிய வழியில் விளக்கவும் தனது விண்ணக போதகரைப் பின்பற்றி அனைவருடனும் உரையாடல் நடத்தவும் உதவியது.புனித பவுலின் மனமாற்றம் அவர் உயிர்நீத்த கிறிஸ்துவை சந்தித்ததில் முதிர்ச்சியடைந்தது. அதுவே அவரது வாழ்வை அதிரடியாக மாற்றியது. பவுல் நற்செய்தியை நம்பியதால் மனம் மாறினார். பவுலது மற்றும் நமது மனமாற்றம் இறந்து உயிர்த்த இயேசுவை நம்புவதிலும் சுடர்விடும் அவரின் இறையருளுக்கு நம்மை திறந்துவைப்பதிலும் அடங்கியுள்ளது. கிறிஸ்தவர்களை துன்புறுத்திய தனக்காகவும் இயேசு இறந்தார். இப்பொழுது அவர் உயிர்த்தெழுந்துள்ளார் என்ற உண்மையைத் தனது மீட்பு சார்ந்துள்ளது என்பதை பவுல் புரிந்துகொண்டார்.

எனவே ஒருவரின் மனமாற்றம் என்பது இயேசு சிலுவையில் எனக்காக இறந்தார் என்றும் உயிர்த்தெழுந்த அவர் என்னில் என்னோடு வாழ்கிறார் என்றும் நம்புவதாகும். இயேசுவின் உறவில் மகிழ்ந்துவாழவும் பிறரை வாழ்விக்கவும் நம்மையும் எதிர்பாராத வேளையில் இயேசுஅழைக்கலாம். எனவேவரலாற்றை நாமும் மாற்ற மனம்மாறுவோம்.

ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹசி நீக்கம்

மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான முதலிரண்டு ஒருநாள் போட்டியில் விளையாடும் அவுஸ்திரேலிய அணியில், டேவிட ஹசி இடம்பெறவில்லை.

அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் செய்யவுள்ள மேற்கிந்தியத் தீவு அணி ஐந்து ஒருநாள் மற்றும் ஒரு ருவென்ரி-20 போட்டியில் பங்கேற்கிறது. ஒருநாள் தொடரின் முதலிரண்டு போட்டிகள் பெர்த்தில் பெப். 1, 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மோசமான துடுப்பாட்டம் காரணமாக, டேவிட் ஹசி நீக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் நடைபெற்ற இலங்கைகது எதிரான ஒருநாள் தொடரில் இவரது செயற்பாடு திருப்தி அளிக்காததால் நீக்கப்பட்டார். இவருக்கு பதிலாக ஆரோன் பின்ச் தேர்வு செய்யப்பட்டார். சமீபத்தில், இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகம் செய்யப்பட்ட இவர், இதுவரை 2 ஒருநாள் மற்றும் 3 சர்வதேச ருவென்ரி-20 போட்டிகளில் விளையாடி உள்ளார். அத்துடன் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சனுக்கும் இடம் கிடைக்கவில்லை.

**அணி விபரம்:** மைக்கேல் கிளார்க் (கேப்டன்), ஜார்ஜ் பெய்லி, பென் கட்டிங், சேவியர் தோகர்டி, ஆரோன் பின்ச், ஹென்றிகுயஸ், ஹியுஸ், மிட்சல் ஜான்சன், மேக்ஸ்வெல், மெக்கே, மிட்சல் ஸ்டார்க், மாத்யூ வேட், டேவிட் வார்னர்.

# நியூசிலாந்துடனான 3 ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா

# இறுதிப் பந்தில் ஆறுதல் வெற்றி



தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஆவதும் இறுதியுமான ஒருநாள்போட்டியில் தென்னாபிரிக்க அணி இறுதிப் பந்தில் 6 ஓட்டங்களைப் பெற்று ஆறுதல் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் ஏற்கனவே 2 போட்டிகளில் தோல்வியடைந்து தொடரையும் இழந்திருந்த நிலையில் 3 ஆவது போட்டி சென்வெஸ்பார்க் கில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 9 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்கள் எடுத்தது. முனரோ 57, எலியாட் 54, பிராங்க்ளின் 53, குப்தில் 5, வாட்லிங் 20, வில்லியம்சன் 6, மெக்குலம் 13 ஓட்டங்களைப் பெற்றனர். தென்னாபிரிக்கா சார்பில் சோட் சோபி, மெக்லாரன் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

261 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி கடும் போராட்டத்தின் பின் இறுதிப் பந்தில் வெற்றியை தன் வசப்படுத்தியது.


இவ்வணி சார்பாக ஸ்மித் 130 பந்தில் 14 பவுண்டரியுடன் 116 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றார். இங்ராம் 25, டுபிளஸ்சிஸ் 19, பகருதீன் 4, மில்லர் 15, கெல்வின்டெட் 6, பாங்கிசோ 9 ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதி ஓவரில் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பிராங்க்ளின் வீசிய முதல் 4 பந்துகளில் 5ஓட்டங்கள் பெறப்பட்டது. 5 ஆவது பந்தில் ஸ்டெய்ன் ஆட்டமிழந்தார். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு அதிகரித்தது. இறுதிப் பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் மெக்லாரன் சிக்சர் விளாசி வெற்றிக்கனியை பறித்தார். முடிவில் தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. மெக்லாரன் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆட்டநாயகன் விருது ஸ்மித்திற்கு வழங்கப்பட்டது.

## இந்த ஆண்டு முதலிடத்தை பிடிப்பேன்

### - பூப்பந்தாட்ட வீராங்கனை சூளுரை



லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நெஹ்வால், தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தை பிடிப்பேன் என்று சூளுரைத்துள்ளார்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவரிசைப்பட்டியலில் இரண்டாமிடத்தை பிடித்த சாய்னா இது குறித்து கூறுகையில், கடந்த ஆண்டு எனக்கு சிறப்பானதாக அமைந்தது. ஒலிம்பிக் பதக்கம் உட்பட ஐந்து தொடர்களில் சம்பியன் பட்டம் வென்றேன்.

இந்த ஆண்டு 'ஆல் இங்கிலாந்து' மற்றும் உலக சம்பியன் தொடர் என்று குறைந்தது 15 முதல் 20 தொடர்களில் பங்கேற்க உள்ளேன்.

பூப்பந்தாட்ட போட்டிகளில் சீன வீர, வீராங்கனைகள் வல்லவர்கள். அவர்களை எளிதில் வெல்ல முடியாது. இருப்பினும் கடுமையாக போராடியதால் தான் தற்போது இரண்டாம் இடத்தை பிடிக்க முடிந்தது. தற்போது முதல் இடத்தில் ஒரு சீன வீராங்கனை தான் உள்ளார். அவருக்கும் எனக்கும் சுமார் 12,000 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது. தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்த ஆண்டு முதல் இடத்திற்கு முன்னேறுவதே எனது முதல் இலக்கு என்றும் முயன்றால் முடியாதது எதுவும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

## அரையிறுதியுடன் வெளியேறினார் பெடரர்

அவுஸ்திரேலிய டெனிஸ் அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, ரோஜர் பெடரருடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் 6-4, 6-7(5-7), 6-3, 6-7(2-7), 6-2 என்ற கணக்கில் முர்ரே போராடி வெற்றி பெற்றார். இதன்மூலம் அவுஸ்திரேலிய டெனிஸில் 3 ஆவது முறை இறுதிப் போட்டிக்கு முர்ரே தகுதி பெற்றிருக்கிறார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் ஆண்டி முர்ரே, நடப்பு சாம்பியன் நோவக் ஜோகோவிச்சுடன் மோத உள்ளார்.

## விழாக்கோலம் பூண்டது தர்மசாலா

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவது போட்டி தர்மசாலாவில் இன்று நடைபெறுகிறது. முதன் முதலாக சர்வதேச போட்டி இப்பிரதேசத்தில் நடைபெறுவதால் விழாக்கோலம் பூண்டுள்ளது தர்மசாலா.

தர்மசாலாவில் வெயில் இருக்காது என்பதால், துடுப்பாட்டவீரர்களுக்கு சாதகமாக இருக்கும். அத்துடன் வேகப்பந்து வீச்சாளர்களுக்கும் களம் சிறந்ததாக உள்ளது.

முதன் முதலாக சர்வதேச போட்டி நடைபெறுவதால் மலைகள் சூழ்ந்த தர்மசாலா நகரம், விழாக் கோலம் பூண்டுள்ளது. மாநில முதல்வர் வீரபத்ர சிங், 67 எம்.எல்.ஏ..க்களும் போட்டியை காண உள்ளனர். சிறப்பு அழைப்பாளராக தலாய் லாமா அழைக்கப்பட்டுள்ளார்.

போட்டியைக் காண பஞ்சாப், அரியானா, டில்லி மற்றும் பிற மாநிலங்களில் இருந்தும் ரசிகர்கள் குவிந்துகொண்டிருக்கின்றனர். இந்த விளையாட்டரங்கு 21,500 இருக்கைகள் கொண்டதாக அமைந்துள்ளது. இப்பிரதேசம் கடல் மட்டத்தில் இருந்து 1500 மீ. உயரம் உள்ளது.

## உள்ளூர் அரையிறுதிப் போட்டியில் பார்சிலோனா



ஸ்பெயினில், உள்ளூர் காற்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் 109ஆவது கோபா டெல் ரே காற்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பார்சிலோனா அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

மாட்ரிட் நகரில் நடந்த காலிறுதிக்கான 2ஆவது சுற்று போட்டியில், மால்கா, பார்சிலோனா அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் பார்சிலோனா அணியின் பெட்ரோ (8ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு மால்கா அணியின் ஜாகுயின் பதிலடி கொடுத்தார். இதனால் முதல் பாதியின் முடிவில், 1-1 என போட்டி சம நிலையில் இருந்தது.


பின் இரண்டாவது பாதியில் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு ஜெரால்டு இனியாஸ்தா மெஸ்சி ஆகியோர் கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தனர். மால்கா அணிக்கு ஷான்டா குரூஸ் ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், பார்சிலோனா அணி 4-2 என வெற்றி பெற்றது.

**100 ஆவது கோல்**

நேற்றைய போட்டியில் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி 80 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இது இந்த ஆண்டு பார்சிலோனா அணியின் (2012-2013, 34 போட்டி) 100ஆவது கோலாக அமைந்தது. இது மெஸ்சியின் 40ஆவது கோல் ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரி-20 ஆஸியை வீழ்த்தியது இலங்கை



அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இலங்கை கிரிக்கெட் அணி விளையாடிவருகிறது.

ஏற்கெனவே நடந்து முடிந்த டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா 3:0 என்று கைப்பற்றியது. ஒரு நாள் தொடர் 2:2 என்று சமனிலையில் முடிந்தது. இந்நிலையில் இரண்டு இருபது-20 போட்டிகள் கொண்ட முதல் போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.


அதன்படி வோர்னர் மற்றும் பின்ஞ் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். பின்ஞ் ஒரு ஓட்டமெடுத்த நிலையில் குலசேகரா பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ஷோன் மார்ஷ் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வோர்னருடன் அணித் தலைவர் பெய்லி ஜோடி சேர்ந்தார். 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெய்லி பெரேரா பந்தில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் வோர்னர் அதிரடியாக விளையாடினார். 4ஆவது விக்கெட்டுக்கு வோர்னருடன் வோஜஸ் ஜோடி சேர்ந்தார். இருவரும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் விளையாடினர்.

இதனால் அவுஸ்திரேலியா 20 ஓவர் முடிவில் மூன்று விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்தது. வோர்னர் 5 பவுண்டரி மூன்று சிக்ஸருடன் 90 ஓட்டங்களும் வோஜஸ் 25 ஓட்டங்களும் எடுத்தனர்.


அடுத்து 138 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 18.3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 139 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



தொடக்க வீரர்களான டில்சான் 16 ஓட்டங்களும் குஷல் பெரேரா 33 ஓட்டங்களும் மத்தியூஸ் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஆட்டநாயகனாக 90 ஓட்டங்கள் குவித்த அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் தெரிவானார்.

2ஆவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி 28ஆம் திகதி மெல்போர்ன் நகரில் நடைபெறுகிறது.



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ், பெண்கள் இரட்டையர் பிரிவு பைனலில், இத்தாலியின் சாரா இரானி, ராபர்டா வின்சி ஜோடி, ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி, கேசே ஜோடியை வீழ்த்தியது. வெற்றிக்கோப்பையை முத்தமிட்டு மகிழ்ந்த இத்தாலி ஜோடி.

## திறப்பு விழா

திருக்கேதீஸ்வர சிறீ சபாரட்ணம் சுவாமிகள் கலாசார மண்டபத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கலாசார நிறுவன செயலாளர் கலாபூஷணம் தம்பு துரைராஜா தலைமையில் இடம்பெறவுள்ளதாக இந்து அரச ஊழியர்கள் இணையம் அறிவித்துள்ளது. (செ-5)

## பல்கலை மாணவி...

மாணவியின் வீட்டில் எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட மாணவி யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் பி.ப 4 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## நிலக்கண்ணி...

விட்டு தலைமறைவாகி உள்ளனர்.

என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் குறித்த இளைஞனின் சடலம் உள்ள இடம் சரியாக அடையாளம் காணப்படவில்லை.

மேற்படி விபத்துச் சம்பவம் இடம் பெற்ற பகுதியில் உள்ள நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாதுள்ளமையினால் அப் பகுதிக்கு செல்வதில் ஆபத்து நிலவுகின்றது.

இதனால் தலைமறைவாகியுள்ள இரு இளைஞர்களையும் அழைத்துவந்து சடலத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (செ-4)

## மகிந்த இந்தியா...

தலைமையிலான அரசும் நாடகமாடி வருகிறது.

தமிழர்களின் கொலைக்குற்றத்திற்கு காரணமான இலங்கை அரசையும் அதனை சார்ந்தவர்களையும் கூண்டில் ஏற்ற வேண்டும்.

இனிமேல் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு வந்தால் நாம் அனைவரும் ஒன்று திரண்டு இந்தியப் பிரதமர் வீட்டை முற்றுகையிட வேண்டும்.

இதுபோலவே இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது தமிழகத்தில் மிகப்பெரிய புரட்சி ஏற்பட்டது.

இதில் மாணவர்களின் பங்கு மிகவும் முக்கியமானவை. அதன்விளைவாக இன்றும் தமிழகத்தில் இந்தி திணிக்கப்படவில்லை. அத்தகைய உறுதியுடன் நாமும் போராட வேண்டும் என வைகோ பேசினார். (செ-4)

## இலங்கை விடயத்தில்..

வற்றில் விட்டுக் கொடுத்துப் போகிறதோ இந்திய அரசு என்று சந்தேகம் கொள்ளக்கூடிய அளவில்தான் செயல்படுகிறது.

உதாரணமாக ஈழத் தமிழர்களைக் கொல்வதற்கு காரணமாக இருந்த இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எந்தப்பகுதியிலும் பயிற்சி அளிக்க கூடாது என்பதுதான் தமிழகத்தில் உணர்வுள்ள தமிழர்களின் கோரிக்கை வேண்டுகோள்.

அந்த வேண்டுகோளை இந்திய அரசிடம் நாம் பலமுறை விடுத்து விளக்கியுள்ளோம். இந்தியாவில் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அளிக்க மாட்டோம் என்று இந்திய அரசின் சார்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்க அவர்களால் இயலவில்லை.

தற்போது இந்தியாவில் சுற்றுப் பயணத்தில் உள்ள இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்தியாவில் இலங்கை இராணுவத்திற்கு அளிக்கப்படும் பயிற்சியை தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் எதிர்ப்பது பற்றிக் கவலையில்லை. அந்த அரசியல்வாதிகள் எழுப்பும் விவகாரங்கள் வெறுப்புணர்வால் ஏற்பட்டவை என்று கூறி யிருக்கிறார்.

அதற்குப் பதிலளித்த மத்திய அமைச்சர் அந்தோனி, தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் தெரிவித்த ஆட்சேபங்கள் வெறுப்புணர்வின் அடிப்படையில் எழுப்பப்பட்டவை என்று நான் கருதவில்லை. இலங்கையில் அரசு சில நடவடிக்கைகளை எடுத்த போதிலும் இப்போதும் தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகள்எதிர்பார்த்த அளவில் இல்லை. ஒருபுறம் தமிழகத்தின் உணர்வுகளையும் நாம் மதித்து நடந்து கொள்வோம். எனவே தமிழகப் பகுதிகளில் இராணுவப் பயிற்சி அளிக்காமல் தவிர்ப்போம். அதேசமயம் மற்ற பகுதிகளில் உள்ள இராணுவ அமைப்புக்களில் இலங்கை வீரர்களுக்குப் பயிற்சி அளிப்போம் என்று கூறியிருக்கிறார்.

2009ஆம் ஆண்டில் போர் முடிந்தவுடன் இளங்குமரன் என்ற பேபி சுப்பிர மணியம், யோகி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, பாலகுமார், இளம்பரிதி ஆகியோருடன் 18ஆயிரம் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

அவர்களுடைய தற்போதைய நிலை என்ன என்று தெரியவில்லை. இது குறித்து யோகியின் மனைவி யோகரத்தினம் யோகி கவலையுடன் கேள்வி எழுப்பியிருந்தார். தற்போது, ஈழக்கவிஞர் புதுவை இரத்தினதுரை எங்குள்ளார் என்று தெரியவில்லை என்றும் ஒரு சிலர் அவர் சாகடிக்கப்பட்டு விட்டார் என்றும் சொல்கின்றனர்.

ஈழப்பிரச்சினையில் ஆர்வத்தோடு களப் பணியாற்றிய கவிஞர் இரத்தினதுரையின் உயிர் கேள்விக்குறியாக உள்ளது என்றெல்லாம் தெரிவித்து இதைப்பற்றி நான் வினா எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். கடந்த இருபதாம் திகதி அன்று நான் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் எழுதிய நீண்டகடிதத்தில், இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வரும் அத்துமீறல் மற்றும் அராஜக நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன் எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ-4)

## குளத்தில் மூழ்கி...

விற்க தந்தை சென்ற சமயம் தனியே மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞனுக்கு வலிப்பு ஏற்படவே அவர் குளத்தினுள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சடலத்தினை நேற்றிரவு 9.15 மணிக்கு நேரில் சென்று பார்வையிட்ட முல்லைத்தீவு நீதவான் சடலத்தினை பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (செ-4,267)

## டில்லி விரைகிறது டெசோ...

அதைத் தொடர்ந்து இலங்கையில் தற்போது நிலவிவரும்சூழ்நிலைகள் மாறி ஈழத் தமிழ் மக்கள் அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு உரிமைகளை மீட்டு சமத்துவம், அமைதி நிறைந்த வாழ்வு மேற்கொள்ள இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தெளிவாக ஐ.நா சபை தீவிர அழுத்தம் தரவேண்டும் என்று வற்புறுத்துவதற்காக, ஐ.நாசபையை வலியுறுத்தும் வகையில் அதன் உறுப்பு நாடுகளை வற்புறுத்த கலைஞர் தலைமையிலான டெசோ அமைப்பு முடிவு செய்துள்ளது.

இதற்காக தி.மு.க பொருளாளர் மு.க ஸ்ராலின் தலைமையில் டெசோ அமைப்பை சார்ந்த திராவிட கழகத்த லைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் தி.மு.க பாராளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் இன்று புதுடில்லி செல்கிறார்கள்.

நாளை 28-ம் மற்றும் நாளை மறுதினம் 29-ம் திகதிகளில் மத்திய வெளியுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் டில்லியில் உள்ள ஐ.நா சபை உறுப்பு நாடுகளான 47 நாடுகளின் தூதர்களையும் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்க இக்குழுவினர் தயாராக இருக்கின்றார்கள்.

ஈழத்தமிழர்கள் அமைதியாக வாழவும், ஈழத்தில் புனர்வாழ்வு நடவடிக்கை களை தீவிரப்படுத்தவும், அரசியல் தீர்வு காணவும் ஜெனிவாவில் முன்மொழியப்பட்டு ஐ.நா. மனித உரிமை ஆணையம் நிறைவேற்றிய தீர்மானத்தை உடனே நடைமுறைப் படுத்தவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ள இருக்கிறார்கள் எனவும் டெசோ அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீள்கட்டுமான பணிக்கு இந்தியா தொடர்ந்து உதவும்

## துணைத் தூதுவர் மகாலிங்கம் தெரிவிப்பு

(யாழ்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வட மாகாணத்தின் மீள்கட்டுமான பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவிசெய்யும் என யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்தியாவின் 64-வது குடியரசு தின நிகழ்வு நேற்று யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் கடந்த 2010ஆம் ஆண்டு திறந்து வைக்கப்படும் போது என்னுடன் மூன்று அதிகாரிகளே பணிபுரிந்தனர்.

ஆனால் தற்போது ஆளணிப் பற்றாக்குறை அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் தூதரகம் இயங்கி வருகிறது. இந்த நிலைக்கு வருவதற்கு 2 வருடங்களுக்கு மேலான காலம் பிடித்தது.

மேலும் வட மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளுக்கும் மீள் கட்டுமானப்பணிகளுக்கும் இந்திய அரசாங்கம் பல வழிகளில் உதவி செய்து வருகின்றது.

இந்திய வீட்டுத்திட்டம், புகையிரதப் பாதை அமைத்தல், காங்கேசன்துறை முகாம் புனரமைத்தல் போன்றனவற்றுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சுமார் 110 மில்லியன் ரூபா செலவில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இது தவிர கடற்தொழிலாளர்களுக்கு படகுகள் ம்றறும் கடற்தொழில் உபகரணங்கள், விவசாயிகளுக்கு தொழில் உபகரணங்கள், வறுமைக்கோட்டின் கீழுள்ள வர்களுக்கு இந்தியன் வங்கியின் ஊடாக கடனுதவி என்பனவும் வழங்கப்பட்டுள்ளது எனவும் எதிர்காலத்தில் பல உதவிகளை வழங்க இந்திய அரசாங்கம் தயாராகவுள்ளது எனவும் தெரி வித்தார்.(செ-6)

## நாளை அமைச்சர...

இதேவேளை, இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது பல புதிய பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் மேற்படி தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (செ-4)

## அமெரிக்க தூது...

ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்காவின் தூதுக்குழுவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய மற்றும் பசுபிக் விவகாரங்கள் பிரிவின் மூன்று வெளியுறவு பிரதிச்செயலாளர்கள் அங்கம் வகித்தனர்.

சந்திப்பு பற்றி கேட்டபோது சம்பந்தன் இலங்கை தமிழர்கள் பிரச்சினை பற்றிய நாடு சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் இன்று வரை இடம்பெற்று வருகின்ற அநீதிகள், துயரங்கள்,அறவழியில் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள அன்று நடத்திய போராட்டங்கள், அது பின்னர் ஆயுதப் போராட்டமாக மாற வேண்டி நிர்ப்பந்தங்கள், முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரும் தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களை பறிகொடுத்து பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமரமுடியாமல் பாரம்பரிய பிரதேசங்களை பெரும்பான்மை இனத்திடம் பறிகொடுக்கும் நிலையில் எல்லோரும் கைவிட்ட நிலையில் அனாதரவாக வாழ்கின்ற அவலநிலை பற்றியெல்லாம் அமெரிக்கத் தூதுக்குழுவின் முன்னால் ஆதாரபூர்வமாக முன்வைத்தோம் என்றார்.

இரத்தினசுருக்கமாகச் சொன்னால் தமிழ் மக்களின் நிலை-சுதந்தரம் பெற்ற நாட் தொடக்கம் இன்று வரையான நிலை பற்றி ஆங்கிலத்தில் A to Z வரை விளக்கினோம் என தெரிவித்தார் சம்பந்தன்.

அமெரிக்கஉயர்மட்டக்குழுவின் பதில் மிகவும்சிறப்பாகஇருந்தது.

ஆனால்விபரமாக தற்போது சொல்ல முடியாது என்று சம்பந்தன் தெரிவித்தார்.

இன்று ஞாயிறு பிற்பகல் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக் குழு ஒன்று தென்னாபிரிக்கா செல்கிறது என்று சம்பந்தன் தெரிவித்தார்.(செ-4)

# டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் பரீட்சை வினாத்தாள்கள்

அரசு தீர்மானம்

பரீட்சை வினாத்தாள் அச்சிடும்போது ஏற்படும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக அவ்வினாத்தாள்களை டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் அச்சிடுவதான புதிய தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் ஜனந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

பரீட்சை வினாத்தாள் அச்சிடுவதில் ஊழியர்களை நீக்குவதற்காகவும் அவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் அச்சிடுவதற்காகவும் இந்த டிஜிற்றல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் கூறினார். இதன்மூலம் ஒரு நபராலேயே பரீட்சை வினாத்தாள் தயாரித்தல், அச்சிடுதல் மற்றும் பொதியிடல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்களை விரைவில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-4)


## நூலகர், நூலக உதவியாளர் தேவை

இணுவில் பொதுநூலகத்தில் பணியாற்றுவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக் கோவையுடன் 03.02.2013 ஞாயிற்றுக்கிழமை. காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

**இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்**

மானிப்பாய் வீதி, இணுவில்.

தொடர்பு: 0212241930

(1583)

## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464

(சி-2252)

## Alpha Omega International நிறுவனத்திற்கு பதவி வெற்றிடம்

- மேற்பார்வையாளர் (Supervisor)
- உதவி முகாமையாளர் (Ass.Manager) முகாமையாளர் (Manager)
- அடிப்படைச் சம்பளம்
- மாதமொன்றுக்கு 30,000 க்கு மேல் சம்பாதிப்பு
- பதவி உயர்வின் போது சம்பள உயர்வு
- முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

தகைமை: தொடர்பு கொள்ளும் போது கூறப்படும்.

30 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தங்குமிடம், மருத்துவம் இலவசம்.

தொடர்புகளுக்கு :0217917074, 0770848889, 0772835524

(சி-2244)

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் நந்தன வருடம் தை மாதம் 14 ஆம் நாள் (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை தைப்பூச தினமாகிய இன்று காலை 9 மணி - 11 மணிவரையுள்ள சுபவேளையில்

**RK Ceramic**

**ஆர்கே செரமிக்**

(கச்சாய் வீதி -சாவகச்சேரி)

எனும் புதுக்கடையினை ஆரம்பிக்கவுள்ளதால் அன்புடன் உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



(1585)

கச்சாய் வீதி, சாவகச்சேரி.
0776660699, 0213207525

தலைமை நிறுவனம்
ஆர்கே செரமிக்
122, பிரதான வீதி, நெல்லியடி.

இங்ஙனம்: தங்கள் நல்வரவை நாடும்
ஆர்.ஜெகன் (உரிமையாளர்)
மற்றும் R.K. குடும்பம்

## ஆங்கிலப் பாடநெறிகள்

- ★ Spoken English
- ★ Advanced Diploma
- ★ English Teacher Training
- ★ Basic English
- ★ IELTS

ஆகிய பாடநெறிகள் Colombo ஆசிரியர் குழாமால் தனித்தனியாகவோ, குழுக்களாகவோ உத்தரவாதத்துடன் இலகுவான மொழிநடைமுறையில் நடத்தப்படுகின்றது.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**IISEEES NALLUR CAMPUS** 021 222 4728, 0777 444 225

762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(சி-2255)

உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் உடனடி தொழில்வாய்ப்பையும் உயர் வருமானத்தையும் தரும் தொழில்நுட்பப் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் உடனடியாக ஆரம்பம்.

(இலங்கையின் தலைசிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில்)

- ★ கையடக்கத் தொலைபேசி திருத்துதல்
- ★ கணனி திருத்துதல்
- ★ வீட்டு மின் இணைப்பு

Mobile Phone Repairing, Electrical Wiring, Computer Repairing புதிய பிரிவுகளுக்கு முதல் 10 பேருக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்.

எமது கற்கைநெறிகளை நிறைவு செய்த பல மாணவர்கள் பல்வேறுபட்ட நிறுவனங்களில் தொழில் புரிகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

**IISEEES NALLUR CAMPUS** 021 222 4728, 0777 444 225

762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(சி-2254)

## பணியாட்கள் தேவை

**குமரகுரு மல்ரிசொப்**

**யாழ். கிளைக்கான பணியாட்கள் தேவை.**

வெற்றிடங்கள்

1. விற்பனைப் பகுதி முகாமையாளர்- ஆண்
   தகுதி: குறைந்தது 5 வருடம் புடவை வியாபார அனுபவம்
2. கணக்காளர்: இருபாலாரும்
   தகுதி: குறைந்தது 2 வருட அனுபவம். கணனி M.S.Office, க.பொ.த உயர்தரம் வர்த்தகப் பிரிவில் கற்றிருத்தல்.
3. காசாளர்
   தகுதி: 2வருட அனுபவம், கணனி M.S.Office, க.பொ.த சா.தரத்தில் கணிதபாட சித்தி.
4. விற்பனையாளர்கள்: இருபாலாரும் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் யாவும் 05.02.2012 வரை ஏற்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
குமரகுரு மல்ரிசொப்,
A-9 வீதி, கிளிநொச்சி.

(சி-2249)

## தேவை

கட்டிட நிர்மாணத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகள்

**Electrician, Plumber, painter**

20-50 வயதினர் (உணவு இலவசம்)

சம்பளம் தொழில் அடிப்படையில் 18,000-40,000 வரை

தொடர்பு: **"SAKYA"**

103, Station Road, Vavuviya.

0775561883

(சி-2245)

வவுனியா நகரில்..........

## Diploma in Mass Media

**அறிவிப்பாளர் பயிற்சி**

(2-வது பிரிவு 14 மாணவர்களுடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து 3-வது பிரிவு ஆரம்பம்)

10-02-2013 யாழில்
11-02-2013 வவுனியாவில்

வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா! இதோ.....

வட மாகாணத்தில் (திறமையின்தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலை சிறந்த அறிவிப்பாளராக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ் மற்றும் வவுனியா மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சிநெறி

**(Diploma in Mass Media)**

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல.

(பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் சந்தர்ப்பம்)

இலங்கையிலும், சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக வேண்டுமா?...

தயாராகுங்கள்... பதிவுகளுக்கு விரையுங்கள்..

வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College
No.26, Station Road, vavuniya.
T.P:0777 929475, 0242226649

கிளிநொச்சி, யாழ்.மாணவர்கள்
IISEEES NALLUR CAMPUS
No.72, Pointpedro Road, Nallur, Jaffna.
T.P:0777929475 , 0212224728

குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகின்றனர்.

(1581)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org